# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



தட்சிணாமூர்த்தி

மாலை 5] சோபகிருது சித்திரை - மே 1963 [மணி 8

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவர் கோயிலுக்கு மாட்சிமை மிக்க சென்னைக் கவர்னர் **திருமிகு. விஷ்ணுராம் மேதி** அவர்கள் வருகை தந்து வழிபடுதல்

## பொருள் அடக்கம்


1. ஆலயங்களில் அரும்பணிகள்
2. தட்சிணாமூர்த்தம்
3. திருவண்ணாமலை
4. சிறு பிழையும் பெருவிளக்கமும்
5. சிவஞானபோதம்
6. நற்கலையை வெறுங்கலை மறைக்கிறதா
7. வரதன் வடிவழகு
8. காந்தாரப்பண்ணின் இருவகைகள்
9. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
10. ஸ்ரீ காஞ்சீ ஹஸ்திகிரிவைபவம்
11. திருஞானசம்பந்தர்
12. செய்திகள்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** ★ **தனி இதழ் விலை ரூ. ஒன்று.**


## சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

சந்தாப்பணம் நிலுவையுள்ள சந்தாதாரர்கள், தம் நிலுவைச் சந்தாப் பணத்தையும், 1963–64 புதிய ஆண்டுக்கான சந்தாப் பணத்தையும், விரைவில் அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையாளர் அலுவலகங்களில் செலுத்திவிடுமாறு, நினைவூட்டிக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றார்கள்.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 5] சோபகிருது சித்திரை - மே 1963 [மணி 8

# ஆலயங்களில் அரும்பணிகள்.

அறநிலையத்துறை அமைச்சர்
**திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள், B.A., B.L.**

இந்தியா சமயச்செல்வத்தில் சிறந்த நாடு. இந்நாட்டில் இந்து மதம் மிகப் புராதனமானது. இம்மதம் எப்போது தோன்றியது என்பதற்குக் காலக் கணக்கு இல்லை. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே வேதம், உபநிஷத் ஆகியவைகளோடு வளர்ந்தது. அன்பு அருள் ஆன்மநேயம் மூலம் உயர்ந்தமனப்பரிபக்குவங்களுக்கு இச்சமயம் ஊற்றுக் கண்ணாக விளங்கி வந்திருக்கிறது.

சமயநெறி உணர்ச்சிக்குப் புறச் சின்னங்களாக விளங்குபவை கோயில்கள். நமது நாட்டில் கோயில் இல்லாத ஊர் இல்லை. வானளாவிய கோபுரங்கள், நீண்ட பெரிய பிராகாரங்கள் கொண்டு நெடிது உயர்ந்து விளங்கும் பல ஆலயங்கள், இந்தநாட்டின் பாரம்பர்யமான சமயச் சிறப்புக்குச் சாஸனங்களாக விளங்கி வருகின்றன. அன்று மன்னர்கள் மாபெரும் ஆலயங்களை நிர்மாணித்தனர். அவற்றைப் பராமரிக்கும் திருப்பணியைத் தாங்களே மேற்கொண்டனர். ஆலய நிர்வாகம் அரசரின் கடமைகளில் ஒன்றாக விளங்கி வந்தது.

## பிரிட்டிஷ் ஆட்சியில்

பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்டதையடுத்து இந்த நாடு பலவிதமான நலிவுகளுக்கு உள்ளாகியது. சமயத்துறையும் இதற்கு விலக்கல்ல. அறநிலையச் சொத்துக்கள் விஷயத்தில் அரசினரின் கண்காணிப்புக்குறைந்தது. இதன் விளைவாக அறநிலையங்களில் நிர்வாகச் சீர்கேடுகளும் ஊழல்களும் ஏற்பட்டன. நிலைமையைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1817-ம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் ஆலய நிர்வாகம் சம்பந்தமான ரெகுலேஷன் சட்டம் இயற்றப்பட்டது. ஆலய நிர்வாகத்தை அரசினரின் ஒரு திருப்பணியாகத் தொடர்ந்து நடத்திவர அச்சட்டம் வகை செய்தது. ஆலயங்கள், அறநிலையங்கள் நிர்வாகம் ரெவினியூ போர்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த அறநிலையங்களின் நிர்வாகத்தில் அக்கறை காட்டுவது ஏன் என்று சிலர் ஆட்சேபம் கிளப்பினர். ஏற்கனவே இதில் போதிய சிரத்தை இல்லாமல்

'தினமணி' ஆசிரியர் அவர்களின் இசைவுபெற்றுப் புதுவருஷப் பிறப்பு (14-4-63) சிறப்பு இதழினின்று இக்கட்டுரை எடுக்கப்பெற்றது.

இருந்த அவர்கள், வேறு சில காரணங்களை யும் முன்னிட்டு 1842ல் அறநிலையக் கண் காணிப்புப் பணியை அடியோடு நிறுத்திக் கொண்டனர். 1863 வரை கண்காணிப்புஎதுவு மின்றி இந்த அறநிலையங்கள் இயங்கின. அதன் விளைவாக நிர்வாகச் சீர்கேடுகள் அதிக ரித்தன. அரசாங்கம் இனியும் வாளா இருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே, 1863ல் ஒரு சட்டம் இயற்றி, அறநிலையங்களின் சொத்துப் பராமரிப்புப் பணியை அதிகாரச் சார்பற்றவர்கள் கொண்ட கமிட்டிகளிடம் ஒப் படைத்தது. ஆனால் அக்கமிட்டியின் அதிகார வரம்பு தெளிவாக நிர்ணயிக்கப்படவில்லை. நிர் வாகம் நடத்த நிதிவசதியும் இல்லை. இந்தக் குறைகளை அகற்றும் முயற்சியில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மாகாணத்தில் இப்படி சட்டங்கள் இயற்றப் பட்ட அதேசமயத்தில், மத்திய சட்ட சபை யிலும் இவ்வகையில் முயற்சிகள் மேற் கொள் ளப்பட்டன. 1897-ம் ஆண்டில் அனந்தாச்சாரி மசோதா, 1903-ம் ஆண்டில் ஸ்ரீனிவாசராவ் மசோதா, 1908-ம் ஆண்டில் ராஷ்பிஹாரி கோஷ் மசோதா ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். ஆனால் இந்த மசோதாக்களை நிறைவேற்றிப் பயன் காண முடியவில்லை. இந்து அற நிலையங்கள்மீது அரசாங்கத்துக்குத் திட்ட வட்டமான கண்காணிப்பு அதிகாரம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்று வந்தது.

## அறநிலைய போர்டு உதயம்

1919-ம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தம் மூலம் சட்டசபை ஜனநாயகச்சாயலோடு விரிவு படுத்தப்பட்டது. அதையடுத்து 1922-ம் ஆண்டில் சென்னை முதலமைச்சர் பனகல் அரசர் ஒரு மசோதா கொண்டு வந்தார். 1925-ல் அந்த மசோதா சட்டமாகியது. பின்பு இச்சட்ட ஷரத்துக்களை உள்ளடக்கிய 1927-ம் ஆண்டுச் சட்டம் வந்தது. இச்சட்டப்படி சில குறிப்பிட்ட அதிகாரங்கள் கொண்ட கமிஷனர் போர்டு நிறுவப்பட்டது. அற நிலையங்கள் வரவு செலவுக்கணக்கு வைக்கவேண்டும் என் பது பற்றி அதில் திட்டம் செய்யப்பட்டது. 1925-ம் ஆண்டின் சட்டத்துக்குப்பின் 1954 வரை பத்துத் திருத்தச் சட்டங்கள் வந்தன. ஆலயப் பராமரிப்புக்காக, சம்பளம் பெறும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வகை செய்யப் பட்டது.

"புதிய அறநிலையப் பாதுகாப்புப் போர்டு தனது நிர்வாக இயந்திரத்தைத் திறமையான முறையில் அமைத்துக் கொள்வதற்கு உதவி செய்வதற்காக" 1940-ல் ஸ்ரீ ஆர்.வி. கிருஷ்ண அய்யர் நியமிக்கப்பட்டார். அறநிலையங்களின் பாதுகாப்பை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்றும், அரசாங்க இலாகாவின் மூலம் அவை நிர்வகிக்கப்படலாம் என்றும் அவர்தம் அறிக்கையில் கூறினார். பலகால மாக மக்கள் மனதில் முகிழ்த்துவந்த எண்ணம் அவர் அறிக்கை மூலம் மேலும் வலுப்படுத்தப் பட்டது. இந்த அற நிலையப் பாதுகாப்புச் சட்ட அமுல் வேலைகளைப் பரிசீலிக்க 1942ல் அதிகாரச் சார்பற்றவர்கள் கமிட்டி ஒன்று நிய மிக்கப்பட்டது. அக்கமிட்டியின் சிபார்சுகளின் பேரில் 1944-ம் ஆண்டின் சட்டமும், 1946-ம் ஆண்டின் சட்டமும் இயற்றப்பட்டன.

1946-ம் ஆண்டின் சட்டம் பல முக்கிய மான அபிவிருத்திக்கு வகை செய்தது. ஆல யங்கள், அறநிலையங்கள், மடங்களின் கணக்கு களைத் தணிக்கை செய்யவும் குறைகளை நிவர்த் திப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வும், அஜாக்கிரதையால் அல்லது ஒழுங்கீனத் தால் அறநிலையச் சொத்துக்கு நஷ்டம் ஏற்படுத் தியிருந்தால் டிரஸ்டிகளிடமிருந்து தொகை களைத் திரும்பப்பெறவும் அச்சட்டம் வகைசெய் தது. அறநிலையங்களின் சொத்துக்களைப் பாது காப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் இது மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

அறநிலையப் பாதுகாப்புப் போர்டுக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லாமல் இருந்த தாலும், சில ஒழுங்கீனங்களைத் தடுக்கத் திட்ட வட்டமான நடவடிக்கை எடுக்கும் முறையிலும் 1951-ம் ஆண்டுச்சட்டம் இயற்றப்பட்டது. 1954, 1956 ஆண்டுகளில் அதற்குத் திருத்தங் கள் மேற்கொள்ளப்பட்டன. அறநிலையப்பாது காப்புப்பிரச்சினைகளில் நீதி மன்றங்கள் எடுத் துக்காட்டிய குறைபாடுகளை நீக்கும் வகையில் 1959-ம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

## பழனி தேவஸ்தானம்

இந்தச் சட்டங்களின் விளைவாகவும், முனைப்பான முயற்சிகளின் பயனாகவும் ஆல யங்களின், அறநிலையங்களின் நிர்வாகத்தில் செம்மையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1925-ம் ஆண்டுச்சட்டம் இயற்றப்பட்ட சூழ

யத்தில் மதுரை மாவட்டத்தில் கீர்த்தி மிகுந்த ஸ்ரீ பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான நிர்வாகம் சீர்கெட்டுக்கிடந்தது. மானேஜருக்கும், போர்டுக்குமிடையே ஓயாத தகராறு நிலவி வந்தது. போர்டு தலையிட்டு, நிர்வாகத்தைச் சீர்ப்படுத்த முனைந்தது. இன்று பழனிதேவஸ்தானம் தமிழ்நாட்டு ஆலயங்களில் தலைசிறந்து விளங்குகிறது. இதன் வருமானம் பெருகி, பல அறப்பணிகளுக்குப் பயன்பட்டு வருகிறது. ஆந்திர மாநிலத்தில் திருப்பதி தேவஸ்தானம் திரண்ட தன் வசதிகளைக் கொண்டு யாத்ரீகர்களுக்குப் பல்வேறு சௌகரியங்களையும், மக்களுக்குப் பல நன்மைகளையும் செய்வது போலவே, பழனி தேவஸ்தானமும் பல சீரிய திட்டங்களை நடத்தி வருகின்றது. பழனி ஆண்டவர் கீழ்த் திசைக் கலைக் கல்லூரி 1960-61-ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு மூன்றுண்டு பி.ஏ. பட்டப் படிப்பு அதில் அளிக்கப்படுகிறது. சமய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதில் இது மிகச் சீரிய ஒரு நடவடிக்கையாகும். தேவஸ்தானம் இக்கல்லூரிக்காக ஐந்தரை லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்துள்ளது. இக்கல்லூரியில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதியும் கட்டப்பட்டுள்ளது.

நாதசுரம், தமிழ் நாட்டுக்கே உரிய தனிச் சிறப்பான இசைச் செல்வம். ஆலயத் திருப்பணிகள் சம்பந்தமான அருங்கலைகளைப் பாதுகாக்கும் வகையில், தேவஸ்தானத்தின் ஆதரவில் நாதசுரப் பயிற்சி நிலையம் ஒன்று நடத்தப்படுகிறது. தமிழில் பல்வேறு ஆகமங்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் யாத்ரீகர்களின் வசதிக்காக நவீன வசதிகளுடன் 60 அறைகள் கொண்ட சத்திரம் கட்டப்பட்டிருக்கிறது. 100 அறைகளுடன் கூடிய மற்றொரு சத்திரம் 14 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இங்கு அனாதைகளுக்காக ஒரு விடுதி நடத்தப்பட்டு வருகிறது. பழனி தேவஸ்தானத்தின் வருமானம் ஆண்டுக்குச் சுமார்பத்து லட்சம் ரூபாய் ஆகும். போதிய வருமானம் இல்லாத கோவில்களைப் புதுப்பிப்பதற்காக ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான ரூபாய் இதிலிருந்து தரப்படுகிறது.

## திருச்செந்தூர்

திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ் வாய்ந்த திருச்செந்தூர், முருகப் பெருமானுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்று ஆகும். கிழக்குக் கடற்கரையிலே சதா அலைகள் வந்து தவழும் இயற்கை அழகுடன் இக்கோயில் விளங்குகிறது. இலாகா நிர்வாகம் மேற்கொள்ளுவதற்கு முன்பு, இந்த தேவஸ்தானம் சொத்துப் படைத்திருந்தும், போதிய பண வசதியின்றி இருந்தது. இன்று நிதி நிலைமை ஸ்திரப்பட்டு லட்சக்கணக்கில் உள்ள பணம், உரிய நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 4 லட்சம் செலவில் 40 அறைகளுடன் கூடிய சத்திரம் கட்டப்பட்டது. ரூ. 50,000 செலவில் மேலும் அறைகளும், மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன. இப்போது ரூ. 2 லட்சம் செலவில் சத்திரத்தில் மாடியில் அறைகள் கட்டப்படுகின்றன, அர்ச்சகர்களுக்கும் இதர அலுவலர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அனாதை விடுதி, ஆகம பாடசாலை ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆலயத்தின் வருமானம் சுமார் 7 லட்சம் ரூபாய் ஆகும். இதர கோயில்களைப் புதுப்பிக்க இந்த ஆலயத்தின் உபரி நிதியிலிருந்தும் உதவி அளிக்கப்படுகிறது.

## மற்ற தேவஸ்தானங்கள்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், பண்டைப் பெருமையும் சிற்பக் கலைச் சிறப்பும் கொண்ட கோயிலாகும். இந்த தேவஸ்தானத்தின் ஆதரவில் பெண்களுக்காகக் காந்திமதி அம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி நடத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பப் பள்ளி, அனாதை விடுதி ஆகியவையும் நடத்தப்பட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீ பசுபதீஸ்வரர் கோயில் 677 ஏக்கர் நன்செய் நிலங்களும், 236 புன்செய் நிலங்களும் உள்ள கோயிலாகும். பரம்பரை டிரஸ்டிகள் இதனை நிர்வகித்து வந்தனர். நிலங்களைச் சாகுபடி குத்தகை எடுக்க வேறு யாரும் முன் வரவில்லை என்ற காரணம் காட்டி, இந்த டிரஸ்டிகளே நிலத்தைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டு சாகுபடி செய்து வந்தனர். நிர்வாகம் சரியில்லாமல் இருந்தது. பின்பு இலாகா சட்ட ஷரத்துக்களை அமுலாக்கி, நிர்வாகப் பணிகளை, நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைத்தது. இப்பொழுது வருமானம் அதிகரித்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75,000 வருமானம் வருகின்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார் பாளையம் வட்டம் ஸ்ரீகலியுக வரதராஜ பெருமாள் கோயிலில் திருவிழாச் சமயங்களில் நல்ல தணிக்கை முறை காரணமாக அந்தக் கோயி லின் வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது. யாத்ரீகர்களுக்கான ஓய்வு விடுதி அமைக்கப் பட்டுள்ளது. இதன் வருமானத்திலிருந்து பெண்களுக்காக உயர்நிலைப்பள்ளி ஒன்றும் நடத்தப் படுகிறது.

## கண்டிப்பான நிர்வாகத்தின் பலன்

முக்கியமான திருவிழாச் சமயங்களில் உண் டியல் பாதுகாப்பு மேற்பார்வை ஆகியவை களுக்காக இலாகா விசேஷ அலுவலர்களை, அனுப்பிவைக்கிறது. அறநிலையங்களின் சொத் துக்கள், நிலங்கள் முதலியவைகளைக் குத்த கைக்கு விடும்போது, ஏலம் எடுக்க வருவோர் தங்களுக்குள் உடன்பாடு செய்து கொண்டு மோசடியாக நடக்காமல் தடுப்பதற்காகவும், ஆலய வருமான வழிகளைப் பாதுகாக்கவும் இலாகா அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர். இந்த ஏற்பாடுகள் காரணமாகவும், கண்டிப் பான நடவடிக்கைகளின் விளைவாகவும், அற நிலையங்களின் சொத்துக்களிலிருந்து வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது. செலவினங் களைக் குறைப்பதிலும் இலாகா தக்க நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது, அதிகமான சங்கடங்கள் எதுவும் ஏற்படுத்தாமல், சாதாரண முறையில் ஒழுங்கு முறைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்ததன் மூலம் ரூ. 78 லட்சத்துக்கு மேல் மிச்சமாகிறது. கணக்குத் தணிக்கைக்கும் நகைகள் இதர விலை மதிப்பு மிக்க பொருள் களின் தணிக்கை, பாதுகாப்பு ஆகியவை களுக்கும் செவ்வையான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

## சமயச் சூழ்நிலை போஷிப்பு

நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதோடு ஆலயப்பணி முடிந்து விடுவதில்லை. மக்கள் மனத்தில் அன்பும், இறை அருள் நாட்டமும் வளரும்படியாகச் சமயச் சூழ்நிலைகளை நல்ல முறையில் வளர்ப்பது முக்கியம். புறக்கோலங் களில் தூய்மை விளங்குவதோடு அகத்திலும் ஒளி பரவ வேண்டும். இதை யொட்டியே பல் வேறு கோயில்களில் திருவிழாக் காலங்களிலும், மற்ற சமயங்களிலும், சமயச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வழிகாட்டி நூல் களும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. முக்கிய விழா நாட்களில் திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பக்திப்பாடல்கள் பாடப்படுகின்றன. ஓதுவார்கள், வேத பாராயணகர்கள் ஆகி யோரை நியமிக்க ஊக்கமளிக்கப்படுகிறது.

பழங்கோயில்கள் நமது பண்டைப் பெரு வாழ்வின் சின்னங்கள் மட்டுமல்ல. சிற்பம், சித்திரம் முதலியன நிறைந்த கலைச் செல்வங் களாகவும் விளங்குகின்றன. அந்தச் செல்வங் களைப் பாதுகாப்பதற்காகச் சாத்தியமான இடங் களில் எல்லாம் பொது மக்களின் ஒத்துழைப் போடு பெரும் அளவில் புதுப்பிக்கும் வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. சென்ற பத்து ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடத்தப்பட் டுள்ளது. சென்ற ஐந்து ஆண்டுகளில் பழுது பார்க்கும் வகையில் ரூ. 13 லட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டது. 222 ஆலயங்களைப் புதுப் பிக்க இப்பணம் செலவிடப்பட்டது.

## ஆகமப் பயிற்சி.

பல்வேறு ஆலயங்களில் விரும்பினால் தமி ழில் அர்ச்சனை செய்ய வழிசெய்யப்பட்டிருக்கி றது. குருக்கள், அர்ச்சகர் ஆகியோர் ஆகமங் களில் நல்ல பயிற்சி உள்ளவர்களாகவும், வழி பாடு நியதிகளை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதால், ஆகமங்களின் பயிற்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பேட்டைவாய்த்தலை, திருவெண்காடு, நாச்சி யார் கோயில், சென்னை ஆகிய இடங்களில் சைவ, வைஷ்ணவ ஆகமங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எட்டு பெரிய நிறுவனங்களின் ஒருங்கிணைப் பான முயற்சியால் "கோயில்களும் திருவிழாக் களும்" என்ற சினிமாப்படம் தயாரிக்கப்பட்டுள் ளது. வெளிநாடுகளிலும் இதைக் காண்பிக்க ஏற்பாடு செய்யப்படும். கோயில்கள், அற நிலையங்கள் குறித்த தகவல்களை மக்களுக்கு எடுத்துரைக்க, 1958-ம் ஆண்டிலிருந்து "திருக் கோயில்" என்ற மாதப் பத்திரிகை நடத்தப் பட்டு வருகிறது. 188 மடங்கள், 7613 கோயில்கள் உள்பட 8670 நிறுவனங்கள் அற நிலையப் பாதுகாப்புத் துறையின் கண்காணிப் பில் இருக்கின்றன.

இந்து சமூகத்தில் தீண்டாமை ஒரு களங்கமாக வெகு காலம் நீடித்து வந்தது. அந்தக் களங்கத்தைப் போக்கும் முயற்சியில் முதல் நடவடிக்கையாக, காந்தியடிகள் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை வற்புறுத்தி வந்தார். ஆண்டவன் திருக்கோயிலில் சமத்துவம், இதர துறைகளில் சமத்துவத்துக்கு முன்னோடியாக விளங்கும் என்று, அவர் தீர்க்க தரிசனத்தோடு கருதினார். சமத்துவ உணர்ச்சி இன்று வாகை சூடி வளர்கின்றது. சமூக மறுமலர்ச்சியின் காரணமாக இன்று பல கோயில்களில் ஹரிஜனங்கள் டிரஸ்டிகளாக இருக்கின்றனர்.

## ஒளி பரப்பும் ஒளி

இந்திய நாட்டில் இன்று பல்வேறு துறைகளிலும் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. இத்தகைய நிலைமையில் இந்த ஞான பூமியில் சமய உணர்ச்சியும் ஆன்ம நேயமும் மறுமலர்ச்சி பெற்றுப் பொலிவுடன் வளர்வதில் வியப்பில்லை. மதுரை மீனாட்சியம்மன் ஆலய கோபுரம் பொது மக்களின் மனமுவந்த ஒத்துழைப்பினால் இன்று ஏராளமான பொருட் செலவில் புதுப்பிக்கப்படும் அரும்பணி நடைபெற்று வருகின்றது. இத்தகைய திருப்பணிகள் மூலம் நமது சமயத்தோடு, கலைகள் கலாச்சாரம் ஆகியனவும் சிறக்க வழி ஏற்படுகின்றது.

இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டமும், அதை யொட்டிய நடவடிக்கைகளும் மூன்று வகைகளில் முக்கிய பலன்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆலய நிர்வாகத்தில் இருந்து வந்த ஊழல்களும் சீர்கேடுகளும் ஒழிக்கப்பட்டன. கோயில்கள் அபிவிருத்தியும், திருப்பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஒளியிலிருந்து ஒளி பரவுவதுபோல, இந்த அறநிலையங்கள், பல்வேறு அறச் செயல்களுக்கு ஊற்றாக உதவுகின்றன. அன்பும், அருளும், இறை வழிபாடு உணர்ச்சியும் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் வளர்ந்து வருகின்றன.

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

**திருக்குற்றாலம் :** திருக்குற்றாலநாதசாமி கோவிலில் சித்திரை விசுத்திருவிழா
**திரு அம்பர் :** ஸ்ரீ சட்டநாதசாமி கோவிலில் பிரம்மஹோத்சவம்
**கோயில்பட்டி :** ஸ்ரீ பூவண நாதசாமி தேவஸ்தானத்தில் பங்குனி பிரம்மோற்சவம்
**மருதமலை :** ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோவிலில் பங்குனி உத்திரத்திருவிழா
**கும்பகோணம் :** ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் தெப்பத் திருவிழா
**வடுவூர் :** ஸ்ரீ கைலாசநாதசாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர உற்சவம்
**தேரழுந்தூர் :** ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தானத்தில் "கம்பர்விழா"
**பழனி :** ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தில் பங்குனிப் பெருந்திருவிழா
**அம்பாசமுத்திரம் :** ஸ்ரீ காசிபநாதர் மரகதாம்பாள் கோயிலில் பங்குனித்திருவிழா
**இராமேஸ்வரம் :** ஸ்ரீ ராமநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் கோடி அர்ச்சனை
**திருப்பாலைவனம் :** ஸ்ரீ பாலீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர மகோற்சவம்
**பாபவிநாசம் :** ஸ்ரீ பாபவிநாசஸ்வாமி தேவஸ்தானத்தில் சித்திரை விசுஉத்சவம்
**அழகர்கோவில் :** ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானத்தில் திருக்கல்யாண மகோத்சவம்
**குன்றக்குடி :** ஸ்ரீ சண்முகநாதப்பெருமான் கோவிலில் பங்குனி உத்திரத்திருவிழா
**பட்டுக்கோட்டை :** ஸ்ரீ நாடியம்மன் கோவிலில் ப்ரம்மோற்சவம்
**திருப்பரங்குன்றம் :** ஸ்ரீ ஆண்டவர் சுப்ரமணியஸ்வாமி கோவிலில் பங்குனிப் பிரம்மோற்சவம்
**ஆண்டார் குப்பம் :** ஸ்ரீ பாலசுப்ரமணியக்கடவுள் கோவிலில் பிரம்மோற்சவம்
**மேலவீரராகவபுரம் :** ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவிலில் சித்திரைப் பிரம்மோற்சவம்
**உதகை :** ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானத்தில் "திருத்தேர்" திருவிழா
**குமாரவயலூர் :** ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி கோயிலில் "வள்ளித்திருக்கல்யாணம்"
**வீரபாண்டி :** ஸ்ரீமத் கௌமாரியம்மன்கோவிலில் சித்திரை மகோற்சவம்
**கருவலூர் :** ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானத்தில் இரதோற்சவத் திருவிழா
**கோடாரிகருப்பூர் :** ஸ்ரீராமநாராயண பெருமாள் கோயிலில் ஸ்ரீராமநவமி உத்சவம்
**சிக்கல் :** ஸ்ரீ நவநீதேஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் மஹாகும்பாபிஷேகம்
**வடபழனி :** ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோயிலில் தெப்பத்திருவிழா

# ★ தட்சிணு மூர்த்தம் ★



தட்சிணு மூர்த்தி

**முன்னுரை :**

சிவபிரானின் மூர்த்தங்கள் **போக மூர்த்தம், யோக மூர்த்தம், வேக மூர்த்தம்** எனப் பலவகைப் படும். இறைவன் தான் போகியாய்த் திகழ்ந்து, உயிர்களுக்குப்போகத்தைப்புணர்த்துகின்ருன். யோகியாக அமர்ந்து, உயிர்களுக்கு யோக முத்தியை உதவுகின்ருன். வேகியாய் விளங்கி உயிர்கள் செய்த வினைகளை அழித்தருள்கின் ருன். இதனை,

> **"போகியாய் இருந்து யிர்க்குப்**
> **போகத்தைப் புரிதல் ஓரார்!**
> **யோகியாய் யோக முத்தி**
> **உதவுதல் அதுவும் ஓரார்!**
> **வேகியா னற்போற் செய்த**
> **வினையினை வீட்டல் ஓரார்!**
> **ஊகியா மூடர் எல்லாம்**
> **உம்பரின் ஒருவன் என்பார்!"**

என வரும் **சிவஞான சித்தியார்** செய்யுளால், **அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்** விளக்கு கின்ருர். இறைவனின் போகமூர்த்தம் உமா மகேசுவர மூர்த்தம். யோக மூர்த்தம் தட்சிணு மூர்த்தி வடிவம். வேக மூர்த்தம் காமாரி காலாரி திரிபுராரி முதலியன ஆகும்.

**தென்முகக் கடவுள் :**

தட்சிணு மூர்த்தி யோகத்திற்கும் ஞானத் திற்கும் உரிய கடவுள் ஆவர். அவர் தட்சிணம் எனப்படும் தெற்குத்திசை நோக்கி வீற்றிருந் தருள்தலின், அவருக்குத் தட்சிணு மூர்த்தி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தட்சிணு மூர்த்தியைத் தமிழில் **தென்முகக் கடவுள்** என வழங்குவர்.

**ஞான மூர்த்தி :**

**தட்சிணம்** என்னும் சொல்லுக்கு **ஞானம்** என்றும் ஒரு பொருள் உண்டு. ஞானத்தின் திருவுருவாய் அமர்ந்து, தன்னை வழிபடுவோர் கட்கெல்லாம் ஞானத்தை வழங்கியருள்பவராத லின், அவருக்குத் தட்சிணுமூர்த்தி எனப் பெயர் போந்ததெனினுமாம். ஞானமானது தட்சிணு மூர்த்தியின் முன்னிலையில் அவரையே நோக்கி நின்றுகொண்டிருக்கிற தென்றும் கூறுவர். எனவே தட்சிணுமூர்த்தியை 'ஞானமூர்த்தி' எனக் கூறலாம்.

**சான்ருேர்களின் தவநெறித் தெய்வம்:**

தட்சிணுமூர்த்தியே எல்லாக் கலைகளுக்கும் நூல்களுக்கும் தலைவராவர். ஆதலின் சங்க ராசாரியர் முதலிய சான்ருேர்கள் பலரும் தட்சிணுமூர்த்தியைப் போற்றித் துதித்துப் புகழ்ந்துள்ளனர். சைவ சித்தாந்தத் தனிப் பெரு ஞாயிருகிய ஆசிரியர் மெய்கண்ட தேவர்,

> **"கல்லால் நிழல்மலை**
> **வில்லார் அருளிய**
> **பொல்லார் இணைமலர்**
> **நல்லார் புனைவரே"**

எனத் தமிழது சிவஞான போதச் செந்தமிழ்த் தத்துவ நூலின் தொடக்கத்தில், **கல்லால் நிழல் மலைவு இல்லார்** எனக் குறிப்பிட்டுத் தட்சிணு மூர்த்தியினையே வணங்கிப் பணிந்துள்ளார். வேதாந்த சித்தாந்த சமரச வித்தக ஞானச் செல்வர் ஆகிய **தாயுமான சுவாமிகள்** தட்சிணு மூர்த்தியையே உபாசனு மூர்த்தியாகக்கொண்டு வழிபட்டார்.

" சிரகிரி விளங்க வரு தட்
சிணு மூர்த்தியே
சின்ம யானந்த குருவே "

என வரும் அவர்தம் பாடலை அன்பர்கள் அனைவரும் அறிவர். எனவே, சான்றோர்கள் போற்றும் தவநெறித் தெய்வம் எனக் குறிப்பிடலாம்.

## திருவுருவ அமைப்புத் திறம் :

கோயில்களிற் கருவறையின் தென்புறச் சுவரில் ஒரு மாடத்தில் தட்சிணுமூர்த்தி எழுந்தருளி யிருப்பார். கல்லால மர நிழலில் தனிமையான சூழலில் புலித்தோலின் மேல் அவர் அமர்ந்திருப்பார். சில சிற்பங்களில் தாமரை மலர் மீதும் (பத்மாசனம்) அவர் அமர்ந்திருப்பதுண்டு. அவர் தம் வலக்கால் ஆசனத்தின் கீழ்த் தொங்கவிடப் பட்டிருக்கும். இடக்கால் வளைந்து வலத் தொடையின் மீது குறுக்காக ஊன்றி நிற்கும். இந்நிலை **வீராசனம்** எனப்படும். சில சிற்பங்களில் **உத்குடிகாசனம்** முதலிய நிலையிலும் அவர் விளங்குவார். அவர் தம் திருவடியின் கீழ் முயலகன் (அபஸ்மார புருஷன்) கிடப்பான். திருவடியானது அவனை அழுத்திக் கொண்டோ, அழுத்தாமலோ இருக்கும்.

தட்சிணுமூர்த்தி முக்கண்ணும் நாற்ருேளும் உடையவர். அவருடைய வலக்கை சின் முத்திரையைக் காட்டிக்கொண்டு திகழும். சில சிற்பங்களில் நாட்டிய நூல்கள் கூறும் சாந்தாம்ஸ முத்திரை (சாந்தர்ஷண முத்திரை)யும் காட்டுவதுண்டு. இடக் கை வரதம் அல்லது தண்டம் ஆகிய குறிப்பினை யுணர்த்தும். மற்ருெரு வலக் கையில் உருத்திராக்க மாலையும், இடக்கையில் நெருப்பு அல்லது பாம்பும் இருக்கும். சில சிற்பங்களில் உருத்திராக்க மாலைக்குப் பதில் புத்தகமும், நெருப்பு அல்லது பாம்புக்குப் பதில் நீலோற்பல மலரும் விளங்கும். அமுத கலசத்தினையும் அவர் ஏந்தியிருப்பர். தட்சிணு மூர்த்தியின் வடிவம் வளைவு நெளிவுகள் இன்றி, நேராக நிமிர்ந்த நிலையில் திகழும். ஒரு நெறிப் பட்ட உள்ளத்தின் உறுதியையும் தியான நிலையின் இயல்பினையும் உணர்த்துதற்கு, அஃது ஓர் அடையாளம் ஆகும். ஜடாபாரம் ஜடாபந்தம் ஜடாமண்டலம் ஜடாமகுடம் முதலியவை களுள் ஒன்றை யுடையவராக அவர் விளங்குவார். அதன்கண் கங்கையும் மதியும் கபாலமும் கொன்றையும் ஆகியவைகள் காணப்படும். திருமுக மண்டலம் தெளிவும் ஒளியும் மகிழ்வும் நிரம்பிச் சாந்த நிலையில் திகழும், அவர்தம் பார்வை தியான-யோக பாவனையில் மூக்கு நுனியை நோக்கியிருக்கும். அவர் பளிங்கு போன்ற வெண்ணிறம் உடையவராக விளங்குவார்.

" சீதளப் பளிக்கு மேனியும், பளிக்குச்
செழுமலை பதித்ததுப் பன்ன
பாதமும், செவ்வாய் மலரும்,முக் கண்ணும்,
பங்கயச் செங்கரம் நான்கும்,
வேதபுத் தகமும், அமுதகும் பமும்,தன்
விழிமணி வடமும்,மெய்ஞ் ஞான
போதமுத் திரையும் தரித்ததோர் தனிமைப்
போதன்,நல் தட்சிணு மூர்த்தி "

— பரஞ்சோதி முனிவர்

" நிறைமதி முகமும் முக்கணும், மூரல்
நிலவுசெவ் வாயும்,ஈர் இரண்டு
நறைமலர்க் கரமும் செபமணி வடமும்
ஞானமுத் திரையுமாய், நால்வர்க்கு
அறநெறி யுணர்த்தி அருள்செய்து கல்லால்
அணிநிழல் இனிதுவீற் றிருந்த
மறைமுதல் நடுவீறு அறியொணு ஞான
வடிவினைக் கருத்தினில் வைப்பாம் "

—பவானிகூடற் புராணம்

## வியாக்கியான தட்சிணுமூர்த்தி :

யோக தட்சிணுமூர்த்தி, ஞான (மேதா) தட்சிணு மூர்த்தி, வீணு தட்சிணுமூர்த்தி வியாக்கியான தட்சிணுமூர்த்தி என நான்கு வேறு வகைகளில் இவர் வழிபடப் பெறுவர். பெரும்பாலான கோயில்களில் விளங்குபவர் **வியாக்கியான தட்சிணுமூர்த்தியே** யாவர். வேதாகமங்களின் நுண் பொருள்களை யெல்லாம் விளக்கி அருள் புரிபவர் வியாக்கியான தட்சிணு மூர்த்தி எனப்படுவர்.

முன் ஒரு காலத்தில் சனகர், சநந்தர், சநாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்கள் வேதத்தின் பொருள் விளங்காமல் மயங்கி, இறைவனை நோக்கித் தவம் புரிந்தனர். அவர்களுக்கு இறைவன் வெளிப்பட்டு, வியாக்கியான தட்சிணாமூர்த்தியாக வேதங்களின் பொருள் நுட்பங்களை ஆகமங்களால் தெளிவித்தருளினன்.

"ஏரிசையும் வடவாலின் கீழ்இருந்தங்கு
ஈரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை உரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்"

"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே"

"நன்றாக நால்வர்க்கு நான்மறையின்
உட்பொருளை
அன்றாலின் கீழ்இருந்தங் கறமுரைத்தான்
காணேடீ"

## யோக தட்சிணாமூர்த்தி :

இறைவன் வேதங்களின் நுண்பொருள்களை ஆகமங்களைக் கொண்டு தெளிவித்த பின்னரும் கூட மனம் ஒருநெறிப் படாமல் வருந்திய அம் முனிவர்கள் நால்வர்க்கும், இறைவன் யோக நெறியால் ஞானம் அடைந்து நிஷ்டை கூடும் நிலைகளை விளக்கி யருளினர். இவரே **யோக தட்சிணாமூர்த்தி** யாவர். கந்த புராணத்தில் **காமதகனப் படலம்** என்னும் பகுதிக்கு முன் யோகதட்சிணாமூர்த்தி பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## வீணா தட்சிணாமூர்த்தி :

"பெருங்கடல் மூடிப் பிரளயம்
கொண்டு பிரம னும்போய்
இருங்கடல் மூடி இறக்கும்
இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமும்
கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின்று எம்இறை
நல்வீணை வாசிக்குமே"

"ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
ஒத்துலகம் எல்லாம் ஒடுங்கிய பின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே"

என்ற திருப்பாடல்களிற் கூறப்படுவது போல, தட்சிணாமூர்த்தி தம் கையில் வீணை யுடையவராகவும் விளங்குவர். இவரே **வீணா(தர) தட்சிணாமூர்த்தி** எனப்படுவர்.

## மேதா தட்சிணாமூர்த்தி :

இறைவனின் திருவுருவம் ஞானம், ஆனந்தம் என்று இருவகைப்படும். நடராஜப் பெருமானின் திருவுருவம் ஆனந்தம் ஆகும். தட்சிணா மூர்த்தியோ ஞான வடிவினர். ஞானமே திருமேனியாகக் கொண்டு திகழும் அப் பெருமான், தன்னை அன்பால் வழிபடும் அடியார்களுக் கெல்லாம் ஞானத்தைக் கொடுத்து நலம் புரிந் தருள்கின்றார். இவரையே ஞான தட்சிணாமூர்த்தி அல்லது **மேதா தட்சிணாமூர்த்தி** எனச் சான்றோர்கள் போற்றுவர்.

"தாதாய் ! மூவேழ் உலகுக்கும்
தாயே ! நாயேன் தனைஆண்ட
பேதாய் ! பிறவிப் பிணிக்கோர் மருந்தே !
பெருந்தேன் பில்க எப்போதும்
மேதா மணியே ! என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்று கொல்லோ ? என்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

என வரும் திருவாசகப் பாடலில் **மணிவாசகப் பெருமான்** மேதா தட்சிணாமூர்த்தியைப்போற்றியிருத்தல் காணலாம்.

## தத்துவப் பொருள் நுட்பங்கள் :

1. தட்சிணாமூர்த்தியின் பளிங்கு போன்ற வெண்ணிறத் திருமேனி, இவர் உலகப் பொருள் ஒன்றிலும் தோயாது தூயவராகத் திகழ்தலை யுணர்த்தும்.

2. இவர் எல்லாத் தீமைகளையும் அடக்கியாளும் வலிமையுடையவர் என்பதற்கு அடையாளமாகத் தம் வலக் காலால் முயலகனை மிதித்துக்கொண்டு வீற்றிருக்கின்றார்.

3. இவர் திருக்கையில் உள்ள சிவஞான போதம், எல்லா ஞானங்களையும் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு திகழ்கின்றது. ஞானத்தால் தான் வீடு பேறு எய்துதல் இயலும் என்பதனை இது காட்டுகின்றது. நோய்வாய்ப்பட்டு வருந்தும் பிணியாளர்களின் பொருட்டு. மருத்துவர்கள் மருந்துப் பொருள்களைத் தொகுத்துக் கட்டிச் சுமந்துகொண்டு சென்று தந்து நலம் விளைவிப்பது போல, மும்மலங்களின் வயப்பட்டு மயங்கி வருந்தும் உயிர்களின் பொருட்டு இறைவன் அவற்றின் அறியாமையைப் போக்கி அறிவை யளிக்கும் சிவஞான போதச் செம்பொருள் நூலைக் கையில் ஏந்திக்கொண்டிருக்கின்றுன்.

“மன்னிய பிணிக்கோட் பட்டு
வருந்துவார் இன்பம் எய்தத்
துன்னிய மருந்து கட்டிச்
சுமந்திடு பிடக ரேபோல்
பன்னிய மலக்கோட் பட்டுப்
பரகதி அடைய நாளும்
மின்னிய ஞான போதம்
சுமப்பவர் விரைத்தாள் பணிவாம்”

4. இவர் வைத்துக் கொண்டுள்ள உருத்திராக்க மாலை 36 அல்லது 96 என்னும் தத்துவங்களை யுணர்த்துகின்றது. இது திருவைந்தெழுத்தை உருத்திராக்க மாலை கொண்டு பன்முறை எண்ணிப் பலகாலும் செபித்து உருவேற்றித் தியானித்தலே ஞானத்தை அடையும் நெறி என்றும் குறிப்பிடுகின்றது. இதனுற்றான் தட்சிணு மூர்த்தியின் முன்னர் இருந்து தியானம் செய்யும்படி நூல்கள் கூறுகின்றன.

5. இவர் இடக்கையில் அமிர்த கலசம் ஏந்திக் கொண்டிருத்தல், அனைத்துயிர்க்கும் பேரின்பத்தை அளிக்க வல்லவராதலை அறிவிக்கின்றது.

6. இவர் புலித்தோலின் மீது அமர்ந்திருத்தல், தீய சக்திகளை அடக்கி ஆளும் ஆற்றல் மிக்கவர் என்பதனைக் காட்டுகின்றது. மேலும், இவர் தாமரை மலரில் அமர்ந்திருக்கும் தன்மை, ‘மலர்மிசை ஏகினுன்’ எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவதற்கு ஏற்ப அன்பர்களின் இருதயம் ஆகிய தாமரை மலரில் எழுந்தருள்பவர் என்பதனைக் குறிக்கும். தாமரை மலர் ஓங்காரம் ஆகிய பிரணவத்தையும் உணர்த்தும் என்பர்.

7. எவராலும் வெல்ல இயலாத காமதேவனை எரித்தருளிய இவர்தம் செயல், ஞானமும் வீடும் எய்த விரும்புவோர் எவரும் ஐம்பொறி அவாக்களை அறுத்தொழித்துப் புலனடக்கம் உடையராதல் வேண்டும் என்பதனைப் புலப்படுத்துகின்றது.* துறவு நெறியின் சிறப்பினையும் தட்சிணுமூர்த்தம் இங்ஙனம் செம்மையுற உலகுக்குத் தெளிவிக்கின்றது.

8. படர்ந்து பரவியுள்ள ஆல மரமும் அதன் நிழலும், மாயையினையும் அதன் காரியம் ஆகிய உலகினையும் சுட்டுகின்றன. சங்க நூல்களில் ‘ஆலமர் செல்வன்’ என்னும் பெயரே தட்சிணுமூர்த்திக்குப் பெரு வழக்காகக் காணப்படுகின்றது.

9. அருகிலுள்ள வெள் விடை தருமத்தையும் அதன் இயல்பினையும் விளக்குகின்றது. அவரைச் சூழ்ந்துள்ள விலங்குகளும் பிறவும், அவரே அனைத்துயிர்க்கும் தலைவர் (பசுபதி) என்பதற்கு அடையாளம்.

10. அவர் தம் உடலின் மீது அணிந்துள்ள பாம்பு, குண்டலி சத்தியின் (serpent-power) அறிகுறியாகத் திகழ்கின்றது.

11. வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்தே தியானம் முதலிய செயல்களைச் செய்ய வேண்டும் என்பது விதி. ஆனுல், தட்சிணுமூர்த்தியோ தென் முகம் நோக்கி வீற்றிருக்கின்றுர். அஃது, அவர் நம்மைப் போல விதி விலக்குகளுக்கு உட்பட்டவர் அல்லர், அப்பாற்பட்டவர் என்பதனை அறிவிக்கும்.

“விதிவிலக் குயிர்க்கே அன்றி
யிளிர்தமக் கில்லை என்று
துதிமறை யுரைத்த வாறே
துணிதரத் தாமா காதாய்
மதியமை தெற்கு நோக்கி
வடக்குமா ணுக்கர் நோக்கப்
பொதியவிழ் கல்லால் நீழற்
பொலிபவர்க்கு அன்பு செய்வாம்”

—திருக்குடந்தைப் புராணம்

* “We see everywhere in the history of man that the spirit of renunciation is the deepest reality of the human soul.”

— Rabindranath Tagore, Sadhana, p. 151

**சின் முத்திரையின் நுண் பொருள்:**

தட்சிணாமூர்த்தி தம் திருக்கையால் சின் முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கின்றார். சித் + முத்திரை — சின் முத்திரை எனப்படும். சித்-ஞானம், முத்திரை - அடையாளம். ஞானப் பொருளின் அடையாளக் குறிப்பாகத் திகழ்வது சின் முத்திரை எனலாம்.

பெரு விரலும் சுட்டு விரலும் ஒன்றையொன்று வளைந்து சார்ந்து நிற்க, ஏனைய மூன்று விரல்களும் விலகித் தனித்து நின்று கொண்டிருக்கும் நிலை சின் முத்திரை ஆகும்.

பெரு விரலின் உதவியின்றி நாம் எதனையும் பிடித்தல் எடுத்தல் முதலியன செய்தல் இயலாதாகலின், அது சின்முத்திரையிற் பதியினைக் குறிக்கின்றது.

சுட்டு விரல் தன்னியல்பில் ஏனைய மூன்று விரல்களோடு சேர்ந்து பெரு விரலைப் பிரிந்து நிற்கின்றது; அது பசு எனப்படும் உயிரானது ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களோடு சேர்ந்திருத்தலால், பதியாகிய கடவுளின் தொடர்பைப் பெறுமல், பிறப்பிறப்புத் துன்பத்துட்பட்டு உழலுதலை யுணர்த்தும்.

உயிரானது பிறப்பு இறப்புத் துன்பங்களினின்று விடுபடுதல் வேண்டுமாயின், மும்மலங்களின் தொடர்பை விட்டுப் பதிப் பொருளின் திருவடிகளை அடையப் பெறுதல் வேண்டும். அதனை விளக்கவே சின் முத்திரையில் சுட்டு விரலானது வளைந்து பெரு விரலின் அடியைச் சென்று தொட்டுக் கொண்டிருக்கின்றது. இது சின் முத்திரையின் நுண் பொருள் ஆகும்.

“ பதிபசு பாசம் என்னப்
படுமொரு மூன்றுட் சுத்தம்
பதிநிலை; ஒன்றற்கொன்று
பயில்வியாப் பியமாம்; இன்னும்
பதியொடு பசுக்க லக்கும்
பண்பும்இற் றென்றோர் செங்கைப்
பதிவிரல் அளவிற் சேர்ப்பிற்
பகர்பவற் கடிமை செய்வாம் ”

—திருநாகைக் காரோணப் புராணம்

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தி யாதரோ

—திருவானைக்காப் புராணம்

“ செம்மலர்நோன் தாள்சேர ஒட்டாமல்
உயிரைஎலாம் தியக்கம் செய்யும்
அம்மலங்கள் கழீஇ,மிகுநல் அன்பரொடு
மருவிநீர் அடையும் முத்தி
இம்முறையாம் எனநால்வர்க் கிருவிரற்சின்
முத்திரையால் இயம்பி ஆற்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண்நிறீஇ வீற்றிருந்த
குருபரனை வணக்கம் செய்வாம் ”

—திருவாவடுதுறைப் புராணம்

**மோனமும் ஞானமும் :**

சமயப் பொருள்களை ஆராய்ச்சி அநுபூதி என்னும் இரு வகைகளில் நாம் உணர்தல் வேண்டும். **‘நாடிக் கண்டு மயர்வற அளித்த சிவஞான போதம்’** என்னும் தொடருக்கு ஆசிரியர் சிவஞான சுவாமிகள், **நாடி** எனவே ஆராய்ச்சியால் என்பதும், **கண்டு** எனவே அநுபூதியால் என்பதும் தாமே போதரும் என விளக்கவுரை வரைந்தருளி யிருத்தல் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

ஆராய்ச்சியாவது நூல்களின் துணைகொண்டு அறிவால் அறிவது. அநுபூதியாவது குருவின் துணைகொண்டு அருளால் அறிவது. ஆராய்ச்சியைவிட அநுபூதியே மிகவும் சிறப்புடையது.

“ அருளால் எவையும் பார்என்றான்—அத்தை
அறியாதே என் அறிவாற் பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லாற்—கண்ட
என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி”

என வரும் தாயுமான சுவாமிகள் பாடலும், இங்குக் கருதி யுணரற்பாலது.

இத்தகைய அநுபூதி ஞானம் மௌன நிலையை அடிப்படையாகக் கொண்டு திகழும். **மோனம் என்பது ஞான வரம்பு** என்பது சிறந்த பொருளுரை. சமய வாதங்களைக் கைவிட்டு மௌனத்தைக் கடைப்பிடிப்பது சமய அநுபவம் பெறத் தலை சிறந்த நெறியாகும்.

தேனை யுண்ணாத வரையில்தான் வண்டு கள் ரீங்காரம் செய்து மலரை வட்டமிட்டுச்சுற்றி அலைந்து திரிந்து கொண்டிருக்கும். உண்ணத் தலைப்பட்டுவிட்டாலோ, தம்மையும் உல கையும் மறந்து மோன நிலையில் தேனைப் பருகி இன்புற்றுக் கொண்டிருக்கும். அது போல, உண்மைச் சமய நுட்பங்களைத் தெரிந்து கொள் ளாதவர்கள்தான், சமய வாதங்களில் தலைப்பட் டுக் காலங் கழித்துக் கொண்டிருப்பர். அநுபூதி மான்களோ அவற்றினின்று விலகி மோனத்தவ நிலையில் அழுந்தியிருப்பார்கள் என **இராம கிருஷ்ண பரம ஹம்ஸர்** கூறுகின்றார்.

*எவனொருவன் சமய வாதங்களில் தலைப் பட்டுத் தருக்கம் பேசிக்கொண்டே இருக்கின் றானோ அவன், தன் உள்ளத்தினுள்ளே இருந்து இறைவன் சிறிய மெல்லியகுரலில் கூறிக்கொண் டிருக்கும் நல்லறிவுரைகளைக் கேட்டு உய்யும் பேற்றைப்பெறமுடியாமல் இழந்துவிடுகின்றான். இவன் போடும் வெற்றுரவாரக் கூச்சலினால், இவன் உள்ளத்துள்ளே இருந்து கொண்டு இறைவன் விடுக்கும் சிறிய மெல்லிய குரலின் செய்தி இவனுக்குக் கேட்காமற் போகின்றது

* "It has often occurred to me that a seeker after truth has to be silent. I know the wonderful efficacy of silence. I visited a Trappist monastery in South Africa. A beautiful place it was. Most of the inmates of that place were under a vow of silence. I inquired of the Father of the motive of it, and he said that the motive is apparent. We are frail human beings. We do not know very often what we say. If we want to listen to the still small voice that is always speaking within us, we must observe silence. It will not be heard if we continually speak. I understand that precious lesson. I know the secret of silence."

— Gandhiji

"Let us be silent that we may hear the whispers of the Gods." — R. W. Emerson

"It is the wise head that makes the still tongue." — W. J. Lucas

"Speech is human, silence is divine."

**"நானேதும் அறியாமே என்னுள் வந்து**
**நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"**

எனத் **திருநாவுக்கரசர்** கூறுவது போல, உள் ளத்துள் இருக்கும் இறைவனின் குரலை நாம் கேட்டு உய்தி பெற வேண்டுமானால், நாம் பேசு தலைக் கைவிட்டு, அமைதியாகவும் மௌனமாக வும் இருக்கப் பழகி ஒன்றியிருந்து நினைத்து வருதல் வேண்டும். மௌன நிலையால் விளையும் அருளனுபவ நலங்களுக்கு ஓர் அளவேயில்லை.

இத்தகைய மௌன நிலையின் மாண்புகளை யெல்லாம், நம்மனோர்க்குத் தகவுற நன்கினிது தெருட்டுவதே தட்சிணாமூர்த்தம் எனலாம்.

## சொல்லாமற் சொல்லும் நல்லாசிரியர் :

பல்வேறு சமயங்கள் பல்வேறு வகைகளிற் கடவுளை வழிபடுகின்றன. தாய் என்றும் தந்தை என்றும், அரசன் என்றும் தலைவன் என்றும், பிணி தீர்க்கும் மருத்துவன் என்றும், அறியாமை போக்கும் ஆசிரியன் என்றும், பல வகை நிலைகளில் கடவுள் வழிபாடு உலகில் நிகழ்ந்து வருகின்றது. அவற்றுள், கடவுளை ஆசிரிய நிலையில் வைத்து வழிபடும் முறையே தட்சிணாமூர்த்தம் எனலாம். தன் வாய்மொழி களாற் கற்பிக்கும் ஆசிரியனைவிட, ஒப்புயர்வற்ற தன் தூய இனிய வாழ்வின் சிறப்பினால் மாண வர்களுக்கு உள்ளொளி பெருகச் செய்யும் திறம் உடையவனே மிகவும் சிறந்த நல்ல பேராசிரியன் ஆவான். அதனாலேயே **அருண கிரிநாதர்** தம் திருச்செந்தூர்த் திருப்புகழில் **"ஊமைத்தேவர்"** எனக் குறிப்பிடும் தட்சிணா மூர்த்தி, வேதாகமப் பொருள்களை யெல்லாம் **"சொல்லாமற் சொல்லி விளக்குகின்றார்"**.

மாணாக்கர்களைச் சிந்திக்கச் செய்து உய்த் துணர வைக்கின்ற ஒப்புயர்வற்ற சிறந்த தெய் விக அருட் பேராசிரியர், தட்சிணாமூர்த்தி.

**கீழையூர் :** ஸ்ரீரங்க நாதப்பெருமாள் தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவம்
**பெண்ணாகடம் :** ஸ்ரீபிரளயகாலேஸ்வரர் தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவம்
**தஞ்சை :** ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோயில் சைத்ர பிரம்மோற்சவம்
**திருவுள்ளூர் :** ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானத்தில் சைத்ர பிரம்மோற்சவம்
**அம்பாசமுத்திரம் :** சித்திரா பௌர்ணமித் திருவிழா ஸ்ரீ புருஷோத்தமப் பெருமாள் கோயிலில்



தட்சிணாமூர்த்தி, ஆலங்குடி,

முடிவுரை :

* மனித குலத்தின் விழுமிய பெருஞ் செல்வமாக விளங்கும் சிந்தனைத் திறன், சிந்தித்து உணரவல்ல உரிமைச் சிறப்பு, சிந்தித்து உணர்வதனால் விளையும் தெளிவு நலம் ஆகிய அரிய பல குறிக்கோள்களைத் தட்சிணாமூர்த்தம் தக்காங்கு விளக்கிக்கொண்டு தனிப் பெருஞ் சிறப்புடன் திகழ்கின்றது.

* "The picture of Siva as Dakshinamurthy, Buddha and hundreds of other saints illustrate the truth grasped by Plato and Aristotle also, that the supreme end of man is contemplation, the freedom and the peace of understanding." — Dr. S. Radhakrishnan

"கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆறு
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய், மறைக்குஅப் பாலாய்,
எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து,பவத் தொடக்கை வெல்வாம்"

—திருவிளையாடற் புராணம்

---

**சங்கரநயினார் கோயில் :** ஸ்ரீகோமதியம்பாள் சமேத ஸ்ரீ சங்கரலிங்கப் பெருமாள் கோவிலில் சித்திரைப் பெருந்திருவிழா

**செம்பியன்மகாதேவி :** ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ கயிலாசநாதசாமி தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவம்

**சுசீந்திரம் :** ஸ்ரீ தாணுமாலய மூர்த்தி தேவஸ்தானத்தில் சித்திரைத் திருவிழா

**கோவிலூர் :** ஸ்ரீ மந்திரபுரீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவம். இன்னிசை மற்றும் சொற்பொழிவு நிகழ்ச்சிகள்

# திருவண்ணமலை

டாக்டர். மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L., Ph.D.,

**முன்னுரை :**

இது வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சிறந்த சிவத்தலம் ; விழுப்புரத்திற்கு வடக்கே 42 கல் தொலைவில் உள்ளது. சிவபெருமான் நெருப்பு மலையாய்த் தோன்றித் தாமே பரம் பொருள் என்று மெய்ப்பித்த பதி இதுவாகும் என்று கந்தபுராணம் கூறுகின்றது. இக் கருத்தை விளக்க ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் இங்குள்ள மலைமீது மிகப் பெரிய விளக்கு ஏற்றப்படுகின்றது.

இங்குள்ள சிவன் கோயில் மிகப்பெரியது. இதன் மதிற்சுவர்கள் மிக்க உயரமானவை. கோயிலின் நான்கு பக்கங்களிலும் வானளாவிய கோபுரங்கள் நான்கு இருக்கின்றன. மலையைச் சுற்றுவோர் 8 கல் தொலைவு நடக்க வேண்டும். வழியில் பல தீர்த்தங்கள் உள்ளன; **மணிவாசகர்** இருந்து வழிபட்ட **அணி அண்ணமலை** என்னும் கோயில் இருக்கின்றது.

திருப்புகழ் பாடிய **அருணகிரிநாதர்** முத்தி பெற்றபதி இதுதான். அவருக்கு அருள் புரிந்த முருகன் திருவுருவம் கோயிலின் கிழக்குப் பகுதியில் ஒரு தூணில் இருக்கிறது. 'கம்பத்து இளையனுர்' என்பது அப்பெருமானின் பெயர்.

**கல்வெட்டுக்கள்**

இக்கோயிலில் 125 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை முதற்பராந்தகன் காலம் (கி.பி. 907—953) முதல் சதாசிவராயர் காலம் (கி. பி. 1543 — 1565) வரையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். எனவே இக் கோவில் ஏறத்தாழ 600 ஆண்டுகள் மிக்க சிறப்புடன் விளங்கியிருந்தது என்பதை அறியலாம்.

இப் பெரிய கோயிலில் பல்லவர்காலக் கல்வெட்டுக்கள் இல்லை. கி.பி. 7—9 ஆம் நூற்றுண்டுகளில் (பல்லவர் காலத்தில்) வாழ்ந்த திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரர் என்பவர்கள் திருவண்ணமலைப் பெருமானைப் பாடியுள்ளனர். மாணிக்கவாசகர், "அண்ணமலையானைப் பாடுதுங்காண் அம்மானுய்" என்று அம்மானைப் பாடல்களை இத்தலத்தில் தங்கியிருந்து பாடியதாக அவரது வரலாறு கூறுகின்றது.

மலையைச் சுற்றிவரும் வழியில் 'அணி அண்ணமலை' என்று தேவாரத்தில் குறிக்கப் பெற்ற சிவன் கோயில் இருக்கின்றது. அக் கோயிலின் அருகில் மாணிக்க வாசகருக்குத் தனிச் சிறு கோயில் அமைந்துள்ளது. இவற்றை நோக்க, இன்றுள்ள திருவண்ணமலையார் பெரிய கோயில், **நாயன்மார்களுக்குப் பிறகு கட்டப்பெற்றுப் பெருமை பெற்றது** என்று கருதுதல் பொருத்தமாகும்.

**அரசர்கள்**

மேலே கூறப்பெற்ற 125 கல்வெட்டுக்களிலும் குறிக்கப் பெற்ற அரசர்கள் இவராவர்.

| | | |
|---|---|---|
| கோப்பரகேசரிவர்மன் (பராந்தகன் I) | ... | கி.பி. 907-953 |
| கன்னர தேவர் | ... | கி.பி. 949-967 |
| இராச கேசரி பன்மர் (பராந்தகன் II) | ... | கி.பி. 956-973 |
| வீரப்பாண்டியன் தலை கொண்ட கரிகாலன் | ... | கி.பி. 956-969 |
| இராசேந்திரன் I | ... | கி.பி. 1012-1044 |
| இராசாதிராசன் I | ... | கி.பி. 1018-1054 |
| இராசேந்திரன் II | ... | கி.பி. 1052-1064 |
| குலோத்துங்கன் I | ... | கி.பி. 1070-1120 |
| இராசராசன் II | ... | கி.பி. 1146-1173 |
| இராசராசன் III | ... | கி.பி. 1216-1241 |
| கோப்பெருஞ்சிங்கன் | ... | கி.பி. 1216-1246 |
| இராசேந்திரன் III | ... | கி.பி. 1246-1279 |

| | | |
|---|---|---|
| விக்கிரமபாண்டியன் I | ... | கி.பி. 1268-1281 |
| குலசேகர பாண்டியன் I | ... | கி.பி. 1263-1311 |
| வீரவல்லாள தேவர் III | ... | கி.பி. 1291-1342 |
| அரியண்ண உடையார் (அரசப்பிரதிநிதி) | ... | கி.பி. 1377 |
| வீர விருப்பண்ண உடையார் (அரியண்ண உடையார் மகன்) | ... | கி.பி. 1379 |
| தேவராயர் II | ... | கி.பி. 1423-1446 |
| தேவராயர் குமாரர் வீரவிஜயராயர் | ... | கி.பி. 1422-1424 |
| மல்லிகார்ச்சுனராயர் | ... | கி.பி. 1447-1465 |
| கிருஷ்ணதேவராயர் | ... | கி.பி. 1509-1529 |
| சதாசிவராயர் | ... | கி.பி. 1543-1565 |

## விளக்குஅறம்

கோயிலில் விளக்கெரித்தல் அக்காலத்தில் மிகச்சிறந்த அறமாகக்கருதப்பட்டது. ஆதலின் ஒவ்வொரு கோவிலிலுமுள்ள கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை விளக்கு தானம் பற்றியன வாகவே அமைந்து இருக்கின்றன. விளக்கு களில் **சாதாரண விளக்கு, சந்தி விளக்கு நந்தா விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு** எனப் பலவகை உண்டு. ஒரு விளக்கு என்பதன் அளவில் பாதிகொண்டது அரைவிளக்கு எனப் பட்டது; அதனில் பாதி கால்விளக்கு எனப் பட்டது. ஒரு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடு கள் அல்லது 32 பசுக்கள் தானமாக விடப் பட்டன. அவற்றைக் கோயில் மன்றாடிகள் பெற்றுக்கொண்டு ஒவ்வொருநாளும் விளக்கு எரிக்கக்கோயில் அதிகாரிகளிடம் நெய் அளந்து வந்தனர். இங்ஙனம், ஆடுகளையும் பசுக்களை யும், எருமைகளையும், கோவிலின் சார்பில் ஏற்றுக்கொண்ட மன்றாடிகள் 'கோவில் மன் றாடிகள்' என்றும் 'திருவிளக்குக் குடிகள்' என் றும் பெயர் பெற்றனர். 32 பசுக்களுடன் அவற் றின் மரபு வளர்ச்சி கருதி ஓர் எருதும் தானமாக விடப்பட்டது. அண்ணாமலையார் கோயிலில் விளக்குத்தானம் செய்தவர்கள் மிகப்பலர். அவர்களுள் அரசமாதேவியர், சிற்றரசர் மனைவியர், படைத்தலைவர்கள், அரசியல் உயர் அலுவலர், அரசியல் பணியாளர், தேவரடியார், பொதுமக்கள் எனப்பல திறத்தாரும் இடம் பெற்றிருந்தனர். திருவண்ணாமலை திருக் கோவலூருக்கு அண்மையில் உள்ளது. ஆத லால் திருக்கோவலூரை ஆண்ட மலைய மான்கள் திரு அண்ணாமலையாருக்குப் பலதிருப் பணிகள் செய்தனர்.

## பிறஅறங்கள்

அண்ணாமலை என்பது (அண்ணாநாட்டு) **அண்ணாத்தூரைச்** சேர்ந்த மலை எனப்பொருள் படும். இம்மலையின் பெயர் பிற்காலத்தில் ஊரின் பெயராக மாறிவழங்கப் படுகின்றது. பண்டைக் காலத்தில் தொண்டை நாட்டுக் கோட்டங்களுள் ஒன்றான **செங்குன்றக் கோட் டத்து அண்ணா நாட்டு அண்ணாத்தூர்** 1 என்றே இன்றைய திருவண்ணாமலை என்னும் ஊர் வழங் கப்பட்டது. 2 அண்ணாத்தூரை அடுத்த ஏரி **அண்ணாத்து ஏரி** என்று வழங்கப்பட்டது. அவ் வேரியின் பாய்ச்சலால் மலையைச் சுற்றியுள்ள ஊர்கள் செழிப்புடன் இருந்தன. நீர்வளத் திற்கு ஏரி காரணமாக இருந்ததால் அக்கால அதிகாரிகளும் பொதுமக்களும் அவ்வேரியை ஆழப்படுத்தியும் புதுப்பித்தும் வந்தனர்.

சேலம் மாவட்டத்திலுள்ள **ஆறகளூர்,** வாண கோப்பாடியின் தலைநகராய் இருந்தது. வாணகோவரையர் திருவண்ணாமலைப் பெரு மானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். அவருள் ஒருவன் இறைவனது பால் முழுக்கிற் காக 54 பசுக்களைத் தானம் செய்தான். பராக் கிரம பாண்டியதேவர் பால் முழுக்கிற்காக 73 பசுக்களையும் 26 சேங்கன்றுகளையும் உதவினர். முதற் குலோத்துங்கன் ஆட்சியில் ஆறகளூர் உடைய இராசராசதேவன் கருவறை விமானத் தைப் பொன்வேய்ந்தான்; அதனால் '**பொன் பரப்பினான வாணகோவரையன்**' எனப்பெயர் பெற்றான். அவன் அண்ணா நாடு முழுவதை யும் சுவாமிக்குத் தேவதானமாக விட்டான்; அதன் எல்லாவரிகளும் கோவில் பூசைக்கும் திருப்பணிக்கும் பயன்படட்டும் என்று தாரை வார்த்தான்.

கூடல் ஆளப்பிறந்தான் காடவராயன் மனைவியான **பெண்ணரசியார்** என்பவள் சுவா மிக்குச் செம்பும் அரக்கும் உள்வைத்துப் பொன் பரு முத்து ஒன்று, முத்து 12, வெள்ளி, பொன்

---

1. அண்ணாத்து முதலியார் என்று ஒரு பிரிவினர் முதலிமாருள் உண்டு. இவர் அண்ணா நாட்டினர்.

2. 477 / 1902

இவையெல்லாம் கலந்த நகை ஒன்று செய்து கொடுத்தாள்; திரு ஆலத்தித் தட்டு ஒன்றும் வழங்கினாள்.

இராச கம்பீரச் சேதிராயன், சோழன் ஏங்கப் பிறந்தான் நல்லூரைத் திருமடைப் பள்ளிப் புரமாக விட்டான். மூன்றும் இராசேந்திர சோழன் காலத்தில் சிங்கண்ண தண்ட நாயகன் என்ற ஹொய்சளர் படைத் தலைவன், திருமடைப்பள்ளிப் புரமாகவும் ஒரு சிறப்புப் பூசைக்கும் திருமதில் திருப்பணிக்கும் செய்யாற்றுக் கரையிலுள்ள மகிழம்பூண்டி என்ற கிராமத்தைத் தேவதானமாக விட்டான்.

கோப்பெருஞ்சிங்கன், கோவிலுக்குரிய தேவதான கிராமங்களையும் அண்ணா நாட்டையும் அவற்றுக்கு உரிய எல்லாவகை வரிகளையும் கோவிலுக்கே உரியனவாக நீர்வார்த்துக் கொடுத்தான்; பவளம், பொன் இவை அமைத்துச் செய்யப்பட்ட பதக்கமாலை ஒன்றை வழங்கினான்.

சுவாமிக்குத் திருமேற்பூச்சுக்கும் புழுகுக் காப்புக்கும் கலங்கரைப் பற்று என்னும் ஊரில் தனக்குச் சொந்தமாக இருந்த வாழைத் தோட்டம் நன்செய் புன்செய் நிலங்கள் ஆகியவற்றைத் தேவரடியாள் ஒருத்தி தானமாக விட்டாள். கோயில் தேவரடியாள் மற்றொருத்தி சுவாமி நகைக்காகப் பத்துக் கழஞ்சு பொன்னும், மூன்று நிலைக்குத்து விளக்கு ஒன்றும் திருநந்தாவிளக்கு ஒன்றும் வழங்கினாள்.

வீரசேகர காடவராயன் என்ற சிற்றரசன் 130 கழஞ்சு எடை கொண்ட ஏகவல்லிவடம் என்னும் நகையை வழங்கினான். குலோத்துங்கசோழமலைய குலராயன் என்ற சிற்றரசன் சுவாமிக்கு 35 கழஞ்சுவடம் ஒன்றும் 19 கழஞ்சு பொன்னும் 82 முத்துக்களும் கொண்ட தாழ் வடம் ஒன்றும் வழங்கினான். கோவில் வேலைகளைப்பார்த்து வந்த திருவீதி ஆண்டார்களுக்கு வேங்கைக்காவில் தலங்கள் விடப்பட்டன. இவ்வாறு அண்ணாமலையார் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் மிகப் பலவாகும்.

முதலாம் இராசேந்திர சோழன் வெற்றிகளும் கோப்பெருஞ்சிங்கன் வெற்றிகளும் இக் கோவில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. கோவில் திருமுற்றத்தில் இராசேந்திர சோழன் சாலையில் சிவனடியார்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. அதற்கு ஒருவன் 40 கழஞ்சு பொன்தானம் கொடுத்தான்.

மூன்றும் இராசராசன் காலத்தில் **மெய்கண்டதேவர்** என்பவர் மாத்தூரான இராசராச நல்லூரில் ஓர் ஏரியை வெட்டுவித்தார். அதன் பெயர் **மெய்கண்ட தேவப்புத்தேரி** என்பது. அவர் அதே மாத்தூரில் ஒரு சிவன் கோயிலையும் கட்டினார். அதன் பெயர் **மெய்கண்டேசுவரம்** என்பது3. கோவிலுக்கு 5 நிலைக்குத்து விளக்கு, 3 நிலைக்குத்து விளக்கு என்பன சிலரால் கொடுக்கப்பட்டன.

திருவண்ணாமலையில் கீழைத்தெருவில் தேவரடியார் 24 பேர் குடியிருந்தனர். அவருள் கூத்தாடும் தேவநாச்சியார் ஒருத்தி; மற்றொருத்தி திருவண்ணாமலை மாணிக்கம் என்பவள்4.

ஒரு கல்வெட்டில் கிருஷ்ணதேவராயரின் வெற்றிகளும் அவர் செய்த திருப்பணிகளும் குறிக்கப்பட்டுள்ளன. அவர் திருவண்ணாமலையில் ஆயிரக்கால் மண்டபம் கட்டுவித்தார்; திருமலைதேவி அம்மன் சமுத்திரம், (ஏரி) வெட்டுவித்தார்; பதினொரு நிலைக்கோபுரம் எடுப்பித்தார்; ஏழாம் திருநாள் மண்டபம் கட்டுவித்தார்; பல கதவுகளுக்கும், விமானங்களுக்கும் பொன் முலாம் பூசுவித்தார். கிருஷ்ணதேவராயர் பதக்கம், முதலிய நகைகளை வழங்கினார்; சந்தி என்ற சிறப்புப்பூசை நடைபெறச்செய்தார்; திருமஞ்சனம் எடுப்போர்க்கும் ஓதுவார்க்கும் தேவரடியார் அறுவர்க்கும் அத்யயனம் செய்வாருக்கும் நிவந்தங்களை விட்டார்5.

மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் சோழப்பெருநாட்டிலிருந்த சிற்றரசர்கள் தம்முள் பல கட்சிகளை ஏற்படுத்திக்கொண்டனர். ஒரு கட்சியைச் சேர்ந்த சிற்றரசர் சிலர் தம்முள் ஒற்றுமையோடு இருப்பதாக அரசியல் ஒப்பந்தம் செய்துகொண்டனர்6.

---

(3) 485/1902

(4) 522, 530/1902.

(5) 574/1902

(6) 73/1945—46

### சுவாமி அம்மன் பெயர்கள்

திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆழ்வார், அண்ணாநாட்டு உடையார், திருவண்ணாமலை உடையார் என்பன சுவாமியின் பெயர்கள். உண்ணாமுலை நாச்சியார், திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார், என்பன அம்மன் பெயர்கள்.

### கோவில் அதிகாரிகள்

கோவில் வரவு செலவு மிகுதியாக இருந்தமையால் அண்ணாமலையார் கோவிலில் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் ஸ்ரீகாரியம் செய்பவர், தானத்தார், தேவகன்மிகள், கோயில் கணக்கர் ஸ்ரீமாகேசுவரர், திருவுண்ணாழிகைச் சபையோர் எனப்பட்டனர். கோவில் கருவறையின் பூசை விழா முதலியவற்றைக் கவனிப்பவர் திருவுண்ணாழிகைச் சபையார் எனப்பட்டனர். 7 கோவிலில் தேவர் பண்டாரம் (பொக்கிஷசாலை) இருந்தது. இக்கோயிலின் கணக்குகளை அரசாங்க அதிகாரி அவ்வப்போது வந்து தணிக்கை செய்வது வழக்கம். ★

(7) 479/1902

---

## சைவ சித்தாந்த சாத்திர வகுப்புகள்

சென்னை மயிலாப்பூர்ப் பி.எஸ். உயர் நிலைப்பள்ளியில், **திரு. பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்** அவர்களால், 1-4-63 முதல் மூன்று நாட்கள் சிவஞான போத மாபாடியமும், 7-4-63 முதல் மூன்று நாட்கள் துகளறு போதமும் பற்றி வகுப்பு முறையிற் சொற்பொழிவுகள் நன்கினிது நடத்தப் பெற்றன. அன்பர்கள் பலரும் வந்திருந்து கேட்டுப் பயன் பெற்றனர்.

சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலில் விடையாற்றி விழாவின் போது 10-4-63 புதன்கிழமை முதல் 21-4-63 ஞாயிற்றுக்கிழமை முடிய 12 நாட்களிலும், **சிவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகளால்** சிவஞான போதச் சொற்பொழிவுகள் சிறப்பாக நடைபெற்றன. பலரும் கேட்டுப் பயன் பெற்றனர்.

### கும்பாபிஷேகம்

திரு இடையாறு ஸ்ரீ மருதீசுவரர் தேவஸ்தானத்தில் சோபகிருது வருஷம், வைகாசிமாதம், 23ம் தேதி (6-6-63) வியாழக்கிழமை பகல் மணி 11க்கு மேல் 12க்குள் சிம்மலக்கினத்தில், அறநிலைய ஆணையாளர் **திரு M.S. சாரங்கபாணி** முதலியார் B.A., B.L. அவர்கள் முன்னிலையில், அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புற நடைபெறும்.

---

### வைணவ ஆசார்யர் திருநாட்கள்

**சித்திரை — மே**

| | | |
|---|---|---|
| 25 — | 7 | ஸ்ரீ மதுரகவி யாழ்வார் |
| **வைகாசி** | | |
| 11 — | 24 | திருக்கோட்டியூர் நம்பி |
| | **ஜூன்** | |
| 22 — | 5 | ஸ்ரீ நம்மாழ்வார் |
| 24 — | 7 | ஸ்ரீ திரு வரங்கப் பெருமாள் அரையர் |

### சைவ நாயன்மார் திருநாட்கள்

| | | |
|---|---|---|
| **சித்திரை** | **மே** | |
| 24 — | 6 | இசைஞானியார் |
| 25 — | 7 | திருக்குறிப்புத் தொண்டர் |
| **வைகாசி** | | |
| 9 — | 22 | கழற்சிங்கர் |
| 14 — | 27 | நமிநந்தி அடிகள் |
| 15 — | 28 | சோமாசி மாறர் |

# சிறுபிழையும் பெருவிளக்கமும்

தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த (1944) தலைசிறந்த தமிழ்ப் பெரும்புலவர்களுள், **நாவலர்-பண்டிதர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் மிகவும் குறிப்பிடத்தகுந்த சிறப்புடையவராவர். அவர்களின் அரும் பெரும் புலமையும் பண்புநலமும் கருதித் தமிழறிஞர்கள், அவர்களை "**நாட்டார் ஐயா**" என்றே சிறப்பித்துப் பெரிதும் அன்புடனும் மதிப்புடனும் வழங்குவர். **சிலப்பதிகாரம் அகநானூறு** முதலிய சங்கத்தமிழ் நூல்களுக்கும், **திருவிளையாடற் புராணம்** முதலிய சமயப் பனுவல்களுக்கும் அரிய பெரிய நல்லுரைகளை இயற்றியளித்த பெருமை, நாட்டார் ஐயா அவர்களுக்கு **உண்டு. நக்கீரர், கபிலர்** முதலிய ஆராய்ச்சி நூல்களையும் அப்புலவர் பெருமான் எழுதியிருக்கின்றார். அவர்தம் அருமை பெருமைகள் அளவிடற் பாலன அல்ல.

சான்றாண்மைப் பண்புநலங்கட் கெல்லாம் ஓர் ஆழி எனத்தகுந்த சான்றோராக விளங்கிய நாவலர் **திரு. நாட்டார் ஐயா** அவர்கள், ஒரு கூட்டத்திற்குத் தலைமை ஏற்றருளினார்கள். அப்போது இளைஞர் ஒருவர் கடவுள் வாழ்த்துப் பாடினார். தமிழ் வித்துவான் வகுப்பில் பயின்று கொண்டிருந்த அவ்விளைஞருக்கு நல்ல இசைப் பயிற்சியும் அமைந்திருந்தது.

**"அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே !**
**அன்பினில் விளைந்த ஆரமுதே !**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் தனக்குச்**
**செம்மையே ஆய சிவபதம் அளித்த**
**செல்வமே ! சிவபெருமானே !**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் !**
**எங்கெழுந் தருளுவ தினியே ?"**

என்னும் பாடலைத் தம் இசைப் பயிற்சித் திறமெல்லாம் விளங்க அவர் இனிது பாடினார். பாடுங்கால், எல்லார்க்கும் பொருள் விளங்குதற் பொருட்டு மிகவும் உருக்கம் அமைய 'என் அம்மையே அப்பா' என்றும் 'இம்மையே யான் உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்' என்றும் பலகால் திரும்பத் திரும்ப உணர்ச்சி பெருக அவ்விளைஞர் இனிது பாடினார். யாவரும் மிகவும் மகிழ்ந்தனர். நாவலர் பெருந்தகை அவர்களின் தலைமையிற் கூட்டம் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

கூட்டம் முடிந்த பின்னர் நாட்டார் ஐயா அவர்கள் இசைபாடிய இளைஞரை அன்புடன் அருகில் தனியே அழைத்தார். "தாங்கள் மிகவும் உருக்கமாகப் பாடினீர்களே ! அந்தப் பாடலை யார் இயற்றியது ? எந்த நூலில் இருக்கின்றது ?" என ஒன்றும் தெரியாதவர் போல இனிமையாக வினவினார்.

இளைஞர் சிறிது தயங்கினார். 'எல்லோருக்குமே அது திருவாசகப் பாடல் என்று தெரியுமே ! அப்பாடலைத் தெரியாதவர்கள் தமிழுலகில் யாருமே இருக்கமாட்டார்களே ! ஐயா அவர்கள், ஏன் இப்படித் தன்னை வினவுகின்றார் ?' என்று இளைஞர் திகைத்து நின்றார். நாட்டார் ஐயா அவர்களோ விடாது மேலும் வற்புறுத்தி அன்புடன் வினவவே, வேறு வழியின்றி இளைஞர் 'அப்பாடல் திருவாசகத்தில் உள்ளது' என்று தயங்கித் தயங்கி அன்பு கலந்த அச்சத்துடன் கூறினார்.

உடனே நாட்டார் ஐயா அவர்கள் மிகவும் வியப்புற்றவர்போல, "அப்படியா ! நீங்கள் பாடியது திருவாசகத்திலா இருக்கிறது ? மாணிக்க வாசகர் பாடிய திருவாசகத்தைத் தானே சொல்கின்றீர்கள் ! இப்படி ஓர் அரிய இனிய பாடல் திருவாசகத்தில் இருப்பதை நான் இதுவரையில் அறிந்து கொள்ளவே இல்லையே !" என்று உண்மையாகவே கூறுவது போல ஏக்கம் தோன்றப் பேசினார்கள்,

மாணவரோ ஒரு வகையில் வியப்பும், மற்றொரு வகையில் மகிழ்ச்சியும் அடைந்தார். 'இந்தப் பாடல் நாட்டார் ஐயா அவர்களுக்குத் தெரியாமல் இருக்குமா?' என்று வியப்பு! அதனை நாம் தெரிந்து வைத்துக் கொண்டு அழகாகப் பாடினேமே என்று மகிழ்ச்சி! உடனே ஓடோடிச் சென்று ஒரு திருவாசகப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தார். அதில் அப்பாடல் உள்ள பக்கத்தைத் திறந்து காட்டினர்.

நாட்டார் ஐயா அவர்கள் அதனைவாங்கிப் பார்த்து, இதில் 'அம்மையே அப்பா' என்ற திருவாசகப் பாடல்தான் இருக்கின்றது. "என் அம்மையே அப்பா" என்ற அழகிய பாடலைக் காண வில்லையே! "இம்மையே யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" என்று தாங்கள் முன்பு எவ்வளவு அழகாகப் பாடினீர்கள்! இதில் அந்தச் சிறந்த பாடல் காணப்படவில்லையே. "இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" என்று தானே இதில் உள்ளது? தாங்கள் பாடிய அழகிய அந்தப் பாடல் இந்தப் புத்தகத்தில் விடுபட்டுப் போயிற்ரு? அல்லது தவருக அச்சடித்து விட்டார்களா? என்று வினவி, அந்தப் புத்தகத்தின் பக்கங்களைச் சிறிது நேரம் புரட்டிக் கொண்டிருந்தார்.

இளைஞருக்கோ ஒரே கலக்கம்! தாம் செய்த ஏதோ ஒரு குற்றத்தினைத் தான் அவர் குற்றம் என்று சொல்லாமற் சொல்லிக்காட்டுகின்ருர் என்று புரிந்து கொண்டார். சிறிது சிந்தித்தார். பின்னர்த் தயங்கித் தயங்கி, "அச்சிட்டதில் தவறு இல்லை. நான்தான் சில சொற்களைச் சேர்த்துக் கொண்டேன். "என் அம்மையே அப்பா" என்றும் "யான் சிக்கெனப் பிடித்தேன்" என்றும் பொருள் விளங்குவதற்காகப் பாடினேன். என்-யான் என்னும் இரண்டு சொற்களைச் சேர்த்தேன். அவ்வளவுதான்" என்று பணிவுடன் அமைவுரை கூறினர் இளைஞர்.

நாட்டார் ஐயா அவர்கள் புன்முறுவல் பூத்த இனிய முகத்தினராய், "என்ன அப்பா! இவ்வளவு எளிமையாகச் சொல்லி விட்டாயே. எந்த இரண்டு சொற்கள் தம்முடைய உள்ளத்துணர்ச்சியினின்று நீங்கப் பெறுதல் வேண்டும் என்று மாணிக்கவாசகர் தம் வாழ்நாள் முழுவதும் அரும்பாடு பட்டு,உழைத்தாரோ, அந்த இரண்டு சொற்களையே யன்றே, நீங்கள் வலிந்து புகுத்திச் சேர்த்துக் கொண்டு விட்டீர்கள்! மாணிக்கவாசகர் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுழைத்துப் பெற்ற அரும் பெரும் ஞானச் செல்வம் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் நீங்கள் அழித்து விட்டீர்களே!

"யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்று ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய் திருத்தலை, நீங்கள் மறந்து விட்டீர்களா? பொருள் விளங்கப் பாடவேண்டும் என்று நினைத்துப் பொருள் களங்கப் படும்படி யன்றோ, பாடி விட்டீர்கள்!

மாணிக்கவாசகர் ஒப்புயர்வற்ற ஓர் அரும் பெரும் ஞானச் செல்வர் அல்லரோ? அவர் நம்மைப் போல யான் எனது என்னும் அகப் பற்று புறப்பற்று உணர்ச்சிகளை யுடையவராக இருந்திருப்பாரா? இருந்திருந்தால் அவர் ஞானம் பெற்றவர் ஆவாரா?

"யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே?

"யான் எனது என் உரைமாய்த்துக்
கோதில் அமுது ஆனானைக் குலாவுதில்லைக் கண்டேனே"

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும்போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ?"

"எனை நான்என்பதறியேன் பகல் இரவாவதும் அறியேன்"

என்றெல்லாம் அவர் ஆங்காங்கே திருவாய் மலர்ந்தருளியிருக்கின்ருரே! அவற்ருலேயே மாணிக்க வாசகர் யான் எனது என்னும் தற்போத உணர்ச்சிகள் நீங்கப் பெற்ற சிவஞானச் செல்வர் என்று தெரியவில்லையா?

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் ஆய

**தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த**
**செல்வமே ! சிவபெருமானே !**
**யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப்**
**பிடித்தேன் !**
**எங்கெழுந் தருளுவ தினியே?"**

என்னும் மற்றொரு திருப் பாடலில், "யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்" என்று வந்திருப்பினும், அங்கு 'யானும்' என்ற **இழிவு சிறப்பு உம்மை** மறைந்து நிற்பதாகக் கொண்டு **'யாவர்க்கும் கீழாம் அடியேனும்** யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய நின்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்துக் கொண்டு உய்ந்தேன்' என்று பொருள் கொள்ள வேண்டும்.

மாணிக்க வாசகர் போன்ற ஞானப் பெருமக்கள் பாடிய திருப்பாடல்களில் **ஓர் எழுத்தையேனும் கூட்டவோ குறைக்கவோ** நமக்கு அதிகாரம் இல்லை. "**என்னதோ இங்கு அதிகாரம் ?"** என்று மாணிக்கவாசகர் தாமே பாடியருள்கின்றனர் அன்றோ?

**"நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து**
**சிவமான வாபாடித் தெள்ளேணம்**
**கொட்டாமோ "**

என்று அருளிச் செய்துள்ளவாறு, சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெற்ற நிலையில் சீவன் முத்தர்களாகத் திகழ்ந்த சிவஞானச் செல்வர்களின் திருவருட்பாடல்கள், **காரிகை கற்றுக் கவிபாடும்** நம்போன்றவர்களின் பாடல்களைப் போல்வன அல்ல. அவற்றை நாம் மிக்க விழிப்புடன் எழுத்துப் பிழையறக் கருத்தூன்றிக் கற்றல் வேண்டும்.

**"அழித்துப் பிறக்க ஒட்டா அயில்வேலன்**
**கவியை, அன்பால்**
**எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் !**
**எரி மூண்டதென்ன**
**விழித்துப் புகையெழப் பொங்குவெங்**
**கூற்றன் விடும் கயிற்றால்**
**கழுத்திற் சுருக்கிட் டிழுக்கும் அன்றோ**
**கவி கற்கின்றதே!"**

என **அருணகிரி நாதர்** தம் **கந்தர் அலங்காரம்** என்னும் நூலில், "பெரியவர்களின் பாடல்களை நாம் எழுத்துப் பிழைறக் கருத்தூன்றிக் கற்றல் வேண்டும் என வற்புறுத்தியிருக்கின்றார் அன்றோ" எனப் பல தண்ணளி மிக்க அருளுரைகளை, அறிவுரைகளை வழங்கினார்கள்.

இங்ஙனம் மாணவர் ஒருவர் செய்த சிறு பிழை பெருவிளக்கம் வெளிவரக் காரணமாயிற்று இச் **சிறு பிழையும் பெருவிளக்கமும்** பற்றிய செய்தி (Anecdote) நம்மனோர் உள்ளத்தில் என்றும் நிலைபெறத் தக்கது ஆகும். ★

---

## சிறு குறிப்பு

புதிய அச்சக மாற்றம் காரணமாகத் 'திருக்கோயில்' **மே** மாத இதழ் வெளி வரச் சிறிது கால தாமதம் நேர்ந்து விட்டது. இதனை வாசக அன்பர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

இனி ஒவ்வொரு மாதமும் 'திருக் கோயில்' இதழ், வழக்கம் போல் 2-ஆம் தேதியன்றே தவறாது வெளிவந்துவிடும்.

**—ஆசிரியர்.**

# சிவஞான போதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.எ.,எல்.டி., காஞ்சிபுரம்.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

## ஏழாஞ் சூத்திரம் :

**யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்**
**சத்தே அறியா(து); அசத்தில தறியா(து);**
**இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா**

என வரும்.

முன் சூத்திரத்தில், அளவையறிவால் அறியப்படு பொருளெல்லாம் அசத்து (நிலையுதல் இன்றித் தோன்றி நின்று மறைவன), ஒருவாற்ருனும் உணரப்படாது எனப்படும் கற்பனைப் பொருளும் அசத்து எனவே படும்; அவ்விரு திறனும் அன்றித் தான் அதுவாய் ஒற்றுமைப் பட்டு நின்று உணர்வதாய மெய்யுணர்வு ஒன்றனுக்கே விளங்குவது **சிவசத்து** (அறிவு வடிவாகிய செம்பொருள்) என்னும் கருத்துக்கள் விளக்கப்பட்டன. இவ்வாறு உணர்வார்க்கு, இங்ஙனம் உணரும் பொருள் யாது? அஃது அவ்விரண்டனுள் ஒன்ருே வேருே—என்று ஐயம் நிகழ்வது இயல்பு. அவ்வையத்தை நீக்கி அச் சூத்திரத்திற்குப் புறனுக அடுத்த ஓர் ஒழிபை இச் சூத்திரம் உணர்த்துகின்றது.

இச் சூத்திரக் கருத்தை மெய்கண்ட தேவர் கீழ்க்காணுமாறு உரைத்துள்ளார் :

**“ என்பது சூத்திரம் : என்னுதலிற்ருேவெனின்**
**மேலதற்கோர் புறனடை உணர்த்துதல்**
**நுதலிற்று”**

சூத்திரத்தின் பொழிப்பு : சூரியனின் ஒளி முன் இருள் முனைந்து தோன்ருது; அதுபோல, சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய காரியப் பிரபஞ்சம் எல்லாம் முனைந்து தோன்றமாட்டாத சூனியப் பொருளேயாம். ஆதலால், சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தை அறிந்தனுபவியாது. அசத்தாகிய உலகமும் அறிவிலது (இலது) ; ஆதலால், அது சிவத்தையறியாது. இங்ஙனம் ஆதலின், அவ்விரண்டினையும் சிவ சத்தெனவும், அசத்தெனவும் வரை செய்து அறிந்து அனுபவிப்பது அவ்விரண்டின் வேருகிய ஆன்மா என்பது துணியப்படும்.

இங்கு ஐயுற்றுத் துணிதற்கு உரிய முடிபுகள் மூன்று உள்ளன. ஆதலின், இது மூன்று அதிகரணங்களை உடையது.

## முதல் அதிகரணம் :

**1.** சூத்திரக் கூறு : **“யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின், சத்தே அறியாது”**

**2.** வார்த்திகம் : **ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது, மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.**

[ மெய் - முத்தி நிலைக்கண் ஆன்மாவின் கண் விளங்கித் தோன்றும் உண்மையியல்பு; பொய் - பிறப்பு நிலையில் அதன்கண் தோன்றும் சுட்டுணர்வாகிய பொதுவியல்பு. முத்தி நிலைக்கண் சிவச்சார்புபற்றி ஆன்மாவிற்கு உளதாகிய மெய்யுணர்வின்கண் சுட்டி ஒருதலைப்பட அறியும் பொதுவியல்பு இன்மையின், அதுபற்றி முதல்வனுக்கு அச்சுட்டுணர்வு இல்லையென்பது துணியப்படும் என்றபடி ]

**3.** (அ) இங்குத் தன்னுற் கூறப்படும் பொருள் :

முதல்வன் சுட்டுணர்வின்றி நிற்பவன் ஆதலால், அவன் உலகத்தை அனுபவியான்.

(ஆ) உலகத்தை அவன் அனுபவிப்பானே அனுபவியானே என்றல் ஐயப்பாடு.

(இ) பிறர் கூறும் பக்கம் : உலகை முதல்வனுக்குத் திருமேனி எனவும், மாயையை அவன்றன் சக்தி எனவும் நூல்கள் கூறுகின்றன. ஆதலால், உலகைச் சூனியம் என்றல் பொருந்தாது. உயிரின் பொருட்டு முதல்வன் உலகினைச் சுட்டியறிவன் எனக் கொள்வதனுல் குற்றம் ஒன்றும் வராது.—இங்ஙனம் கூறுவோர் சிவாத்துவித சைவர் எனப்படுவர்.

(ஈ) மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

குடம், ஆடை முதலியவை நம்மால் அநுபவமாய்ச் சுட்டியறியப்பட்டு நமக்கு வேருக நிற்றல் போல, உலகம் முதல்வனல் சுட்டியறியப்பட்டு அவனுக்கு வேருகத் தனித்து நிற்கும் பொருள் அன்று. இங்ஙனம் முதல்வன் உணர்வின்முன் முனைந்து நிற்காது உலகம் என்பதே சூனியம் என்றதன் கருத்தேயன்றி, உலகைப் பொய்ப்பொருள் அல்லது மித்தை என்று குறித்ததன்று. ஆன்மாக்கள் பிறப்பு நிலையில் தத்துவங்களோடு கூடிநின்று சுட்டுணர்வு உடையனவாய்ச் சுதந்திரமின்றி உள்ளன; வீட்டு நிலையில் சிவனைச் சார்ந்து அவனுக்குரிய அருட் குணங்களைப் பெற்று விளங்குகின்றன. "எண் குணத்து உளோமே" என்னும் அப்பர் வாய்மொழி கருதுதற்கு உரியது. வீட்டு நிலையாகிய நிட்டை நிலையில் ஆன்மாவிற்குச் சுட்டுணர்வு இல்லை என்பது அனுபூதியின் வைத்து உணரப்படுவது. "உண்டொர் ஒண்பொருள் என்றுணர்வார்க்கெலாம் பெண்டிர் ஆண் அலி என்றறி யொண்கிலை", "அறிவொன்றற நின்றறிவார் அறிவில்-பிறிவொன்றற நின்ற பிரான் அலையோ" — என்ருற் போன்ற வாய்மொழிகளைக் காண்க. அதற்குக் காரணம் முதற்பொருளின் இடத்துச் சுட்டுணர்வு இன்மையே என்பது கருதி உணரப்படும்.

எல்லாம் அறியும் முதல்வனுக்குச் சுட்டுணர்வும் உண்டு எனக் கொள்ளலாமே எனின் கூறுவோம்: சுட்டுணர்வு முற்றுணர்வைத் தடுப்பது; ஆதலால், அதன் இன்மை முதல்வனுக்கு மேம்பாடாவதல்லது இழுக்காகாது எனக் கொள்க. தனக்கு வேருக ஒரு பொருளையும் உடையனல்லனுய், எல்லாம் தானுய், "ஒருவனே உருத்திரன், இரண்டாவதாக ஒன்றும் இலது" என ஆரிய வேதமும், "இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" எனத் தமிழ் வேதமும் ஓதநின்ற முதல்வனுக்குச் சுட்டியுணரத் தக்கதாக ஒரு பொருளும் இன்ரும்; அவன் உலகத்தை அறிந்தாங்கு அறிந்து நடாத்துவனேயன்றிச் சுட்டி ஏகதேசப்பட்டு நின்று அறியான். கதிரவன் முன் இருள் விளங்கித் தோன்ருதவாறு போல, முதல்வன் முன் துன்பக் கலப்பும் ஏகதேசப்படுதலும் தூய்மையின்மையும் உள்ள, நன்மையில்லாத உலகம் முனைந்து தோன்றமாட்டாது என உணர்க.

**அன்னியம் இல்லாமை அரற்கொன் றுணர்**
**வின்ரும்; அன்னியமில் லானசத்தைக் காண்குவனேல்-**
**அன்னியமாக்**
**காணுன் : அவன்முன் கதிர்முன் இருள்போல**
**மாணு அசத்தின்மை மற்று.**

## இரண்டாம் அதிகரணம் :

1. சூத்திரக்கூறு : **அசத்து இலது, அறியாது.**

2, வார்த்திகம் : **இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது, அதுதான் நிரூபிக்கில் இன்ருகலான்.**

[சூத்திரத்தில் வரும் **இலது** என்னும் சொல் **உணர்வு இல்லது** என்னும் கருத்தைக் குறிக்கும் என்றபடி]

3. (அ) **தன்னுற் கூறப்படும் பொருள் :**

பாசம் எனப்படும் தனுகரணபுவன போகங்கள் யாவும் அறிவில் பொருளாகலின் அவை சத்தாகிய சிவத்தை அனுபவியா.

(ஆ) **இதன்கண் ஐயப்பாடு :** பாச அறிவு என வழங்குதல் உண்மையின், பாசம் சிவத்தை அறிந்து அநுபவிக்குமோ அநுபவியாதோ என இரட்டுறத் தோன்றும் உணர்வு.

(இ) **பூருவ பக்கம் :** கண் காணும், காது கேட்கும், மனம் உணரும் எனக் கரணங்களுக்கு உணர்வுடைமை காட்சி பற்றியே துணியப்படும். அதுபற்றியே பதிஞானம், பசுஞானம் என்பவற்ரேடு ஒப்பப் பாசஞானம் என்னும் வழக்கும் உளதாயிற்று. தத்துவங்களுக்குத் தனித்து நிற்கும்போது அறிவு நிகழாதாயினும், ஆன்மாவின் சந்நிதியில் உணர்வு நிகழும் எனக் கொள்ளுதல் பொருத்தமாம்; காந்தத்தின் முன் இரும்பு அசைவுடையதாதல் போல இதனைக் கொள்ளலாம்.

முகத்தெதிரில் உள்ள கண்ணுடியில் ஒளியும் அசைவும் உள்ள நிழல் தோன்றுதல் போல, சிவத்தின்முன் ஆன்மாவிற்கும் சிவமாந்தன்மை கலந்து தோன்றும்; அப்பொழுது, உப்பளத்திற்பட்ட யாவும் உப்பாதல் போல, பசுகரணமும் சிவகரணமாய் நிகழ்தலின் அச் சிவகரணங்கள் சிவத்தை அறிந்து அநுபவிக்கும் என்றலே துணிபாம். — இங்ஙனம் கூறுவோர் சிவ சங்கிராந்தவாதிகள் எனப்படுவர். மலம் நீங்கியபோது ஆன்மாவின்கண் சிவத்தின்

குணம் கலந்து (சங்கிரமித்துத்) தோன்றும் என்றல்பற்றி இவர் இப்பெயர் பெற்றனர்.

**(ஈ) மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:**

பாலைவனத்தில் உளதாகும் கானல் முதற் கண் தண்ணீர் ஆகவே தோன்றும்; அணுகிச் சோதிக்கும்போது தண்ணீர் அன்று என்பது விளங்கும். அதுபோல, ஆசான் அருள் வாய்த்து ஆராயாத போதெல்லாம் உணர்வுடையனவாகத் தோன்றும் கரணங்கள், அது வாய்த்து ஆராய்வாருக்கு உணர்வில்லவை என்பதே திடசித்தத்தால் தெளியப்படும். பதி ஞானம் முதலிய மூன்றும் ஆன்மாவின் உணர்வேயாம்; பதியருள் பெற்றபோது ஆன்மாவின் கண் விளங்கும் ஞானம் பதி ஞானம்; பாசம் நீங்கிப் பசுத்துவ வாதனை எனப்படும் யான் எனது என்னும் செருக்கு அருதபோது, ஆன்மாவுக்கு நிகழும் ஞானம் பசு ஞானம்; பாசமாகிய தத்துவங்கள் வாயிலாக ஆன்மாவுக்கு உளதாகும் ஞானமே பாச ஞானம் எனப்படும். படுதலின், பாச ஞானம் என்றது பற்றிப் பாசத்திற்கு ஞானம் உண்டென்றல் பேதைமை ஆம்.

இடம் பெயர்தல் என்னும் இயக்கம் அறிபொருளுக்கே உரியதோரியல்பு; ஆதலால், இரும்பினியக்கத்தை உணர்வு நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டுதல் சாலாது. மூகத்தின் ஒளியின் வேறாய்க் கண்ணாடியின்கண் நிழலென ஒன்றில்லை என்பது ஒளியினியல்புணர்ந்தார் துணிபு. ஆதலால் கண்ணாடியிற்றேன்றும் நிழலைக் காட்டுதலும் பொருந்தாது என விடுக்க.

**பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு**
**மற்றணைந்த**
**பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின்—**
**வாய்த்(து) அதனைக்**
**கண்டுணர்வார் இல்வழியிற் காணும்**
**அசத்தின்மை**
**கண்டுணர்வார் இல்லதெனக் காண்.**

[குருவருள் வாய்த்துக் கரணத்தின் உண்மையியல்பைக் கண்டுணர்வார்க்கு அசத்தின்மை இல்லது (அசத்தாந்தன்மையே உள்ளது) எனக் காண்—என முடிக்க. கண்டுணர்வார்—கண்டுணர்வார்க்கு என நான்கன் உருபு விரித்துரைக்கப்படும்.

(தொடரும்)

---

# ஆணையாளர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

**27-4-63** அன்று மன்னார்குடி சொக்கநாதசுவாமி மீனாட்சியம்மன் கோயிலில் திரு. டி. எஸ். சாமிநாத உடையார் M.L.A. அவர்கள் தலைமையில், பிரசங்க மண்டபம் அலுவலகக்கட்டிடம் ஆகிய வற்றை ஆணையாளர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**30-4-63** அன்று திருச்சி மாவட்டம் திருஈங்கோய்மலை மரகதாசலேசுவரர் கோயிலில், குடிநீர்த் தேக்க நிலையம் ஆணையர் அவர்களால் திறந்துவைக்கப் பெற்றது.

**30-4-63** அன்று திரு நாராயணபுரம் வேத நாரயணப் பெருமாள் கோயிலில், கல்யாண மண்டபக் கட்டிடக் கால் கோள் விழா ஆணையர் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது.

---

**இளையனூர் வேலூர்:** ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சித்திரைப் பெருவிழா
**மன்னார்குடி:** ஸ்ரீ சொக்கநாதர் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ மீனாட்சி திருமண விழா
**கடையம்:** ஸ்ரீ விஸ்வநாதசாமி ஆலயத்தில் சித்திரை உற்சவம்
**முழையூர்:** ஸ்ரீ ஞானாம்பிகை சமேத ஸ்ரீ பரசுநாதஸ்வாமி ஆலயத்தில் அக்ஷய திருதியை மகோற்சவம்
**திருக்கழுக்குன்றம்:** ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஆலயத்தில் பிரம்மோற்சவம்
**கொடுமுடி:** மகுடேஸ்வரர் தேவஸ்தானத்தில் சித்திரை மகோற்சவம்
**சென்னை:** ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வசந்த மகோற்சவம்

# நற்கலையை வெறுங்கலை மறைக்கின்றதா?

கோவை திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், B.A., B.L.

அண்மையிலே ஒரு ஆங்கில வார வெளியீட்டில் மேலே கண்ட தலைப்பில் ஒரு கட்டுரையை சுவாமி பிரணவானந்தர் என்ற அறிஞர் வெளியிட்டிருக்கிறார். (Illustrated Weekly dated 3-3-63 பக்கம் 30.) அக்கட்டுரை தென்னாட்டுத் திருக்கோயில்களின் வழக்கங்களை மறுத்துப்பேசுகிறபடியால் அதன் சுருக்கத்தை இங்கு எழுதுவோம்.

'நமது நாட்டுச் சிற்பிகள் திருவுருவங்களைச் சித்திரிக்கும்போது உடை அணிவகைகளையும் அவற்றில் பொருத்தி அமைக்கிறார்கள். ஆண் உருவமானால் உத்தரியம், கீழாடை, பூணூல் முதலியவைகளை அவ்வுருவத்திலேயே செதுக்கிவிடுகிறார்கள். பெண் உருவமானால் சேலை, கச்சு, மேலாடை முதலியவைகளையும் பொருத்திவிடுகிறார்கள். வெவ்வேறு வகையான தலைமுடிகளும் வெகு அற்புதமாக அமைக்கிறார்கள். ஒரு தேக்கு மரத்தில் எவ்வாறு சித்திரங்களைச் செதுக்கி உருவாக்க முடியுமோ அவ்வாறே கருங்கல் மாக்கல் முதலியவைகளிலும் செதுக்கி இருக்கிறார்கள். இந்த நற்கலைப் பணி பண்டைய கோயில்களில் காணலாம். பேளூர், சோமநாதபுரி, மதுரை, பேரூர், வேலூர் முதலிய கோயில்களில் காணலாம். மேலும், சங்கு, சக்கிரம், கதம், வில்லு, அம்பு, தண்டம், சூலம், பாசம், அங்குசம் முதலிய ஆயுதங்களும் வெகு நுட்பமாக அவ்வுருவங்களிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நுட்ப வேலைகளைக் கண்டு யாரும் ஆச்சரியப்படக் கூடும்.

இந்த அற்புதங்களைப் பொதுமக்கள் காண முடியுமா? மூலத்தான மூர்த்தியின் அழகை எவரும் காணமுடியாது. செயற்கை இயற்கை அழகுகளை இந்நாளில் கண்டு அனுபவிக்க முடியாது. பண்டைக் காலங்களில் அரிய சிற்பிகள் இயற்றிய திருவுருவங்கள் பூசாரிகளின் அறைகளுக்குள் வடநாட்டில் மறைக்கப்பட்டிருக்கின்றன. மடாலயங்களுக்குள் மூடப்பட்டிருக்கின்றன. மகந்துக்களின் பின்னறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களிலேயே துணிகள், ஆடைகள், ஒட்டு அணிகள் முதலியவைகளால் மறைக்கப்பட்டிருக்கின்றன.

திருவிழாக்களிலும் உலாக்களிலும் ஆடைகளாலும் அணிகளாலும் மாலைகளாலும் பூசாரிகள் திருவுருவங்களை மறைத்துவிடுகிறார்கள். பார்க்கிறவர்களுக்குத் திருவுருவத்தின் அழகு தெரிவதில்லை. ஒரே பூச்செண்டு மாதிரி தெரிகிறது. மிகவும் புகழ்பெற்ற திருமலை வேங்கடேசப் பெருமாளின் திருமுகம் பட்டை நாமத்தால் மறைக்கப்படுகிறது. கண்களையும் அப்பிவிடுகிறார்கள். மூர்த்தியின் அருட்பார்வை பக்தர்களின் மீது விழக்கூடாதோ? மற்ற மூலத்தானங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. தூண்களில் செதுக்கப்பட்டிருக்கும் அருமையான உருவங்களுக்கும் வெண்ணெய், சாந்து, திருநீறு குங்குமம், மஞ்சள் பொடி முதலியவைகளைத் தீட்டி அழகை மறைத்துவிடுகிறார்கள். பூசாரிமார் செய்வதுமட்டுமேயன்றிப் பொதுமக்களும் அவர்களைப் பார்த்துப் பார்வையினைக் கெடுத்துவிடுகிறார்கள். இந்தக் கெடுதலை அரசியலார் தடுக்க முடியாதா?' எனகிறார் கட்டுரையாளர்.

நமது பரத கண்டத்தில் ஜைனர் கோயில்களில் உள்ள நிர்வாண உருவங்களைத் தவிர மற்ற உருவங்களை எல்லாம் ஆடை ஆபரணங்களை நிரம்பப் புகுத்தி அலங்காரப்படுத்துவது தற்கால வழக்கமாகிவிட்டது. வட இந்தியாவில் மூலத்தான திருவடிவங்களை அலங்கோலப் படுத்திவிடுகிறார்கள். ஒரிசா மாகாணத்தில் உள்ள ஆலயங்களில் எல்லாம் இந்த அலங்கோலங்களைக் காணலாம். பூரி ஜகந்நாதம், புவனேசுவரம், முதலான ஆலயங்களில் பார்வைக்கு மிக அருவருப்பாக உருவங்கள் அலங்கரிக்கப்படுதலைக் காணலாம். ஆடைகள் மட்டும் அல்ல, ஆபரணங்களும் மிக அலங்கோலமாக இருக்கும். பூரியிலோ மூக்கணிகளின் ஆபாச வடிவங்களை நினைக்கவே முடியாது. குமாயூன் முதலான உத்தரப் பிரதேசங்களில்

இவ்வாறே காணலாம். மத்திய இந்தியாவிலும் குஜராத்திலும் ஆபாச நகைகள் காணலாம்.

தென் நாட்டிலோ கிரீடம், மாலைகள், காதணிகள், மூக்கணிகள், நாமங்கள், திருநீறு எல்லாம் நிஜ உருவங்களையே மறைத்துவிடுகின்றன. உற்சவ உருவங்களுக்கும் இவ்வாறான அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. முற்காலத்தில் தமிழ்நாட்டில் மூக்கணிகள் இல்லாமற்போனபோதிலும் இக்காலத்தில் தேவிகளின் உருவங்களுக்கு அவைகளை ஒட்டி வைக்கிறார்கள். தெலுங்கு நாட்டிலே இவை மிகுதி. இந்த வகையில் ஆடை ஆபரணங்கள் எந்தக் காலத்தில் ஏற்பட்டனவோ அறியோம். இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தால்தான் உண்மை விளங்கும். உத்தேசமாகச் சொல்லின், சென்ற இரு நூறு ஆண்டுகளாகத்தான் இந்த முறை தென்னாட்டில் புகுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். உண்மை உருவங்களில் மூக்குத் துளையும் மற்ற துளைகளும் இல்லையல்லவா?

திருவுருவங்களின் இலக்கணம் கூறுவன சிற்ப நூல்களும் ஆகமங்களும் ஆகும். உருவங்களை அலங்காரம் செய்யும் முறையும் அதே நூல்கள்தான் கூறுகின்றன. அந்நூல்களில் உருவங்களுக்கு ஆடைகள் உடுத்துவதும், அணிகளை ஒட்டுவதும் அந்நூல்களில் சொல்லப்படுகின்றனவா? சொல்லியிருந்தால் அம்முறைகளை எவ்வாறு கூறுகின்றன. எவை எவை எந்த மூர்த்திக்கு அணிவிக்க வேண்டும்? என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அணிவிக்க வேண்டிய அணி வகைகளை அந்நூல்கள் கூறுகின்றனவா? மேலும் மலர்கள் அணிவித்தால் உருவம் முழுதும் மூடிவிடும்படி கூறப்பட்டுள்ளதா? இது வெறும் பழக்கம்தானா? இக்கேள்விகளுக்கு ஆதாரங்கள் ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் இருந்தால் அறிஞர்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

# திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியீடு

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பெருந்தொண்டு ஆற்றிய திருவாசக மணி திரு. **கே.எம். பாலசுப்பிரமணியம், B.A.,B.L.** அவர்கள், அண்மையில் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள். அம் மொழிபெயர்ப்பு மிகவும் சிறந்த முறையில், ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. இச் சிறந்த திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா, அண்மையில் சென்னை சென்னமல்லேசுவரர் கோயிலில், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி **திரு. இராமச்சந்திர ஐயர்** அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அறநிலைய ஆணையர் திரு. **M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L.** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

அறநிலைய அமைச்சர் திரு. **எம். பக்தவத்சலம், B.A., B.L.** அவர்கள் நூலை வெளியிட்டுத் திருமயிலைக் கபாலீசுரர் தேவஸ்தானத் தருமகர்த்தர் திரு. **அய்யா சுப்பிரமணி முதலியார்** அவர்களின் சார்பாக நூலாசிரியருக்குப் பொன்னாடை போர்த்தியருளினர்கள். பேராசிரியர் திரு. **மு. டாக்டர் வரதராசனர்**, திரு. **சுத்தானந்த பாரதியார்**, திரு.வித்துவான் **முத்துக்கண்ணப்பர்,M.L.C.** ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள். தமிழகச் சட்டசபைத் தலைவர் திரு. **செல்லபாண்டியன்** அவர்கள் மணலி அறக்கட்டளைகளின் சார்பாகத் திருவாசகமணிக்குத் "**திருக்குறள்மணி**" என்ற விருதினையளித்துப் பொன்னாடை போர்த்துச் சிறப்புச் செய்தார்கள். வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அனுப்பியருளிய விபூதிப் பிரசாதம் முதலியவற்றை வழங்கிப் பாராட்டுரை கூறித் திருவாசக மணிக்கு ஆதீனத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தினர்கள். துணை ஆணையர் திரு. **டி. இராமலிங்கரெட்டியார், M.A., B.L.** அவர்கள் விழாவிற்கு வந்திருக்க சிறப்பித்த அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்.

# வரதன் வடிவழகு

[திரு. R. ஸ்ரீனிவாஸராகவாச்சாரியார், M.A.,B.O.L.,]

எரிபரிதி சந்த மகுடமும்
எழுமதியி கழ்ந்த வதனமும்
இருபகையி லங்கு குழலிருள்
எதிருறவு கந்த மகரமும்

ஒருதகவு யர்ந்த திருமகள்
ஒளிமறுவொ டொன்று மகலமும்
உருவருவு மிழ்ந்த வுதரமும்
உலகடைய நின்ற வடிகளும்

மருவினிடை பொங்கு புனலென
மலைகுனிய நின்ற மலையென
மருளறவி ளங்கு மொளியென
மலரயனி ரந்த பயனென

அருவிலுறை கின்ற வுயிரென
அடியவர டைந்த வமுதென
அருமறைக ளொன்றி யடிதொழ
அருளரசர் நின்ற தருமையே.

இது பன்னிரு சீராசிரியச்சந்த விருத்தம். ஒவ்வோரடியிலும் நான்கு பகுதிகள். ஒவ்வொரு பகுதியிலும் மூன்று சீர்கள். இரண்டாம் சீரில் ஒரு வல்லின மெல்லின மயக்கம். ஆக, நான்கு அடிகள், பதினாறு பகுதிகள், பதினாறு மயக்கங்கள் இப்பாட்டில் உள்ளன. பாட்டின் கடையெழுத்தைத் தவிர மற்றவெழுத்துக்களெல்லாம் குறில். ஒவ்வோரடியிலும் மோனைகளும் முதல் மூன்றும் பகுதிகளில் ரகர வெதுகைகளும் நன்கமைந்துள்ளன. **ஸ்ரீ தேசிகன் இயற்றிய மெய்விரதமேன்மை** யெனும் நூலில் இது பதினெட்டாம் பாட்டு.

## இறைவன் உருவுடையவனே

இறைவனுக்கு உருவுண்டு இல்லை என்ற விவாதம் தொன்று தொட்டு நடந்துகொண்டிருக்கின்றது. உருவிருக்குமாயின் இறைவனும் நம்மைப் போலவே பிறப்பிறப்புக்காளாய் விடுவான் ஆதலின் உருவில்லை யென்று கூறுகின்றனர். சற்றே ஆராய்ந்தால் இக்கொள்கை தவறுனதெனப் புலப்படும்.

நாஸ்திக மதத்தைக் கடந்து நிற்கும் நாம் பின்வருமாறு ஒத்துக்கொள்கிறோம். இவ்வுலக வமைப்புக்கு மூன்று முதற்பொருள்கள் தேவை. சேதனம் (உயிர்) அசேதனம் (ஜடப் பொருள்) ஈச்வரன் (இறைவன்) என்பனவே அம் முப்பொருட்கள். இம் மூன்று பொருள்களும் நித்யமானவை. (உத்பத்தி நாசமில்லாதவை.) ஜடப் பொருளின் ஸ்வரூபம் (உரு) ஸ்வபாவம் (தன்மை) இரண்டும் எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கும். சேதனப்பொருளின் ஸ்வரூபம் மாறாது. ஸ்வபாவம் மாறும். இறைவனுடைய ஸ்வரூபம் ஸ்பாவம் இரண்டும் மாரு. சேதனம் அசேதனம் இரண்டும் இறைவனுக் கடங்கியவை. இறைவன் சுதந்திரன். இம் மூன்று பொருள்களுக்கும் உள்ள வேற்றுமை யிவ்வளவே. நித்யமாய் இருத்தல் முப் பொருள்களுக்கும் பொது. இது இவ்வாறுக,

இறைவன், ஜடப்பொருள் என்னும் மூலப்ரக்ருதியை முறையே ஆகாசம் காற்று நெருப்பு நீர் மண் என்ற பஞ்சபூதங்களாகவும், இவைகளின் சேர்க்கையின் பரிணமங் களாகிய மலைகாடு ஆறு நிலம் முதலியவைகளாகவும் படைத்து, சேதனன் என்ற உயிர்ப் பொருளுக்குக் கண்வாய் மூக்கு உடல் போன்ற உறுப்புக்களைக்கொடுத்து, ஜடப் பொருள்களின் பரிணமங்களாகிற எல்லாவற்றையும் அனுபவிக்கச் செய்கிறுன். நன்மை தீமைகள், அவைகளின் பலிதமாகிய புண்ய பாபங்கள் முதலியவைகளையறிவிக்கும் சாஸ்த்ரங்களையும் கொடுத்திருக்கிறுன்.

பரிணமத்தில் ஸூக்ஷ்மம் (நுண்ணியது) ஸ்தூலம் (பெரியது) என்ற இருவகைகள் உள்ளன. இறைவன், அவனவன் புண்ய பாபங்களை யொட்டி, எப்பொழுதும் எவ்வித

மாறுபாட்டையும் எதற்கும் உண்டாக்கவல்ல வன். அவ்விறைவன் உறையுமிடம் வைகுந்தம் என்றும், நித்திய விபூதியென்றும் கூறப்படு கின்றது. அங்கு, எம்பெருமான் தன்விருப்பத் தினுல், முக்தியடைந்தவர்களின் இன்பத்திற் காக அழகிய தொரு திருவுருவுடன் இருக் கிருன். இதில் தவறில்லை. உடலிருந்தால் அது அழிவுள்ள தாகவே யிருக்கவேண்டுமென் பதில்லை உடலுள்ள சிறிய புழு பூச்சிகள் சில நாட்கள் இருப்பதையும் காண்கிருேம். யோக மஹிமையால் கடவுளருளால் மார்க்கண்டேயர் முதலியவர் சிரஞ்சீவிகளாக இருப்பதாக ஒத்துக் கொள்கிருேம். (சிரஞ்ஜீவி யென்பது ஒரே உடலுடன் நெடுநாள்வாழ்வதாகும்). இதே போல் அழிவற்ற உடல் கடவுளுக்கு இருக் கலாம். 'உருவில்லா இறைவன் நித்ய மாயிருக்கலாம்' என்று கூறுபவர்கள், உருவுள்ள இறைவன் நித்தியமாயிருக்கலாமென்று ஒத்துக் கொள்ளத் தயங்கினுல் அது அறிவின் குறைவே. நாத்திகத் தன்மையின் ஒருதோற் றமே. எல்லாம் வல்ல இறைவனுக்கு அஸாத் யம் (முடியாதது) ஒன்றுமில்லை ஆக, அவன் உருவுடன் இருக்கலாம். வேண்டுமானுல் உருவில்லாமலும் இருக்கலாம்.

கடவுளுக்கு உருவில்லை யென்போரும் இயற்கையின் அழகைக்கண்டு களிப்பது போல், சிற்சில ஸமயம் மனிதவுருவின் அழ கைக் கண்டு மயங்கி நிற்பது போல், கடவுளுக் கும் உருவம் இருப்பதாக ஒத்துக்கொண்டு விக்ரஹங்களில் அதனழகைக் கண்டுகளிக்கத் தடையில்லை. கடவுளின் இவ்வடிவழகு கவி களால் எவ்வாறு வர்ணிக்கப்படுகின்றது என்று கவிச்சுவையைத் துய்ப்பதில் தவறில்லை.

## வரதனுடைய ரூபலாவண்யம்

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுடைய அழகிய திருமேனியை—ஸௌந்தர திவ்யமங்கள விக்ரஹத்தை நித்யர்களும் முக்தர்களும் இடை விடாது அனுபவிப்பதுபோல், இந்நிலவுலகில் காஞ்சியில் அருளாளப் பெருமானின் (வரதன்) திருமேனியழகை இங்குள்ளார் அனுபவிக்கிருர் கள். வைகுண்டத்திலுள்ளவர்கள் பரவாஸு தேவனை அனுபவிப்பதனிலும் இந்நிலவுலகி லுள்ளார் காஞ்சியில் பேரருளாளனை அனுப விக்கும் இவ்வனுபவம் மிகமிகச் சிறந்தது என்று நன்குணர்ந்த ஸ்ரீ தேசிகன்,

'நிரந்தரம் நிர்விசதஸ்த்வதீயம்
அஸ்ப்ருஷ்ட சிந்தாபத மாபிரூப்யம்
ஸத்யம் சபே வாரண சைலநாத
வைகுண்ட வாஸேऽபி நமேऽபிலாஷ:'

என்கிருர்.

மனத்திறம் கடந்தநின்வடிவின் மேன்மையில்
தினைத்துணையிடைவிடாத்தினைக்கும் யான் கரிப்
புனைப்பெயர் மலையனே! புகல்வன் சத்தியம்
இனிப்பதோர் வைகுந்தம் பெறினும் ஏற்கலன்

என்று பொருள். தெய்வநாயகன் வடிவழகைப் பற்றி 'நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே' என்று வேறிடத்தில் கூறும் ஸ்ரீ தேசிகன் இங்கு இவ்வடமொழிக்கவியில், இவ் வரதன் வடிவழகை இடைவிடாது காணும் நிலை அப் பிறவாநிலையினும் மிகச்சிறந்தது என்று கூறும் நயமே நயம்.

## பிரமன் வேள்வி

பரம் பொருளைக்காண விரும்பிய பிரமன் மெய்விரதம் என்னும் நிலப்பகுதியில் காஞ்சீபுரம் என்னும் புண்ணிய நகரத்தில் அச்வமேத யாகம் செய்தார். அந்த யாகத்தில் யாக வேதி (மேடை) யிலிருந்து தோன்றிப் பிரமனுக்குக் காட்சியளித்த அப்பரம் பொருளுக்கே வரதன் என்று பெயர். அச்சுந்தரமூர்த்தியை இன்றும் நாம் காணலாம். வைத்தகண்களை வாங்க முடியாது. மிகப் பெரியோர்களெல்லாம் வரதன் வடிவழகைக்கண்டு மயங்கியுள்ளனர். அவர் களில் ஸ்ரீ தேசிகனும் ஒருவர். அவர் தம் அனுப வத்தை மேற்கூறிய சந்தவிருத்தத்தின் வாயி லாக வெளியிடுகிருர்.

## விருத்தச் சிறப்பு

இவ்விருத்தத்தில் எம்பெருமானுடைய சில திருஅவயவங்களின் வர்ணனையும் வேதாந்த தத்துவமும் ஒருங்கு நின்று உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. நடனமாடுபவர்கள் இச்சந்தவிருத்தத்தினும் இனியதாய்த் தங்கள் நடனத்திற்கிசைந்த மற்றொரு பாட்டைக்காண முடியாது. இப்பாடல் உண்மையில் முடவனை யும் நடனமாடத்தூண்டும். எம்பெருமானுடைய

திருமுடியிலிருந்து திருவடிவரை யமைந்துள்ள செயற்கை இயற்கையெனும் இருவகையழகையும் இப்பாசுரத்தின் முன்னிரண்டு அடிகள் கூறுகின்றன.

## 1-1 எரிபரிதி சந்த மகுடமும்

(பொருள்) தேவாதிராஜன் இப்பெருமானே யென ஐயமறத் தெரிவித்துக் கொண்டு விளங்கும் அவனணிந்துள்ள திருமுடி, அனற்பிழம்புகளை அள்ளிவீசி ஜ்வலித்துக் கொண்டும், ஆயினும், காண்பார் கண்கள் கலங்காதபடி குளிர்ந்தழகாயும் இருக்கும் (ஒரு கல்பனை) தினகர (ஸூரிய)னையொத்து விளங்கிற்று.

## 1-2 எழுமதியி கழ்ந்த வதனமும்

(பொ) அவ்வெம் பெருமானுடைய திருமுகமண்டலம் உதயமாகும் சந்திர மண்டலத்தையும் தன்னழகால் வென்று விளங்கியது.

## 1-3.4. இருபகையி லங்கு குழலிருள் எதிருறவு கந்த மகரமும்

(பொ) ஒளியைக்கண்டால் ஒளிந்து மறையும் இயல்புடைய இருளை,ஒளிகளில் சிறந்த சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் நிறுத்திக் காட்டும்அகடிதகடனசக்தி(சேராததைச் சேர்க்கும் வல்லமை)யையுடைய இவ்வெம்பெருமானுடைய திருக்குழல்கள் என்னும் இருள், அவனுடைய கிரீடமென்னும் சூரியனுக்கும் முகமெனும் சந்திரனுக்கும் இடையில் அழியாமல் நிலைத்து நின்றது. அத்தகையதும் அடர்ந்து இருண்டு திருமுகமண்டலத்தின் இரு பக்கங்களிலும் தொங்குகின்றதுமான திருக்குழல்களின் எதிராகக் காதுகளில் அவனணிந்துள்ள மகரக்குழைகள் இரண்டும் மிகுந்த உவகையுடன் இலங்கின. தங்களைக் காட்டிலும் ஒளியில் சிறந்த மகுட சூரியன் முகசந்த்ரன் இவையிரண்டுமே குழற்கற்றையெனும் இருளைப் போக்கமுடியாமல் ஏங்கும்பொழுது, தங்களுக்கு அவ்விருளைப் போக்க முடியவில்லையே யென்ற ஏக்கம் அம் மணிமய மகரக் குழைகளுக்கு இல்லையாதலின் அவைகள் ஸந்தோஷமாகவேயிருந்தன. வல்லவர்களே அவமானத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும் பொழுது வல்லாரல்லார் பொறுத்துக் கொண்டிருப்பதிலும் உவகையுடனிருப்பதிலும் ஆச்சரியமென்ன? "முக சந்த்ர மௌளிதினகர மத்யஸ்தித:" என்று அச்சுத சதகம் எனும் நூலில் வர்ணிக்கும் ஸ்ரீ தேசிகன் இங்கு மூன்று ஒளிகளின் இடையில் இருளையழியாமல் நிலை நிறுத்தும் கடவுள் திறத்தைச் சிறக்க வர்ணித்திருப்பது மிகவும் சுவைக்கற்பாலது. பரமன் முன்னிலையில் பரஸ்பரம் பகைவர்களாயிருப்பவர்களும் பகையிழந்து ஸௌஜன்யத்துடன் நிற்பார்கள் என்பதும் இப்பகுதிகளின் பொருளாம்.

## 2-1.2. ஒருதகவு யர்ந்த திருமகள் ஒளிமறுவொ டொன்று மகலமும்

(பொ) அடியார்களை அருளும் விஷயத்தில் எம்பெருமானைக் காட்டிலும் பலபடி உயர்ந்து நிற்கும் திருமகள், அவ்வெம் பெருமானுடைய திரு மார்பகத்தில் கௌஸ்துபம் என்னும் ரத்னத்துடனும் ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவுடனும் சேர்ந்து வசிக்கின்றாள். அவள் அங்கு விசேஷித்து வஸிப்பதற்குக் காரணம், எம்பெருமான் திருவுள்ளத்தில் சிற்சில ஸமயம் அடியார் திறத்துண்டாகும் அருளின்மையை முளையிலேயே கிள்ளியெறிந்து விடவேண்டும், அருளென்னும் பயிரை நன்கு வளர்க்க வேண்டும் என்ற நினைவுதான் என்கிறார் ஸ்ரீதேசிகன்; திருமகளுக்கு 'ஒருதகவுயர்ந்த' என்ற அடைமொழி கொடுத்து இதை விளக்குகிறார். அத் திருமகளமர்ந்ததனால் உண்டான பூரிப்பினால் எம்பெருமான் திருமார்பு மிகவும் அகன்று விளங்கியது.

## 2.3. உருவருவு மிழ்ந்த வுதரமும்

(பொ) பரந்த மார்பகத்தின் கீழ் எம்பெருமானின் இடை மிகச் சிறுத்து விளங்கியது. ப்ரளய காலத்தில் திருவயிற்றில் அடக்கி வைத்திருந்த சேதநாசேதநப் பொருள்களெனும் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டி காலத்தில் வெளியிட்டு விட்டதுதான் அவ்விடை அவ்வாறு சிறுத்தற்குக் காரணம் என்கிறார் ஸ்ரீதேசிகன். வேறிடத்தில் 'விச்வம்விகீர்ய விபுதேச்வர ஜாதகார்ச்யம்' என்று இதே கருத்தை வெளியிடுகிறார். பெற்றவள் வயிறு சிறுத்து விடுவது இயல்புதானே.

## 2-4. உலகடைய நின்ற வடிகளும்

ஒன்றையொன்று ஒத்து நிற்கும் பேருளாளன் திருவடிகள் உலகோர் தம்மை அடைந்துய்வதற்காக எப்பொழுதும் ஜாக ரூகஸ்களாய்

(விழிப்புடன்) நிற்கின்றன. எப்பொழுது எவர் கூப்பிடுவாரோ, எப்பொழுது எவர்களைக் காப்பாற்ற ஓடவேண்டியிருக்குமோ வென்று அத் திருவடிகள் எழுந்து தயாராக நிற்கின்றன வென்பதும் இப்பகுதியின் பொருளாம்.

இவ்வாறு இயற்கையழகும் செயற்கையழகும் வாய்ந்து விளங்கும் எம்பெருமானுக்குப் பாசுரத்தின் பின் இரண்டடிகளால் பல உவமைகள் கூறி ஸ்ரீதேசிகன் நம் உள்ளத்தில்பதிய வைக்கும் அழகை இனித் துய்ப்போம்.

## 3.1. மருவினிடை பொங்கு புனலென

(பொ) பாலைவனத்தில் கடும் வெயிலில் தண்ணீர்விடாயினால் தவிக்கும் ஒருவன் குபுகுபுவென்று பொங்கிவழியும் இனிய நீருடைய ஒரு வற்றா ஊற்றைக் கண்டாற் போல, எங்கும் போய்ப் புகல்காணா இவ்வுலகெல்லாம் இவ்வரத ராஜனைக்கண்டு குளிர்ந்தின்புறுகின்றன. இவ்வெம்பெருமான் இங்கு ஆவிர் பாவம் செய்தற்குக் காரணமாயிருந்த நான்முகக் கடவுள் 'எண்ணிய நற்புவனங்கள் ஏழுமாறும் இருமூன்று தீவும் எட்டிடமும் விட்டு' அடைந்த இக்காஞ்சியெனும் இடமும், இவ்வெம்பெருமானும், அந்நான் முகக் கடவுளுக்கும் நமக்கும் மருவில் புனலென விளங்குவதில் வியப்பொன்றுமில்லை.

## 3.2. மலைகுனிய நின்ற மலையென

(பொ) இவ்வெம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கருவூலம் கரிகிரி (ஆனைமலை) யென்ற ஒரு சிறு குன்றின்மேல் அமைந்திருக்கின்றது. அக்குன்றைச் சுற்றி மதில்கள் கட்டப்பட்டுவிட்டபடியால் அக்குன்று இப்பொழுது காணப்படுவதில்லை. பெரிய பீடத்தில் சிறிய உருவம் ஆனைமேல் ஈ கொசுபோல் நன்கு விளங்க முடியாதென்று நினையாதீர். கவர்ச்சியிலும் காம்பீர்யத்திலும் அக்குன்றினும் சிறந்து நிற்கும் இவ்வெம்பெருமான் கரிகிரியைக் கபளீகரிக்க (வாய்திறந்து விழுங்க) வந்த மற்றொருமலையேபோல் அக்குன்றின் மேல் நிற்கின்றான். (ஈடு 7.3.1. பார்க்கவும்). இது இவ்வண்ணம் தான் என்பதை இன்றும் வரதன் பெரிய யானை வாஹனத்தில் கம்பீரமாய் ஊர்வலம் வருவதைச் சேவித்து ஐயம் தீரலாம்.

## 3.3. மருளறவி ளங்கு மொளியென

(பொ) நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு ஐயமும் திரிபும் ஒருபங்கு உண்மையறிவும் பெற்றுத் துன்புறும் உலகம், நூற்றுக்கு நூறுபங்கு உண்மையறிவுபெற்றுப் பேரின்ப நிலை எய்தினாலென்ன, இவ்வெம்பெருமானைக் கண்டு இன்ப நிலையை எய்துகிறது. தான் மருளற்று விளங்குவதோடு தன்னையடைவாரும் மருளற்று விளங்கச் செய்யும் ஒளியாக எம்பெருமான் திகழ்கின்றான்.

## 3.4. மலரயனி ரந்த பயனென

(பொ) இவ்வெம்பெருமானை நேரில் காண எண்ணியே நான்முகன் காஞ்சியில் அச்வமேதயாகம் செய்தது. அந் நான்முகன் இரந்து வேண்டியபயன் இதுவேயென்பதை மெய்ப்பித்துக் கொண்டு இவ்வெம்பெருமான் திருக்கோயில் கொண்டு நிற்கின்றான்.

## 4.1. அருவிலுறை கின்ற வுயிரென

(பொ) 'நானே கடவுள்' என்பாரைப் போலன்றி என்னில் கடவுள் உறைகின்றான்' என்பவர் ஸித்தாந்தத்தை மெய்ப்பித்துக் கொண்டு இவ்வெம்பெருமான், அசேதனப் பொருள்களில் போலச் சேதனப் பொருள்களிலும் உள்ளே உறைகின்றான். உற்று ஆராய்ந்து நோக்கின் கடவுள் இல்லையென்பவனுக்கும் நன்கு விளங்கும். நாஸ்திகன், 'நான் என்னும் பொருள் தோன்றியழியும் பொருளென்கிறான். 'நானே கடவுள்' என்பவன் 'நான்' என்பது அழியாப்பொருள் என்கிறான். நம்மைத் தவிர வேறு கடவுளில்லையென்பதில் இருவருக்கும் ஒற்றுமை. இத்தகைய நாத்திகம் இங்கு மறுக்கப்படுகின்றது.

## 4.2. அடியவர டைந்த வமுதென

(பொ) முன்பு திருப்பாற்கடல் கடைந்த பொழுது திருமாலருளால் தேவர்கள் அடைந்த அமுதுபோல் இக்காலத்தில் இந்நிலவுலகத்தில் அடியவர் (அடி உலகத்திலுள்ளவர்) அடைந்த புதிய அமுதேபோல், திருமால் தன் திருவுருவக் காட்சியளித்துக்கொண்டு நிற்கின்றான்.

## 4.3. அருமறைக ளொன்றி யடிதொழ

(பொ) எம்பெருமானைத் தேடித் திரிந்து அவனையடைய முடியாமல் களைத்து நிற்கும்

# காந்தாரப்பண்ணின் இருவகைகள்

திரு. வித்வான். வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைநகர்.

## 1. காந்தார பஞ்சமம்

அப்பர் பெருமான் திருவாக்கில் உதித்த காந்தார பஞ்சமத்தில் வரும்பதிகங்கள் இரண்டாகும். அவை 'முளைக்கதிரிளம்பிறை' 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்குவன.

**முளைக்கதிரிளம்பிறை** :—இப் பதிகத்தில் முக்கியமாகக் குறிக்க வேண்டிய பகுதி சேக்கிழார் சுவாமிகள் எடுத்தாண்ட பொருளும் சொற்றொடரும் இதன்கண் அமைந்துகிடப்பது ஒரு சிறப்பாகும். கெடில நதியைக் கூறுமிடத்து, சேக்கிழார் பெருமான் "பொன் திரளும் மணித்திரளும் பொருகரி வெண்கோடுகளும் மின்திரண்ட வெண்முத்தும் விரை மலரும் நறுங்குறடும் வன்திரைகளால் கொணர்ந்து'—என்றும், "தென்திசையிற் கங்கையெனும் திருக்கெடிலம்" என்றும் சொல்லியிருப்பதும் இப்பதிகத்தில் உள்ளவைகள். 'செய்யபொன் கிளைத்துழித் தோன்றிடுங் கெடிலவாணரே' என்பதனாலும், 'தென்திசைக் கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே'— என்பதனாலும் அறியலாம்.

இனி ஒரு பாடலில் 'மங்கையைக் கெழுவின யோகினர்' என்பது 'மங்கையோடிருந்து யோகு செய்வானை' என்று திருவிசைப் பாக்காரருக்குக் கருத்து உதவியதும்,

> 'போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப்
> புரிதல் ஓரார்
> யோகியா யோகமுத்தி உதவுதல்
> அதுவும் ஓரார்'

என்ற சித்தியார்க்கு இலக்கியம் ஆவதும் ஆன பகுதியாகும். எம்மையாளுடைய பெருமக்களாகிய மூவர் முதலிகள் தமது திருப்பாசுரங்களில் இறைவனுர் இயல்பினைக் கூற வருங்கால் பல அணிபடவும் அமைத்துப் பாசுரம் தோற்றுவிக்கின்றனர். இப் பதிகத்தில் அப்பர் பெருமான் திருவாக்கில் தோன்றிய ஒரு தற்குறிப்பேற்ற அணி :—சிவபெருமான் சடாபாரத்தில் கங்காதேவி, சந்திரன், பாம்பு, சிரித்துக்கொண்டிருப்பதாகிய நகுவெண்டலை, இவைகளை வைத்துக்கொண்டு தற்குறிப்பேற்றம் செய்கிருர். பாம்பைக் கண்டதும் கங்காதேவி பெண்பால் ஆனதால் அஞ்சுகின்ருள். அவர் தோற்றம் மயிலைப்போல் காணப்படுவதால் மயிலைக் கண்டு பாம்பு அஞ்ச, மற்றொரு பொருளாகிய சந்திரனும் அப் பாம்பைக் கண்டு அஞ்சுகிறது. இயற்கையாய்ச் சிரித்துக் கொண்டிருக்கும் வெண்டலை இவற்றைப் பார்த்துச் சிரிப்பதாகத் தற்குறிப்பேற்றம்.

---

வரதன் வடிவழகு.........

வடமொழி நான் மறைகள் போலன்றி அரிய மறைகளாகிய ஆழ்வார்களுவந்தளித்துள்ள தென்மொழி நான் மறைகள் அவ்வெம்பெருமானைக்கண்டு அவன் திருவடிகளின் பெருமையைக் கூறித் தொழுகின்றன.

### 4.4. அருளரசர் நின்ற தருமையே

(பொ) இவ்வாறு காஞ்சியில் கரிகிரிமேல் அருளாளப் பெருமான் அயனுக்காகத் தோன்றி நின்று காட்சியளித்தது பெறற்கரிய பேரின்பக் காட்சியே.

இத்தகைய வரதன் வடிவழகைக்கண்டு ஸாலம்பனஸமாதியில் நிற்பவர் இங்கும் அங்கும் பேரின்பம் பெறுவர் என்பது கவியின் கருத்து.

(குறிப்பு :—'நின்ற பெருமையே' என்று பலர் படிப்பர். அப்பாடத்தில் மோனை முறிவதுடன் வினைச்சொல்லும் கிடைக்காமற்போம். பிறபாடசோதனங்களையும் இவ்வாறு காண்க.)

அப் பாசுரம் :—

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே.

என்பதாகும்.

அடுத்து 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் பாசுரமாகும். இதில்,

'கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
நமச்சி வாயவே'

என்பது சரித்திரத்தில் அகச் சான்றுக இருக்கிறது. மூன்ருவதுபாட்டில் 'உண்ணிய' என்பது பெயரெச்சமாகாமல் வினையெச்சப் பொருள் தந்தது. இதனைக் 'கல்லால் நிழல்மலைவில்லார் அருளிய' என்னும் சிவஞான போதச் சூத்திரத்திற்கு 'அருளிய' என்ற தொடர்க்கு மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது.

உலகில் மாந்தர் ஒரு சிறு துயர்தாமே தீர்த்துக்கொள்ளலாம் படியது; அல்லது பொறுத்துக் கொள்ளலாம் படியது. ஆயினும் அதனைக் களைவதற்குப் பிற செல்வரைப் போய்க் கெஞ்சிச் சுற்றித் திரிகின்றனர். தங்கள் வயிறு ஓம்புதற்கு ஓரளவு சிறிய பொருள் தாங்களே தேடிக் கொள்ளலாம் வலிவு இருந்தும், செல்வரைப் பின்சென்று பல்லைக் காட்டி இரந்து சுற்றித் திரிகின்றனர். உற்றுழி உதவு பவன் சிவனே. அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்குபவனும் சிவனே என்று பேதை மாந்தர்க்கு உணர்வு கொளுத்தும் பொருட்டுக் கூறுவார் போன்று நமது வாகீசப் பெருந்தகை.

'இடுக்கண்பட் டிருக்கினு மிரந்து
யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ
மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின்
நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி
வாயவே'

எனக் கூறியுள்ளனர்.

நாம் ஒரு விஷயத்தில் தெளிவு பெருமல் இருக்கலாம். இது செய்வது இது தவிர்வது என்று துணிவு பெருமல் மனம் சுழற்சி அடைய நேரலாம். சில சமயத்தில் மனத்தில் ஒன்றும் விளங்காமல் இருள்மூடிக்கிடக்கப் பகற்குருடாய் இருக்க நேரலாம். அல்லது துன்பம் முதலியன சூழ்ந்து மனத்தில் அறிவு நுழைவதற்கு இடமில்லாமல் இருக்கலாம். இச் சமயங்களில் அவற்றிலிருந்து நீங்கி உள்ளத்தில் அறிவு ஒளி (அ) அருள் ஒளி தோன்றவேண்டுமாகில் இது செய்க என்று ஓர் அரிய உபாயம் கூறுவாராய் "நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்னும் திரு ஐந்தெழுத்தாகிய விளக்கை உள்ளத்தில் ஏற்றுவீராயின் மேற்கூறிய பலன் எய்தலாகும் என்பது இதனுல் பெறப்படுகிறது.

ஒவ்வொரு பதிகத்திலும் இறுதித் திருக்கடைக் காப்பு இயற்றி அப் பதிகத்தின் பயனைக் கூறுவது திருஞான சம்பந்தர் பதிகத்திலும், வன்றெண்டப் பெருந்தகை பதிகத்திலும் காணப்பெறுவதாகும். அப்பர் பெருமான் வாக்கில் இறுதிப் பாட்டில் இராவணனுக்கு அருள்புரிந்த தன்மையைக் கூறுவதே திருக்கடைக் காப்பாக அமைவதன்றி, பதிகத்தின் பயன் கூறுவதில்லை. எனினும் இப் பதிகத்தில் 'நமச்சிவாயப் பத்து ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே' என்று பயன்கூறும் திருக்கடைக் காப்பாக அமைந்துள்ளது கருதத்தக்கது.

## 2. பியந்தைக் காந்தாரம்

இதில் வருவது 'சிவனெனும் ஓசை' எனத் தொடங்கும் பதிகமாகும்.

சுந்தரமூர்த்தி நாயனுர் திருத்தொண்டத் தொகையில் அடியார்க்குப் பல அடைமொழிகள் கொடுத்து வந்தவர், திருநாவுக்கரசு நாயனுர்க்குத் 'திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட' எனக் கொடுத்துள்ளனர். இந்த அடைமொழி அவர்க்கு எங்கிருந்து கிடைத்தது? இந்தப் பதிகத்தில் அவர் வாக்கில் 'திருநின்ற செம்மையுளதே' என்பதிலிருந்துதான் கிடைத்தது. இனி அத் தொடர்க்குப் பொருள் காண்பாம். திருநின்ற செம்மை—இதில் திரு என்னும் பல பொருள் ஒரு சொற்குச். செல்வம் என்பதும், அச் செல்வத்துள் எல்லாம் தலையாய அழியாத செல்வ

மாய் முத்தி என்பதே சீரிய பொருளாகும். செம்மை என்பதற்கு முத்தியடையும் செந் நெறி என்று பொருள். அதிலே அழியாச் செல்வமாகிய முத்தி இன்பத்தை அடைதற் குரிய நெறிகளில் செம்மையாகிய நெறி சைவ நெறி என்பதாகும். இதுவே திருநெறிய தமிழ் என்று சம்பந்தர் திருவாக்கால் விளக்கி யருளியதும், அத் தொடரில் திரு என்ற சொல் முத்திச் செல்வம் என்னும் பொருளில் அமைந்து நிற்பதும் கண்டு உணர்க.

இந்தப் பதிகத்தின் திரண்ட பொருள் அம்மை ஒரு கூருய் நிற்கின்ருள் என்றும், பாம்பு, தோல், வெண்தலை முதலிய அஞ்சத் தக்கவும், அருவருக்கத்தக்கவும் ஆகிய பொருள்களை அணிந்து மண்டை ஓடு கை யேந்திப் பிச்சை புகுதலும் சுடுகாட்டைத் தங்கு மிடமாகக் கொள்வதும் ஆகிய தன்மையோடு காணப்படுவார். ஆயினும் அவ்வவற்றின் உள்ளுறை அறிந்து மேலான அணிகலன் முதலியவற்றை நோக்காது, அவரையே தலைப் படுமின் என்பது இப் பதிகத்தின் திரண்ட பொருளாகும்.

இப் பண்களைப்பற்றிக் கல்வெட்டில் காணப் பெறும் குறிப்பு:—

புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ள திருமெய்யம் என்னும் ஊரில் பாறையைக் குடைந்து கட்டப்பட்ட சிவன் கோயிலில் பல்லவ கிரந்தத்தில் செதுக்கப்பெற்று மிகவும் உதிர்ந்துபோன ஒரு துண்டுக் கல்வெட்டில் (1) ஸ்வஸ்திஸ்ரீ (2) ரிஷபம் (3) காந்தாரம் (4) பஞ்சமம் (5) தெய்வதம் (6) நிஷாதம் (7) மத்யமம்.

எனச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக் கல்வெட்டு வாகீசப் பெருந்தகையார் காலத்தில் இருந்த பல்லவ அரசனாகிய முதலாம் மகேந்திர வர்மன் காலத்தது ஆகும். (S. I.I. Vol. XII The Pallavas Page 3 Number 7 A.) இக் கல் வெட்டின் முழுப் பகுதியும் கிடைத்திலது. எனினும் இதில் காணப்பெறும் காந்தாரம், பஞ்சமம் என்பன பண்களைக் குறிப்பனவாகக் கொள்ளலாம்.

இதுகாறும் கூறியவற்ருல் காந்தாரம் என்பது ஒரு சிறந்த பண் என்பதும், மூவரும் பாடிய பெருமையுடைய தென்பதும், நமது சம்பந்தப் பெருமானே தமது திருவாயால் விதந்து ஓதப்பட்ட பெருமையுடையதென் பதும், அது ஐயாற்றுப் பதிகத்தில் வைக்கப் பெற்றதென்றும், அது மூன்று பிரிவையுடைய தென்பதும், அது மூன்று கட்டளையுடைய தென்பதும், அதுவும் ஏனைய பண்களுக்குரிய கட்டளைகளைப் போல இந்தப் பண்ணுக்குக் கூருமையால் உரையிற்கோடலால் மூன்று கட்டளையுடையதென்பது அறியப்படுமென்றும், அதிலும் அதன் வகைகளிலும் கூறப்படுகிற பாசுரங்கள் சிலவற்றில் அமைந்துகிடந்த பொருட் சிறப்புக்களையும் இன்னும் பிறவற்றை யும் ஒருவாறு கூறியதாம்.

---

**திருநெல்லிக்காவல் :** ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீநெல்லிவனநாதசாமி கோவில் பிரம்மோற்சவம்

**ஸ்ரீமுஷ்ணம் :** ஸ்ரீ பூவராக ஸ்வாமி ஆலயத்தில் சித்திரைத் திருவிழா 29-4-63 முதல் 9-5-63 வரை நடைபெற்றது.

**திருச்சி :** தாயுமானவர் திருக்கோவிலில் சித்திரைத் தேர், பெருந்திருழா

**திருநாராயணபுரம் :** கல்யாண மண்டபம் கால்கோள் விழா 30-4-63

**திரு அழுந்தூர் :** ஸ்ரீ வேதபுரீஸ்வரர்சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திருவிழா

**பரம்பக்குடி :** ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் கோயிலில் சித்திரைத் திருவிழா
ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோவிலில் கோடைத் திருவிழா
ஸ்ரீ விசாலாக்ஷியம்பிகா சமேத ஸ்ரீ சந்திரசேகரஸ்வாமி கோவில் சித்திரைத் திருவிழா

**திருப்பனந்தாள் :** தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த ஸ்ரீ அருணஜடேஸ்வரர் ஆலயத்தில் சைத்ர மகோற்சவம்

**எட்டிகுடி :** ஸ்ரீ சுப்ரமணியஸ்வாமி ஆலயத்தில் சித்ராபருவ உற்சவம்

**தூத்துக்குடி :** ஸ்ரீ சங்கர ராமேஸ்வரர் ஆலயத்தில் சித்திரைப் பெருந் திருவிழா

**சென்னை :** அரண்மனைக்காரத் தெருவிலுள்ள ஸ்ரீ கச்சபேசுவரர் ஆலயத்தில் பிரம்மோற்சவம்

**சோளசிம்ஹபுரம் :** ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மஸ்வாமி ஆலயத்தில் பிரம்மோற்சவம் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி உற்சவம்

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி]

( முன் இதழ்த் தொடர்ச்சி )

திருக்கச்சிநம்பிகள் மனம் வெகு வேகமாகச் சிந்தை செய்தது. அநாதியாக வந்த ஸ்ரீ வைஷ்ணவக் கோட்பாடுகளோடு ஒட்டியதே இளையாழ்வாரின் இந்தக் கோரிக்கை எனினும்... இக் கொடுவுலகம் தேகத்தோடே கழியும் வருண உயர்வு தாழ்வை யல்லவா மதக் கோட்பாடுகளைவிட உயர்வாக மதிக்கிறது! இளையாழ்வார் கோரிக்கையை நான் பூர்த்தி செய்ய முற்பட்டால் உலகம் என்னை ஒப்பி விடுமா? ஒப்பாவிட்டால் போகிறது என்று நான் இருந்து விடலாம். ஆனால் இளையாழ்வார்! அவர் ஸ்ரீ ஆளவந்தாருக்குப்பின் இந்த வைணவ தரிசனத்தை ஏற்று நடாத்தவென்றே இட்டுப் பிறந்தவர். அப்படித்தானே ஸ்ரீ ஆளவந்தார் இவரை இங்கு வந்து கடாக்ஷித்த அன்று என்னிடம் அந்தரங்கமாகக் கூறினர். ஆளவந்தாரைப் பள்ளிபடுத்த இடத்திலும் அங்குள்ள முதலிகள் அனைவரும் இவரையே தரிசனப் பிரவர்த்தகர் (மதப் பிரசாரத் தலைவர்) என்று தேர்ந்து கூறியதாக இளையாழ்வாரே கூறியிருக்கிறாரல்லவா? மேலும் ஸ்ரீ ஆளவந்தாரின் மூன்று குறைகளையும் நிறைவேற்ற இவர் வாக்களித்திருக்கிறாரே. அதில் பிரம்ம சூத்திரத்துக்கு அநாதி விசிஷ்டாத்வைத முறையில் ஒரு பாஷ்யம் செய்வது என்றல்லவா? இன்று இவர் எண்ணத்தின்படி நான் நடந்து விட்டால் இவர் செய்யப்போகும் பாஷ்யத்தை இப்போதைய அறிஞர் குழு தீண்டுமா! ஐயோ! வைணவத்தைவிட ஜாதீயமல்லவா தலைவிரித்தாடுகிறது. நம் செயலால் இளையாழ்வார் வாழ்வுக்கும் பெயருக்கும் ஒரு பழி (அது அடாப்பழியாயினும்) நேர்ந்துவிடக் கூடாது. இவற்றையெல்லாம் நாம் எண்ணியபடியே சொன்னால் இளையாழ்வாரின் இப்போதைய மனநிலை ஏற்காது. எனவே நம்மையழித்தேனும் அவரையும் அவர் பெயரையும் காத்து அவரால் உலகுபெறக்கூடிய நிரந்தரமான பலனை நிறைவேற்ற வேண்டும்' என்று தீர் மானித்தவராய் இளையாழ்வாரை நோக்கி "இளையாழ்வாரே! நான் ஒரு விஷயம் கூற வேண்டும். சாவதானமாய்ப் பதட்டமோ வியப்போ இன்றிக்கேளும். "கிமம்யத்ராபி ஜாயந்தேயோகி நஸ்ஸர்வயோ நிஷ—ப்ரத்ய க்ஷிதாத்ம நாதானம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்றபடி ஸர்வலோக சரண்யனை திருமகள் கேள்வனின் நிர்ஹேதுக கருணைக்கு இலக்கான அடியார்கள் எந்தக் குலத்திலும் பிறந்திருப்பார்கள். ஆகையால் அத்தொண்டக் குலப் பெரியோர்களிடத்தில் அல்ப புத்தி பண்ணக்கூடாதென்று சொல்லப் படுகிறபடியே நீரும் முதிர்ந்த ஆன்ம குணங்கள் அமையப்பெற்ற பரமவைதிக நிஷ்டராகையாலே பேருளாளன் உழைக்கொரு புள்ளி மிகையன்று என்று கொண்டு பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டிருப்பதை நோக்கி இவ்விதம் ஒன்று செய்ய விருப்பமுற்றீர்! அது ஸ்ரீ வைஷ்ணவத்தின் அநாதியான கோட்பாடுகளுக்கு முற்றிலும் ஒத்தது தான். எனினும் இதில் ஒரு இடையூறு இருக்கிறதை நீர் அறியமாட்டீர். கருவிலே திருவுடையராய்ப் பிறந்த நீர் இவ் வயதிலேயே இவ்வளவு ஆன்ம பரிபக்குவம் பெற்றுவிட்டீர். அதற்குப் பல்லாண்டு பாடுகிறேன் நான். உமக்கு என்னை ஆசார்யனாக வரிக்கும் உள்ளப் பண்பும் துணிவும் உண்டாகிவிட்டால் மட்டும் போதுமா? உம்மை ஏற்கும்படி நீர் வேண்டும் எனக்கும் அத்தகைய ஆன்மகுண நிறைவும் பண்பும் துணிவும் வேண்டுமல்லவா. உமக்கு வியப்பாகத் தோன்றலாம். எனக்கு அத்தகைய துணிவு இன்னும் ஏற்படவில்லை. என்னை நீர் தெண்டனிடும்போது கூட பெருமாள் முதலில் அந்தண வடிவோடு வந்து தன்னை வணங்கிய திருவடியை (அநுமனை) நோக்கி "தகாத செய்ததென்னை நீ!" என்று சோதனையாகக் கேட்ட கேள்விதான் முதலில் உள்ளத்தே எழுகின்றது. தோல்புரையே போகும் வருணத் தாழ்வு உயர்வுகள் என்னை இன்னும் முற்றிலும் விட்டபாடில்லை. ஆகவே நான் அவ் விஷயத்தில் இன்னும் நிச்சய வுணர்வு பெறாத நிலையில் உம்முடைய விருப்பத்தைப்

பூர்த்திசெய்யும்துணிவு எனக்கு இப்போதில்லை. இருதலையும் ஒன்றியிசையாத நிலையில் அவ்வெண்ணத்தை இப்போது மறந்துவிடும் என்று கூறி விலக்கினுர். இளையாழ்வாரும் நம்பிகள் கூறியபடி நிலைமையிருப்பின் சரி தானே இப்போது நம் ஆசையை அடக்கிக் கொள்வோம் என்று விட்டுவிட்டார்.

மற்றைநாள் கோயிலுக்குப் போகும் போது இளையாழ்வார் உள்ளத்தே ஒரு எண்ணம் ஊடாடியது. நேற்று என்னைச் சிஷ்யராக ஏற்றுக் கொள்ளத் தம் பக்கல் ஒரு குறையைக் கூறிக் கழித்து விட்டார் நம்பிகள். அவ்வுத்தம பாகவதரின் சம்பந்தம் எப்படியும் எம்முறையிலும் பெருவிட்டால் நமக்கு உளம் தரிக்காது போலிருக்கிறது. சரி! இன்று அவர் போனகம் செய்த சேடமாவது கிட்ட வழி யுண்டா பார்ப்போம் என்பது அவ்வெண்ணம். இந்நினைவோடு அன்று நம்பிகளைத் தெண்டனிட்டு ஒன்றிரப்பார் போன்ற எளி வந்த முகக் குறியோடு அவர் அருகே நின்றுர். நம்பியும் அவர் முகக் குறி கண்டு அவரை நோக்கி "என்ன இளையாழ்வாரே ஏதோ விரும்பி நிற்பது போன்று காண்கிறதே?"! என்று வினவ இளையாழ்வாரும் "ஆம் ஸ்வாமீ! அடியேன் குடிலிலே தேவரீர் ஒரு வேளையேனும் அமுது செய்தருள வேணும்" என்று பிரார்த்தித்தார். நம்பிகளும் ஆகா அதற்கென்ன! அப்படியே செய்கிறேன். நானே அவசியம் வருகிறேன்" என்று பதிலிறுத்தார். இளையாழ்வார் உள்ளம் துள்ளியது நம்பிகளிடம் விடை பெற்று குதூகலத்துடன் தம் மனை சேர்ந்தார். தேவியார் தஞ்சமாம்பாளை அழைத்து மறுநாள் நம்பிகள் அங்கே அமுது செய்ய வரும் செய்தியைக் கூறி பல்வகை சித்திரான்னங்களும், மற்றும் பண்ணியாரங்களும் கூடியதான விருந்தமைக்கக்கட்டளை இட்டார். மறு நாள் எல்லாம் தயாராகின்றனவா என்று தேவியாரிடம் கேட்டுக்கொண்டு தன் திருமஞ்சன கைங்கர்யத்தை முடித்து வந்து தயாரான அமுதுகளையெல்லாம் தம் மனையில் திருவாராதன விக்கிரகமான பேரருளாளனுக்குக் கண்டருளப் பண்ணிவிட்டு மிகவும் மன எழுச்சியுடன் நம்பிகளை அழைத்து வர அவர் திருமடம் நோக்கிப் புறப்பட்டார்.

இப்பால் நம்பிகள் திருவுளத்தே இளையாழ்வார் எதற்காக இவ்விருந்து ஏற்பாடு செய்தார் என்பதைத் தேர்ந்து தெளிந்தார். நேற்று அவரை சிஷ்யராக ஏற்றுக் கொள்ளாது விட்டோமே! அதே காரணங்கள் இதற்கும் பொருந்துமல்லவா? இதை எப்படி சமாளிப்பது என்று எண்ணமிட்டார். வழி இலேசிலே தென்படவில்லை. எழுந்தார். நேரே பேரருளாளன் திரு முன்பே சென்றுர். தம் உள்ளத்தோடிய எல்லாவற்றையும் விண்ணப்பித்து "நாயன்தே அடியேன் வேண்டுகோளெல்லாம் இளையாழ்வாரின் வரப்போகும் பெருவாழ்வுக்கு ஒரு ஊறு ஏற்படலாகாதென்பதே. இன்று அவர் திட்டம் நிறைவேறுமாயின் இன்றைய வைதிகர் என்று கூறிக் கொள்வார் அவரைப் புறக்கணிக்கவே செய்வர் என்பது சர்வக்ஞரான தேவரீர் அறிவீர். ஆகவே அடியேனும் இளையாழ்வார் இஷ்டப்பட்டபடி அவர் திருமாளிகையில் அமுதுண்ண வேணும். இளையாழ்வார் பெயருக்கும் அதனுல் ஒரு தீங்கு ஏற்படாதிருக்க வேணும். இதற்கு ஒரு வழி தேவரீரே அடியேனுக்குக் காட்டியருள வேணும் என்று பிரார்த்தித்து நின்றுர். பேரருளாளன் மந்தகாசம் செய்து, "செய்வோம், நம்பீ! செய்வோம். நீ கூறியது சரியே. நாம் சொல்லுகிறேம் கேளும். இப்போது இளையாழ்வார் தெற்குத் திரு வீதியாலே உம்மடத்தை நோக்கிப் புறப்படுகிருர். நீர் கடுக வேறொரு வீதியாகப் போம். இளையாழ்வார் எப்படியும் உம் வருகைக்காக மடத்தே காத்திருப்பார். அதற்குள் நீர் நம் கைங்கர்யத்தைக் காட்டி விரைவுப்படுத்தி இளையாழ்வார் தேவியாரை அமுது படைக்கச் சொல்லி அமுது செய்து வந்து விடும் என்று அருளிச் செய்தார். நம்பியும் கடுகச் சென்று இளையாழ்வார் மனை சேர, இளையாழ்வார் தேவியாரும் உம்மைத் தேடியல்லவா அவர் போயிருக்கிருர் என்று கூறினுள். நம்பி "அம்மா எனக்கு அவசரம். பெருமாள் திருவாலவட்ட கைங்கர்யம் தடைபடும். அதனுல் அடியேனுக்கு விரைவில் அமுது படைத்திடுங்கள்." என்று அவசரப்படுத்தினுர். அவ்வம்மையாரும் ஒன்றும் ஐயுற ஏதுவின்றி இடைகழியிலேயே இலை சமர்ப்பித்து நம்பிகளுக்கு வெகு உபசாரம் பண்ணி எல்லாம் நிறையப் பரிமாறி நிற்க நம்பியும் தம்முணவை இலையில் ஒன்று விடாது முடித்து கை கழுவி விடை பெற்றுப் போய் விட்டார். அவர் போனதும் அவ்வம்மையார், இளையாழ்வார் திருவுளத்தே ஓடிய எண்ணம் அறியாதவளாதலின், அப்

போதைய வைதிக அந்தணர் மனை வழக்காக கொண்டபடி நம்பிகள் அமுது செய்த இலையைக் கோலாலே வெளியே தள்ளி விட்டு அவ்விடைக் கழியைக் கோமயத்தாலே (சாணத்தாலே) சுத்தி செய்து தானும் நீராடி நிற்குமளவிலே இளையாழ்வார் நம்பிகள் மடத்தே அவரைக் காணாது சற்றுத் தாமதித்துப் பின் ஒருகால் நம் மனைக்கே சென்றிருக்கலாமோ என்று ஐயுற்று தம் மனை வந்தார். வந்தவர் நீராடி நின்ற தம் தேவியாரை நோக்கி, "என்ன! ஏன் இப்போது நீராட்டம்? என்று கேட்க அவ்வம்மையாரும் நடந்தவற்றையெல்லாம் ஒன்றொழியாது கூறி "அவ் வைஷ்ணவப் பெரியார் அமுது செய்து போய் விட்டார். அவர் தாழ்ந்த வருணத்தராதலாலே அவர்அமுது செய்த இலையைக் கோலாலே தள்ளிக் கோமயமிட்டு இடம் சுத்தி செய்து நீராடினேன்" என்து சாவதானமாக பதிலிறுத்தாள். இளையாழ்வார் தலைமேல் கை வைத்து மிகவும் வருந்தி, தேவியாரை மிகவும் நொந்து, "ஐயோ! அனைத்தும் கெட்டதே. அவர் "போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" என்று கொண்டு அவரை அமுது செய்வித்து அக் "கனித்த துண்ணும்" பேறு கிட்டுமென்றல்லவா பாடுபட்டேன். அவரை அருகிருந்தூட்டப் பெற்றேனில்லை. அதில்லாது போயினும் அவர் உண்டொழி மிச்சலும் கிட்டாதபடி அழித்து விட்டனையே அம்மா. உன்னை என்ன சொல்வது?" என்று கடிந்தார். பயன் என்ன? அவ்வம்மையார் உங்கள் நினைவை நான் கண்டேனு. நான் நம் ஆசாரப்படி செய்து விட்டேன் என்று கூறி உள்ளே போய் விட்டார். இளையாழ்வார் நெஞ்சுக் குமுறல் ஓயவில்லை. இனிச் செய்வதென்ன என்று எண்ணமிட்டார். சடக்கெனத் திரும்பி நேரே நம்பிகள் திருமடத்தை நோக்கி நடந்தார்.

மடத்திலே நம்பிகளை இளையாழ்வார் கண்டு அவர் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி "ஸ்வாமீ! எளியேனை இவ்வாறு சோதிக்கலாமா? தேவரீர் திருவமுதுண்ணும் சமயம் அடியேன் அறிவேன். அதற்குப் பொருந்தவே தேவரீரை அழைத்து எழுந்தருளிவித்துப்போக வந்தேன். ஆனுல் அதற்குள் தேவரீர்." நம்பிகள் இடைமறித்து என்ன நடந்துவிட்டதென்று இப்படி வருந்துகிறீர்? இளையாழ்வாரே உம்மேல் எவ்வித குறையுமில்லை. நமக்குச் சற்றுப் பசி உபாதை முந்திக்கொண்டது. போனேன் நீர் இருந்தால் நடக்கும் உபசாரங்களைவிட அதிகமாகமே உமது தேவியார் உபசரித்தார். அந்த அம்மையாரும் நீர்வந்துவிடுவீர் என்றுதான் கூறினுர். நான்தான் அவசரப் படுத்திவிட்டேன் இதில் எவரேனும் சற்று நிதானமிழந்தவர் என்றுல் அது நான்தான் இதற்குப்போய் இவ்வளவு நொந்துகொள்கிறீரே. விடும்.' என்று இளையாழ்வார்மேல் பேச வழியின்றி முடித்துவிட்டார். இளையாழ்வாரும் ஒன்றும் சொல்ல வழியின்றி "தேவரீர் அவ்விதம் கருதினுல் அடியேன் மேலே சொல்ல என்ன இருக்கிறது? தேவரீர் ஆக்ஞை என்று கூறி நின்றுர்.

நின்றவர் உள்ளத்தே நிறைவில்லை. நம்பிகள் தம்மை ஒன்றும் கூறமுடியாது செய்துவிட்டார் என்ற நினைவும் நீங்கியபாடில்லை. நம்பிகள் அருளால் தமக்கு ஒரு பேறுகிட்ட வேண்டும் என்ற எணணத்தோடுதான் அவர் உண்ட மிச்சில் கிடைக்கத் திட்டமிட்டவர் இளையாழ்வார். அது கிட்டாது போகவே வேறு ஒரு வழியாக அதனினும் மிக்க நலம் ஒன்று நம்பிகள் அருளால் பெற்றுவிடவேண்டும் என்று அவர் மனம் பறையடித்துக்கொண்டது. அவர் திருவுள்ளத்திலே ஸ்ரீ வைஷ்ணவ சமய விஷயமாகப் பல பிரச்னைகள் கிளம்பி அவற்றுக்குத் தக்கவிடைகிட்டாது நின்றுகொண்டியிருந்தன. இளையாழ்வார் மனம் எண்ணியது, "நம்பிகளுக்கோ வரதன் அத்தரங்கர். நம் ஐயப்பாடுகளை நம்பிகள் மூலம் வரதனைக் கொண்டே தீர்த்துக்கொண்டோ மென்றுல் பின்னர் பிறர் நினைவுகளுக்கு நாம் கூசவேண்டியதில்லையன்றே என்று. இவ்வெண்ணம் உதயமாகவே, அதனைக் காலம் தாழ்த்தாது நிறைவேற்ற முனைந்தார் இளையாழ்வார். நம்பிகளை மீட்டும் வணங்கி நின்றுர். நம்பிகள் அவர் ஏதோ கேட்க உன்னுகிறுர் என்பதை உணர்ந்து வாரும் இளையாழ்வாரே! ஏதோ நம்மிடம் கேட்க நினைக்கிறீர்! அல்லவா? அதற்கு ஏன் தாமதம். நம்மிடமுமா உமக்குக் கூச்சம்?" என்று ஊக்கம் ஊட்டவே இளையாழ்வார் தம் பிரச்னைகளின் கனத்தை உன்னி நாத்தழுதழுக்க "ஸ்வாமீ! வெகு முக்கியமான சில நினைவுகள் அடியேன் உள்ளத்தே எழுந்துள்ளன. அவையனைத்தும் அடியேன் கற்றவற்றினின்றும் ஸ்ரீயாதவப்ரகாசரிடம் கேட்டவற்றினின்றும் எழுந்துள்ளவை. அவற்றுக்கு

ஒரு விடையை அடியேனால் ஆனமட்டும் அடியேன் கற்ற சகல சாஸ்திர மூலமாக ஆராய்ந்து பூர்வர்கள் மொழிகளை வைத்தும் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். அவை சரியான முடிவுதாமா என்பதை அருளாளனிடமே கேட்டுந் தெளிந்து கொள்ளவேண்டும் என்பது அடியேனுடைய அவா. ஆகவே தேவரீர் அடியேன்பால் கிருபை செய்து அருளாளனிடம் விண்ணப்பித்து அடியேனுடைய முடிவுகள் சரிதாமா என்பதை தெரிந்து கூறப் பிரார்த்திக்கிறேன். அடியேன் தேவரீர் ஸன்னிதியில் இத்துணைத் துணிவோடு இதனை விண்ணப்பித்ததற்கு அடியேனை மன்னிக்கவேண்டும்'' என்று கூறி அதற்கு மேல் நிற்கவும் வலியற்றவராய் நம்பிகள் திருவடிகளிலே விழுந்து அவற்றைப்பற்றிக் கிடந்தார்.

நம்பிகள் உண்மையை உணர்ந்தார். இளையாழ்வாரின் ஐயப்பாடுகளுக்கு வரதனிடமே கேட்டு விடைபெறுவதுதான் உசிதம் அதுவே இளையாழ்வாருக்கும் இனி இவ்வித ஐயம் ஏற்பட வழியின்றி அவரைத் தெளிவிக்க வல்லது என்று முடிவுசெய்து கொண்டார். தம் திருவடிபற்றிய இளையாழ்வாரை அப்படியே வாரியணைத்துத் தூக்கி அருகிருத்தி தம்பவள வாயில் புன்முறுவல் நெளிய ''இளையாழ்வாரே! உமக்குத்தக்கதே செய்தீர். வேதங்கள் அனந்த மன்றோ ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாகப் பேசும். அவை ஏன் அப்படிப் பேசவேண்டும் என்பது நமக்கு அப்பால்பட்டது. ஆனால் அப்படிப் பேசும் அவை அவனை அளந்தறிய முடியாதது மட்டுமின்றி அவன் ஸ்வரூபமே எது என்று நிர்ணயிக்க முடியாது இன்னும் தேடிக்கொண்டிருப்பதாகக் கூறுவதில் வியப்பில்லை. இந்நிலையில் வேதங்களால் அறியப்படுபவனை அந்த வேதங்களே காட்டுகின்றன வாயினும்,வேறு வாசகங்களால் சில ஐயப்பாடும் சிலருக்கு ஏற்படுகின்றமையின் அவை எவனைக் குறிக்கின்றது என்பதை அத்த வேதங்களாலேயே உயர்வாகக் கூறப்பட்டவனையே கேட்டு விடுவோமே என்று நீர் துணிந்ததும் தவறில்லை. நாளைக்கைங்கர்யம் முடிந்ததும் அருளாளனிடம் விண்ணப்பித்து உம்முடைய ஐயங்களுக்கும் இனி அவ்வித ஐயம் எங்குமே பிறவாதபடி ஒரு முடிவு கட்டுவோம். சரிதானே. இப்போது உமக்குத் திருப்திதானே காலையில் ஏதோ நிகழ்ந்து போனதைப்பற்றி இனி உம்முடைய உள்ளத்தே உள்ள குறையை மறந்து விடும் என்று அவர் முதுகைத் தடவித் தேற்றினார். இளையாழ்வாரும் ஏதோ கூற முற்பட ''வேண்டாம். ஒன்றும் கூற வேண்டாம். உம் ஐயங்களை சர்வக்ஞன் அறிவான். விடையும் தருவான்'' என்றார். இளையாழ்வார் சட்டென்று குறுகி எல்லாம் தேவரீர் கிருபை. ''இனி என்ன குறைவினன்'' என்று பணிவோடு கூறி நம்பிகளிடம் விடை கொண்டார்.

அன்று இரவு நம்பியும் அருளாளனுக்கு திருவாலவட்டம் சேவித்து நின்றவர், அனைவரும் போய்தாமும் பெருமாளுமாய் ஒருவந்தமானபொழுதிலே (ஏகாந்தமான சமயத்திலே) பெருமாளை மீண்டும் தண்டனிட்டு நின்றார். பெருமாளும் அவரை நோக்கி ''நம்பீ, நீர் நம்மிடத்தில் ஏதோ சொல்ல எண்ணினீர் போலும்'' என்று வினவியருள, நம்பியும் ஆம் ஸ்மாமி. இளையாழ்வார் மனதிலே சில நினைவுகள் ஓடுகின்றன என்றும் அவற்றைப் பற்றித் தேவரீர் திருவுள்ளக்கிடக்கை என்ன என்று அறிந்து கூறவேண்டும் என்றும் அடியேனிடம் விண்ணப்பித்துக் கொண்டார். வேறொன்று மில்லை ''எனக் கூறி நின்றார். பெருமாளும் இளநகையோடு ''நம்பி அந்த இளையாழ்வார் சாமானியரல்லர். அவர் ஸஹஸதாஸ்யத்தை உடையவராய், நம்மை சந்ததானுவர்த்தனம் பண்ணிக் கொண்டிருப்பவர் (இயல்பிலே நமக்கடியராய், நம் எண்ணத்தைப் பின்பற்றுபவராய் இருப்பவர்) எல்லா சாஸ்திரங்களையும் வேதங்களையும் கற்று அவற்றினுடைய தத்துவங்களின் வேறுபாடுகளை உண்மை நிலையறிந்து, அவ்வேறுபாடுகளைப்போக்கி எல்லா சுருதி வசனங்களையும் ஒப்ப முடிக்கும் உபாயம் அறிந்தவர். அவர் இங்கு ஒரு ஆச்சார்யனைக் அண்டிக் கற்றது போலக் காட்டியவை எல்லாம் நாம் சாந்திபினியை அண்டிக்கற்றது போலதான். அவர்கொண்ட முடிவுகளை உலகம் ஒப்பவேண்டும் என்பதற்காகவே உம்மை இடுவித்து நம் மூலம் அவ்வுண்மையைப் பிரகாசிப்பிக்க நினைத்தாரன்றி வேறில்லை. கேளும் அவ்வுண்மைகள் இவைதாம் (1) நாமே பரம்பொருள்; (2) சித்தாந்தம் - ஆன்மா, பரமான்மா வேறுபாடுடையதே; (3) மோட்சத்திற்குச்சிறந்த உபாயம். பிரபத்தியே; (4) அந்திமஸ்ம்ருதி வேண்டும் என அவசிய மில்லை; (5) சரீரமுடிவில் மோக்ஷம் உண்டு; 6. பெரிய நம்பிகளையே

ஆசார்யனைப் பற்றவும். இவைதான் இளையாழ்வார் கொண்ட முடிவுகள். அவைசரியே, என்று அவரிடம் கூறும் என்று அருளினார். நம்பியும் இவ்வார்த்தைகளை வியப்புடன் கேட்டு பெருமாளை மீண்டும் தண்டனிட்டு விடைக் கொண்டார் மறுநாட்காலையில் இளையாழ்வார் நம்பிகள் மடத்துக்கு வந்தார். நம்பிகள் அவரை அருகழைத்து பெருமாள் அருளிய வற்றை அவரிடம் கூறி இளையாழ்வாரே "உம் நினைவில் இருந்தவை இவைதானோ" என்று கேட்டார். இளையாழ்வார் மகிழ்ச்சி மிகுதியால் கண்பரிசோர நம்பி திருவடிகளில் வணங்கி, "ஆம் ஆம். இவையே அடியேன் நினைவுகள். தேவரீர் செய்த உபகாரத்துக்கு என்ன கை மாறு செய்யக்கடவேன்" என்று கூறி நின்றார். நம்பியும் மிக்க வியப்பெய்தி அருளாளன் திருவுள்ளமும் இளையாழ்வார் திருவுள்ளமும் ஒன்று பட்டு நின்றதை உன்னியுன்றி மகிழ்ந்தார். (இதனை வைஷ்ணவர்கள். ஆறு வார்த்தைகள் என்று போற்றிப் புகழ்வர்)

பெருமாள் கோயிலில் (காஞ்சியில்) நிகழ்ந்துகொண்டிருந்த அதே நேரத்தில் இங்கு கோயிலில் (திருவரங்கத்தில்) முதலிகள் அனைவரும் ஒரு திரளாகக் கூடி "இனி நம் தர்சனத்திற்குக் கடவார் யார்?" என்று தமக்குள்ளே கலந்து, ஆராய்ந்தனர். பெரிய நம்பிகள் அவர்களை நோக்கி, இதற்கு இவ்வளவு ஆராய்ச்சி தேவையே இல்லையே! ஸ்ரீ ஆளவந்தார் தம் முடிவு காலத்தில் குறிப்பிட்டுக் கூறியவற்றை மறந்துவிட்டீர்கள் போலும். கேட்டதுதான் போகட்டும். ஸ்ரீ ஆளவந்தாரின் சரமவிக்ரஹத்தில் மூன்று விரல்கள் மடங்கி இருந்தமையும், அவை எப்படி யாரால் நிமிர்ந்தன என்பதை நேரில் கண்ணால் கண்டவற்றையுமா மறந்து விட்டீர்கள். அப்போது செய்யப்பட்ட பிரதிக்ஞைகள் நிறைவேற்றப்பட வேண்டாமா? ஸ்ரீ ஆளவந்தாரின் ஆசைகள் பொய்க்கக்கூடாதல்லவா" என்று கூறினார். முதலிகள் அனைவரும் ஒருமுகமாக அவர் கூறியவற்றை ஒப்பி பெரிய நம்பிகளை நோக்கி, "க்ஷமிக்க வேண்டும்; தேவரீர் கூறியதுதான் சரி. ஆகையால், தேவரீர் விரைவிலே பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி இளையாழ்வாரை நம்முடைய தர்சனப்ரவர்த்தகராம்படி (நம் சமயத்தை முன்னின்று நடத்தும்படி) திருத்தி (சமயதீக்கை யளித்து) இங்கு அழைத்துக்கொண்டு வர வேண்டும் என்று ஒருமிடராக வேண்டிக் கொண்டனர் பெரிய நம்பியும் முதலிகள் வேண்டுகோளை ஏற்றுத் தாமதமின்றி தம் குடும்பத்தோடு நம்பெருமாள் சன்னிதிக்குச் சென்று வணங்கி அரங்கனிடம் அனுமதியும், விடையும் பெற்று பெருமாள் கோயிலேறப் புறப்பட்டார். அவ்விதம் வந்தவர் வழியிலே "மதுராந்தகம்" என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஏரிகாத்த பெருமாளை (எரிகாத்தப் பெருமாள் என்றும் பாடம்) சேவிக்க எண்ணியவராய் அவ்வூரிலே தங்கினார்.

இங்கு பெருமாள் கோயிலிலே நம்பிகளிடம் ஆறு வார்த்தை கேட்டு ஆறுதல் பெற்று, திருமாளிகை திரும்பிய இளையாழ்வார் திருவுள்ளத்திலே அவ்வார்த்தைகளே மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன. அதிலும் கடைசி வார்த்தை அவரிடத்திலே ஒரு குறையிருப்பது போல உறுத்தியது. அவ்வாசார்யனைக்கிட்டி பஞ்சஸம்ஸ்காரம் பெறுமல் இருப்பது தக்கதன்று என்று அவர் மனம் பறையடித்தது. நல்லது செய்ய நாள் தேடவேண்டாம் என்று முடிவுகட்டியவராய் இளையாழ்வார் மறுநாளே பெரிய நம்பிகளிடம் சமாச்ரயணம் பெறவேண்டி கோயிலை நோக்கிப் புறப்பட்டார். அப்படி வரும் அவரும் வழியிலே பெரிய நம்பிகளைப் போல மதுராந்தகப் பெருமாளை சேவிக்க விழைந்து மதுராந்தகம் எழுந்தருளினர். வரும்போது அங்கே பெரிய நம்பிகள் முன்னமேயே எழுந்தருளியிருக்கும் செய்தி அவருக்கு எட்டியது. இளையாழ்வார் மனம் களிப்பால் துள்ளியது. எண்ணிய பொருள் இடைவழியே கிட்டிய பேற்றினை நினைத்தார். அவர் உள்ளம் பெருமாள் கருணையை எண்ணிப் பூரித்தது. பூரித்த தம் நெஞ்சை நோக்கி, "கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று. ஓர் எண்தானும் இன்றியே வத்து இயலுமாறு" என்று அளவளாவி கண்கள் மகிழ் நீர் பெருக, மேனி புளகிக்க ஓடோடியும் வந்து பெரிய நம்பி திருவடிகளிலே வீழ்த்து அவர் திருவடிகளைப் பற்றிக் கிடந்தார். பெரிய நம்பியும் பெருமாள் தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளும் படியை உன்னி வியப்பும், களிப்பும் அடைந்தவராய், இளையாழ்வாரை வாரி எடுத்து அணைத்து அவர் நலன் விசாரித்தார். இளையாழ்வார் பெரிய நம்பி திருமுன்பே கைகூப்பித் தலை வணங்கி, "ஸ்வாமீ! அடியேனுக்கு இப்போதே இதோபதேசம் செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பெரிய நம்பி இளையாழ்வாருடைய

ஆசையின் கனத்தை உகந்து அவரை நோக்கி "இளையாழ்வாரே! நாமும் அதே நோக்கோடு தான் வருகிறோம்; வாரும். அத்திகிரி சென்று பேரருளாளன் திருமுன்பே உமக்கு உபதேசம் செய்கிறோம்" என்றார். ஆனால் இளையாழ்வாருக்குப் பொறுக்கவில்லை. "ஸ்வாமீ! காலம் தாழ்த்ததன் பயனை ஸ்ரீ ஆளவந்தார் பக்கல் அடியேன் பட்டது அமையாதோ! அத்திகிரி போமளவும் இந்த உடலின் நீர்க்கோல வாழ்வு அழியாது என்று எங்ஙனம் தேறுவது? அப் பரீக்ஷை வேண்டாம் ஸ்வாமி! அதுவும் ஒரு தரம் பட்டபின் அடியேனுக்கு வேண்டவே வேண்டாம். இப்போதே கிருபை கூர்ந்து அடியேனை ஆட்கொண்டருள வேண்டும்" என்று கூறிக்கொண்டே பெரிய நம்பி திருவடிகளில் வீழ்ந்து அத்திருவடிகளைப் பற்றிக் கிடந்தார். பார்த்தார் பெரிய நம்பி. இனித் தாமதித்தல் தகுதியன்று என நினைத்தார். உடனே இளையாழ்வாரைத் தூக்கி நிறுத்தித் தாமும் எழுந்து இளையாழ்வார் கையைப் பற்றி சன்னிதானத்துக்குள்ளே அழைத்துச் சென்றார். சென்றவர் அங்கே "நாட்கமழ் மகிழ் மாலை மார்ப"னை மாறன் உகந்த மலர் பரமரான மகிழ மரத்தின் அடியிலே வீற்றிருந்து இளையாழ்வாரை அருகே அழைத்தார். பின்னர் தம்மை ஆட்கொண்ட ஆசார்யனைத் (ஸ்ரீ ஆளவந்தாரை) தம்முள்ளத்திலே நிறுத்தி வணங்கி அவர் திருநாமத்தையே மனனம் செய்தவராய் வணக்கிய திருமேனியோடு தமது வலப்புறத்திலே இளையாழ்வாரை உட்காரச் சொல்லி அவருக்கு சங்கு சக்கரப் பொறி ஒற்றி தமது வலது திருக்கரத்தை அவர் தலைமேல் வைத்து, கருணை பொழியும் திருக்கண் மலர்களாலே அவரைக் குளிர நோக்கியவராய், இளையாழ்வாருக்கு குரு பரம்பரா பூர்வமாக மந்திர ரத்னம் என்னப்பட்ட "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே: ஸ்ரீமதே நாராயணாய நம:" என்ற 'த்வயத்தை' அவருடைய வலது திருச்செவியில் உபதேசித்தருளினர். பின்னர் அவர் இளையாழ்வாரை நோக்கி "இளையாழ்வாரே! பெருமாள் நாட்டுக்குக் காப்பாகத் தம் திருவடி நிலைகளை ஸ்ரீ பரதாழ்வார் தலையிலே வைத்தருளிக் காட்டுக் கெழுந்தருளினது போலவே, ஸ்ரீஆளவந்தாரும் உமக்காகத் தம்முடைய திருவடித் தாமரைகளை என் தலைமேல் வைத்துத் திருநாட்டுக் கெழுந்தருளினார் என்று தெளிவீராக என்றருளிச் செய்தார். இளையாழ்வாரும் ஸ்ரீ ஆளவந்தாரின் பரம காருண்யத்தை வியந்து போற்றிப் பின் பெரிய நம்பியை நோக்கி "ஸ்வாமீ! இதற்கு ப்ரமாணம் எது? (மேற்கோள்கள் எவை) ப்ரமேயம் எது? (மேற்கோள்களால் அறியப்படும் பொருள் எது) ப்ரமாதாக்கள் யார்? (அம்மேற்கோள்களை நினைவி விருத்தி அறிவிப்பவர் யார்) என்று வினவினர். பெரிய நம்பிகள் மிகவும் உள்ளம் உகந்தவராய் "நன்கு வினவினீர் இளையாழ்வாரே! மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு" என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி திருமகள் கேள்வனைக் கூறும் 'த்வயமே' பிரமாணம். அந்த மேற்கோளை உமக்கு காட்டுபவன் அத்திகிரியின் மேல் கையும் திருவாழியுமாய் நிற்கும் அருளாளப் பெருமான். அவன்தான் ப்ரமாதா. இந்தப் பிரமாணத்தில் அப்பிரமாணம் குறிக்கும் பொருளை (ப்ரமேயத்தை) அநுபவிக்கத் தக்கவர் நீரே" என்று பதிலிறுத்தார். இளையாழ்வார் நடந்தவற்றை எல்லாம் தம் மனத்தே ஒருமுகப்படுத்திப் பார்த்தார். தமக்குத் திடீரெனக் கச்சி நம்பிகள் மூலம் பெருமாளை வினவித் தம்முடிபுகள் பற்றித் தெளிய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது. நம்பிகள் கேட்கப் பெருமாள் தம் முடிபுகள் சரியே என்று ஆமோதித்தது. அதே சமயம் பெரிய நம்பிகளை முதலிகள் அனுப்பியது. தாமும் அவரை அடைய விரைந்தது. இருவரும் ஏரிகாத்த பெருமாளை ஸேவிக்க நினைவுண்டாயது. இருவரும் ஒரே காலத்தே மதுராந்தகத்திலே சந்தித்தது இவை எல்லாம் ஏதோ தன்னடைவிலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளாக இருக்க முடியாது. கூட்டுவிக்கும் ஒருவன் செயலாகத்தான் இவையனைத்தும் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று அவர் அந்தராத்மா கூறியது. பரந்தாமன் கருணையை வியந்தார். பெரி நம்பிகளை வணங்கிச் சென்றார்.

மறுநாள் பெரிய நம்பிகள் ஏரிகாத்த பெருமாள் சன்னிதிக்குச் சென்று சக்ரவர்த்தி திருமகனை நன்கு ஸேவித்து "ஸ்வாமீ! தேவரீர் இங்கே தரித்த திருநாமம் பொருள் பொதிந்த தாம்படி இந்த தர்சனம் ஸ்ரீ ஆளவந்தாருக்குப் பின் பின்னதடாகம் (கரையுடைந்த ஏரி) ஆகாமே தக்க ஒருவரை இட்டுத்தந்தீரே. இதற்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய வியலும்?" என்று உலகோர்க்காகத் தம் நன்றியை அறிவித்து அப்பெருமானைப் பல்லாண்டு

பாடி மங்களாஸாஸனம் செய்தார். பின்னர் இளையாழ்வாரையும் கூட்டிக்கொண்டு பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினார்.

மதுராந்தகத்திலே நிகழ்ந்தவை யெல்லாம் காஞ்சியில் திருக்கச்சி நம்பிகள் கேள்வியுற்று மிகவும் மகிழ் வெய்தினார் அடுத்துப் பெரிய நம்பியும் இளையாழ்வாரும் கச்சி வரும் செய்தி எட்டியது. பேரருளாளனோடு ஒத்த சிந்தையரான சீடரும் பேரருளாளனாலே நியமிக்கப் பெற்ற ஆசார்யரும் ஒருசேர வரும் பரிசைக் கொண்டாட எண்ணிய கச்சி நம்பிகள் பெரிய நம்பியை கச்சிப்புறத்தே எதிர்கொண்டு வரவேற்று அவரைத் தொழுது நின்றார். பெரிய நம்பியும் அவரை அருளி நோக்கி பேரருளாளனுக்கு அவர் மிகவும் அந்தரங்கராகையாலே அவரை முன்னிட்டு பேரருளாளனை சேவித்தார் ஸ்ரீ மணக்கால் நம்பிகள் ஸ்ரீ ஆளவந்தாரை கோயிலேற அழைத்துக்கொண்டு போய் பெரிய பெருமாளை சேவிக்கச் செய்து, அவ் விக்ரஹத்தின் உண்மை வடிவை ஸ்ரீ ஆளவந்தாரின் அகக்கண் காண உதவியது போல பெரிய நம்பியும் இளையாழ்வாரை பேரருளாளன் சன்னிதிக்கு அழைத்துக் கொண்டு போய் அவருக்கு வேண்டும் உபதேச விளக்கங்கள் கூறி "கட்கண்ணுக்கு இலக்காகி நிற்கும்" அவ் விக்ரஹத்தின் உண்மையான வடிவழகை இளையாழ்வார் நெஞ்சென்னும் உட்கண்ணால் உவந்து காணுமாறு செய்தார். இளையாழ்வாரும் ஒரு புதிய அனுபவம் பெற்று பெரிய நம்பியோடு தம் திருமாளிகைக்கு எழுந்தருளினார். தர்சன விசேஷார்த்தங்களையும், அருளிச் செயல்களின் ஆழ் பொருள்களையும் பெரிய நம்பிகளிடம் கேட்டுத் தெளிய எண்ணியவராய் தம் திருமாளிகையின் மேல் பாதியை பெரிய நம்பிகள் தங்குவதற்கு என ஒதுக்கிவிட்டு நம்பிகளை கச்சியிலேயே எழுந்தருளி யிருக்கும்படி வேண்ட, அவரும் உடன்பட்டு அங்கேயே தங்கினார்.

இங்ஙனம் பெரிய நம்பிகளை நாள்தோறும் அடிபணிந்து அவரிடம் விசேஷார்த்தங்களை இளையாழ்வார் கேட்டு வந்தார். அருளாளனை சேவித்து புது அனுபவம் பெற்ற காலம் முதல் இளையாழ்வார் உள்ளத்திலே குடும்ப வாழ்விலே உள்ள பற்று நெகிழத் தலைப்பட்டது. அந் நெகிழ்வை பெரிய நம்பிகளிடம் அவர் கேட்டு வந்த உபதேசங்கள் மேலும் தளர்த்தின. எனினும் தாம் ஒழுகி வந்த இல்லற நெறியை விடாது பேணி வந்தார் இளையாழ்வார்.

(தொடரும்)

---

**பென்னாடம்:** ஸ்ரீ பிரளயகாலேஸ்வரர் ஆலயத்தில் பிரம்மோற்சவம்
**திருக்கோகர்ணம்:** ஸ்ரீ பிரகதம்பாள் ஆலயத்தில் பிரம்மோற்சவம்
**தஞ்சை:** ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஸ்வாமி கோவிலில் பிரம்மோற்சவம்
**திருவள்ளூர்:** சைத்ர பிரம்மோற்சவம் ஸ்ரீ வீரராகவபெருமாள் ஆலயத்தில்
**கரூர்:** ஸ்ரீ அபயப்பிரதான ரங்கநாதஸ்வாமி கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம்
**சின்னமனூர்:** ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் சித்திரைப் பெருந்திருவிழா
**மகேந்திரமங்கலம்:** முசிரி தாலுக்காவைச்சேர்ந்த மகேந்திரமங்கலத்திலுள்ள ஸ்ரீ பூஞ்சோலை மாரியம்மன் கோவில் சித்திரைத் திருவிழா
**திருமங்கலம்:** ஸ்ரீ சாமவேதீஸ்வரர் தேவஸ்தானத்தில் சித்திரை பிரம்மோற்சவம்
**திருப்புகலூர்:** ஸ்ரீ அக்னீஸ்வரர் தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசர் சுவாமிகள் திருவிழா
**திருத்துறைப்பூண்டி:** ஸ்ரீ பவ ஔஷதீஸ்வரர் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம்
**சிவாயமலை:** ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் தேவஸ்தானத்தில் சித்திரை பிரம்மோற்சவம்
**ஒன்பத்துவேலி:** ஸ்ரீ நவநீத கிருஷ்ணபெருமாள் தேவஸ்தானத்தில் சித்திரை பிரம்மோற்சவம்
**கோவிலூர்:** ஸ்ரீ மந்தபுரீஸ்வரர் கோவிலில் 29-4-63 முதல் 8-5-63 வரை பிரம்மோற்சவம்
**சின்னமலூர்:** ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் சித்திரை தேர்த்திருவிழா
**காட்டுப்பரூர்:** ஸ்ரீ ஆதிகேசவபெருமாள் கோவிலில் பிரம்மோற்சவம்
**மதுரை:** ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில்
**மன்னார்குடி:** ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோவிலில் 29-4-63 அன்று காலை 9 மணிக்குமேல் 11 மணிக்குள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

# ஸ்ரீகாஞ்சீ ஹஸ்திகிரி வைபவம்.

மகாவித்துவான் ஸ்ரீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள், காஞ்சிபுரம்.

**அவதாரிகை**

ஒருகால் **நாரத** மஹரிஷியை நோக்கி **ப்ருகு** மஹர்ஷியானவர் "**தொண்டை** நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தின் பெருமையையும், அங்கு ஸ்ரீ **ஹஸ்திகிரி** சிகரத்தில் **தேவப் பெருமாள்** திருவவதரித்த பெற்றியையும், காஞ்சீ நகரத்தின் அதிசயங்களையும் உள்ளபடியே எமக்கு உரைத்தருளவேணும்" என வேண்டிக்கொள்ள; அதற்கு திருவுள்ளமிரங்கிய நாரத முனிவர் அந்த ப்ருகு முனிவரை நோக்கி இங்ஙன முரைத்தார்:—"ஒருகால் நான் எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க விரும்பி அதற்குறுப்பாக மனத்தூய்மை பெறவேண்டி, **கங்கை, யமுனை, ஸரஸ்வதி** ஆகிய மூன்று புண்ய நதிகளும் கூடுமிடமாய்ப் பரம புனிதமான மேரு மலையுச்சியிடத்து வீற்றிருக்கின்ற எனது தந்தையான நான்முகக்கடவுளை அணுகி அடிபணிந்து 'கண்ட விடமெங்கும் திரிந்தலைந்துழல்கின்ற நெஞ்சை அடக்கியாண்டு எம்பெருமானுடைய திருவடியிணையிலேயே பதியவைப்பதற்கு உரிய உபாயத்தை உரைத்தருள்க' என்று விண்ணப்பஞ் செய்தேன்; அப்போது அப்பிரமனுர் வார்த்தையடைவில், தாம் **ஸத்யவ்ரத க்ஷேத்திரம்** சென்றதையும் அங்கு அச்வமேத யாகம் செய்து திருமாலை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றதையும் மெருமகிழ்ச்சியோடு புகன்றுர்; 'அந்த வரலாறுகளை விரியவுரைத்தருளவேணும்' என்று உடனே அடியேனல் வேண்டிக்கொள்ளப்பட்ட அந்த மலர் மிசைப் பெருமான் கருணையோடு எனக்குரைத்த கதையையே இப்போது உமக்கு நான் உரைக்கின்றேன்; கேளும்" என்றுர்.

பிறகு கை கூப்பிக்கொண்டு பணிவுடன் செவிமடுத்த ப்ருகு மஹர்ஷிக்கு நாரத முனிவர் பணித்ததாய், காஞ்சீ ஹஸ்திகிரியின் வைபவமும் ஸ்ரீவரதராஜனுடைய ஆவிர்ப் பாவமும் அப்பெருமானுடைய திருவாராதனப் பெருமைகளும் பொருந்தியதான கதா ஸந்தர்ப்பம் வருமாறு.

### (பிரமன் ஆகாசவாணியைச் செவியுறுதல்.]

முன்பு, நான்முகக் கடவுள் திருமாலைக் காணவேண்டித் தவங்கள் புரிந்தனன். ஆயினும், எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளில் நிலை கொள்ளாமல் வெவ்வேறு விஷய இன்பங்களில் பதறியோடுகின்ற தனது நெஞ்சை அடக்கியாள முடியாமல் வருத்தங்கொண்ட அந்த நான்முகன் இன்னது செய்வதென்று தெளியப் பெருமல் திகைத்திருக்கும் அளவில் ஆகாயத்தில் நின்றும் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது; அதாவது:—'பிரம! ஆயிரம் அச்வமேதங்களை அனுட்டித்தால்தான் சித்த சுத்தி பெற்றுத் திருமாலைக் கண்கூடாகக் காணப்பெறுவாய்; விரைவில் திருமாலைக் காணவேண்டி ஆயிரம் **அச்வமேதயாகம்** அனுட்டிக்கும் தாமதத்தைப் பொறுக்ககில்லாயாகில், தொண்டை நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று அவ்விடத்தில் **அயமேத வேள்வி**

இயற்றி எம்பெருமானை உகப்பிப்பாயாக ; அங்கு ஒரு கருமம் செய்தாலும் அஃது ஆயிரமுகமாகிப் பயன் பெறுவிக்கும் ; இஃது அந்த க்ஷேத்ரத்திற்கு உற்ற பெருமை' என்று.

**[பிரமன் ஸத்யவ்ரத க்ஷேத்திரமடைதலும் யாகசாலையமைக்க முயலுதலும்]**

மேற்கூறியவாறு தோன்றிய ஆகாய வாணியைக் கேட்டுப் பரமானமடைந்த பிரமன் மேருமலையுச்சியில் நின்று உடனே எழுந்து ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து, அங்குத் தவ முனிவர் சூழ்ந்த திருவனந்த ஸரஸ்ஸையும், அதனருகில் திகழும் திருவத்திமாமலையையும் நோக்கியுவந்து, அத்திருக்குளக் கரையிலேயே தூய வேள்வி புரியத் துணிவுகொண்டான்.

நினைத்தபோதே எதையும் அற்புதமாக நிருமித்து முடிக்க வல்லவனை **விச்வகர்மா**வையழைத்து, ஸ்ரீ ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி இவ்விடத்திலேயே யாக சாலையை அமைத்திடுவாயாக ; மணி மாடங்கள் சூழ்ந்து அழகாயதொரு நகரத்தையும் நிருமிப்பாயாக." என்று கட்டளையும் இட்டனன்.

இங்ஙனம் அயனது ஆணையைச் சிரமேற்கொண்ட விச்வகர்மா ஸ்ரீஹஸ்திகிரியை நாற்சதுரமாக்கி, அதனருகில் அச்வமேத யாகசாலையை அமைத்துத் தடமாமதிள் சூழ்ந்தழகாய கச்சிப்பதியையும், விரைவில் நிருமித்தனன். பிறகு வேள்வியைக் காண விருப்பத்துடன் வந்து சேர்ந்த அந்தரத்தமரர்கள் கூட்டங்களும், இயக்கரும் விச்சாதரரும் கின்னரரும் கந்தருவரும் முதலாயினோர் தந்தமக்குரிய விடுதிகளில் சார்ந்தனர். **இந்திரன்** முதலிய தேவர்களாலும், **விச்வாவஸு** முதலிய கந்தருவர்களாலும், **விரோசனன்** முதலிய அசுரர்களாலும், **மணிபத்ரன்** முதலிய யக்ஷர்களாலும், **வஸிஷ்டர்** முதலிய மாமுனிகளாலும். **அரம்பை** முதலிய அப்ஸரஸ் ஸுக்களாலும், **ஜநகன்** முதலிய சக்கரவர்த்திகளாலும் மற்றும் பல்வகை பெரியார்களாலும் நெருக்கமுற்று விளங்கியது காஞ்சிமாநகர்.

**[சீறிப் பிரிந்திருக்கின்ற ஸரஸ்வதியை வேள்விக்காக அழைத்து வருமாறு வஸிஷ்டரையனுப்புதல்.]**

பின்னர், யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்கள் சேகரிக்கப்பட்டு, ரித்விக்குகளும் திரண்டனராக, வேள்வி புரிய ஸஜ்ஜனாய் நின்ற விரிஞ்சனை நோக்கி **ப்ருஹஸ்பதி** யானவர், 'திசைமுகனே, உனது தருமபத்தினியான **ஸரஸ்வதி** இன்றியில் வேள்வி நடைபெறுதாதலால் இவளை இங்கு அழைக்க முயல்வாய்' என்றனர். பிறகு பிரமன் வஸிஷ்ட முனிவனை நோக்கி 'முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினுல் என்மீது கறுக்கொண்ட ஸரஸ்வதியானவள் ஸரஸ்வதீ நதியைச் சென்று சேர்ந்து அங்குத் தவம் புரிந்து கொண்டிராநின்றுள் ; அவளை நீ இப்போது நல்வார்த்தைகளினுல் உகப்பித்து இங்கு அழைத்துவரவேணும்' என்றனன்.

அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட வஸிஷ்டமா முனிவன் ஸரஸ்வதீ தீரத்திற்கு விரைந்து சென்று வாணியை வணங்கித் துதித்து, தாயே! காஞ்சிமாநகரில் அச்வமேத வேள்வியியற்ற விரும்பிய அம்புயத்தோன் உமது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றுராதலால் அவண் விரைந்து எழுந்தருளவேணும் ; ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் அந்த வேள்வியை நீர் குறையற நிறைவேற்றி யருளவேணும்' என்று கைகூப்பிக் கூறினன்.

இது கேட்டதும் மிக்க சினங்கொண்ட ஸரஸ்வதியானவள் உதடு

துடிக்க இங்ஙனம் உரைத்தனள் ;—'பிள்ளாய் ! என்மீது மிக்க பகைமை கொண்ட எனது கணவர் பெரியதொரு ஸபையில் என்னைப் பண்டு பரிவப்படுத்தினபடியை நினைத்துக்கொண்டால் அவர் அருகில் வந்துசேர எனக்கு மனமுண்டாகுமோ ? என்னை அவர் பரிபவப்படுத்தினபடி யாதென்று உணர விரும்புவாயாகில் உரைக்கின்றேன் கேள் ; முன்பொருகால், லக்ஷ்மீ பக்தர்களும், என் பக்தர்களும் பரஸ்பரம் ஒரு விவாதமடைந்தார்கள் ; லக்ஷ்மீயே மிகச்சிறந்தவளென்று லக்ஷ்மீ பக்தர்களும், நானே மிகச் சிறந்தவளென்று என் பக்தர்களும் சொல்லி விவாதப்பட்டார்கள் ; பிறகு இரு வகுப்பினரும் பல முனிவர் புடைசூழ்ந்த நான்முகக் கடவுளின் ஸபைக்குச் சென்று தத்தம் வாதங்களை விரிவாக வெளியிட்டுக் கொண்டனர் ; அப்போது சதுமுகனுர் தாமாகவே பிராட்டியின் பெருமையையே ஸித்தாந்தமாக அறுதியிட்டுக் கூறினர். நான் "என்னிலும் பிராட்டியே சிறந்தவளாயிடுக ; ஸகல நதிகளுக்குள்ளுமாவது நான் சிறப்புடையளாம்படி அருள் புரிய வேணும்" என்று நாதரை வணங்கி வேண்டிக் கொண்டேன் ; "கங்கை கங்கையென்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடகிற்கும் கங்கை ஒப்புயர்வற்று விளங்கும்போது நதிகளுக்குள்ளும் உனக்குச் சிறப்பு ஏலாது ; இங்ஙனம் நீ ஆசைப்படுவதும் அபஹஸிக்கத்தக்கதாகும்" என்று பல்லாயிரவர் திரண்ட பெருஞ்சபையின்கண் மிகவும் திரஸ்காரமாக மொழிந்தார் ; அவர் அங்ஙனம் அவமதித்ததினுல் அளவு கடந்த சீற்றமுற்ற நான் அன்றே புறப்பட்டு இங்கு எனது அம்சமாகிய ஸரஸ்வதீ நதியைச் சார்ந்து வாழ்ந்துகொண்டிராநின்றேன் ; வேள்விபுரிய விரும்பிய கணவர் என்னேடு கூடியே வேள்வி நடத்த விரும்பியிருப்பாராயின், அவர் தாமே பரம பவித்திரமான இவ்விடத்தேற எழுந்தருளி இங்கே வேள்வி நடத்தலாம்'—என்று.

இது கேட்ட வஸிஷ்ட முனிவர் 'தாயே ! ஸரஸ்வதி ! எல்லாமறிந்த நீர் இங்ஙனம் இயம்பலாகுமோ ? ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தின் பெருமை ஸகலலோக ப்ரஸித்தமானது ; அன்றியும் ஆகாய வாணியை ஆதரித்து அந்த க்ஷேத்ரந் தன்னிலேயே வேள்வி இயற்ற நிச்சயித்த அப்பெரியாரை இவ்விடத்திற்கு வரச் சொல்லுதல் உசிதம் ஆகுமோ ? நீர் தாமே சினம் தணிந்து அவ்விடம் எழுந்தருள்வது மிக நன்று' என்று வணங்கி விண்ணப்பம் செய்தனர்.

அவ்வளவிலும் சிறிதும் சீற்றம் தணியப்பெருத ஸரஸ்வதி பழைய பகையையே பெரிதும் பாராட்டி அவ்வேண்டுகோளை மறுத்தே விட்டனள். எவ்வளவு வேண்டியும் விருப்பம் நிறைவேறப் பெருமலே வஸிஷ்டர் மீண்டும் வந்து நான்முகரிடம் செய்தியறிவித்தனர்.

**[ஸரஸ்வதியின்றியில் மற்றை மனைவியருடன் வேள்வியியற்றத் தொடங்குதலும் அசுரர்கள் வேள்வியைக் கெடுக்க முயலுதலும்.]**

வஸிஸ்டர் வந்து தெரிவித்ததையுணர்ந்த ஸகல மஹர்ஷிகளும் நான்முகக் கடவுளை நோக்கி, 'தேவ ! சீற்றத்தின் எல்லையிலே நிற்கின்ற ஸரஸ்வதி இவண் வரப்போகிறதில்லை என்று அறிந்தோம் ; அதனுல் ஒரு குறையுமில்லை ; ஸாவித்ரி முதலிய மற்றை மனைவியரை உடன்கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம்' என்றனர். அங்ஙனமே செய்வதாக இசைந்த திசைமுகனுர் ஸாவித்ரி முதலிய மனைவியருடன் கூடி யஜ்ஞஸங்கல்பஞ் செய்துகொண்டு அச்வமேத தீக்ஷையை வஹித்துக்கொண்டார்.

வேள்வியதிசயங்களைக் காணவந்து குழுமியிருக்கின்ற தேவாஸுரர் முதலிய அனைவர்க்கும் தக்கவாறு மரியாதை செய்ய அந்தணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அவ்வண்ணமே ஸத்காரம் செய்ய எழுந்து தகுதி நோக்கித் தேவர்களுக்கு முதல் மரியாதை செய்தனர். அதுகண்டு பொறாமை கொண்ட அசுரர்கள் உடனே ஸதஸ்ஸில் நின்று எழுந்து வெளியேறி, அமரர்களை அவமதிக்க வெண்ணி அமர் புரிய ஆலோசிக்கலாயினர்.

போர் புரிவதே பொருத்தமான தென்று துணிந்த அவ்வசுரர்களை நோக்கி அவர்களில் ஒருவனான **விரோசனன்** என்பான் சிறிது விமர்சித்து இங்ஙனம் விளம்பினான்: "அசுரர்காள் மேல்விளைவதறியாமல் நீங்கள் சடக்கெனச் செய்யத் துணிந்த இந்த யுத்த ஸந்நாஹத்தை நிறுத்திக்கொள்வது நன்று; விளக்கில் விழும் விட்டில்களுக்கு நேரும் கதிதான் நமக்கும் நேரும்; பிறருடையவும் நம்முடையவும் பலாபலங்களை ஆராயாது திடீரென்று போர் புரியப் புகுவது பெருந்தீங்காகவே முடியும்; எளிய உபாயத்தினால் ஸாதிக்கத் தகுந்ததைப் பராக்கிரமத்தினால் ஸாதித்துக்கொள்ளக் கருதுவது புத்திமான்களின் பணியல்ல; இப்போது எனக்குத் தோன்றுவதொரு உபாயத்தை உரைக்கின்றேன் கேண்மின்; இந்த நான்முகக் கடவுள் தனது மூத்த மனைவியாகிய ஸரஸ்வதியைத் துறந்து வேள்வி இயற்றத் தொடங்கியிருக்கின்றமையால் நாம் ஸரஸ்வதியிடம் சென்று சினமூட்டி அவளைக்கொண்டு வேள்வியைக் கெடுத்தல் மிக எளிதாகும்"—என்று.

விரோசனன் இங்ஙனம் விளம்பக் கேட்ட அசுரர்களனைவரும் நன்று நன்றென்று நவின்று, அப்பொழுதே புறப்பட்டு ஸரஸ்வதி பக்கலிற் சென்று, தங்களுக்குள்ள மாயச் செயல் வல்லமையினால் அசுரவுடல் நீத்து அந்தண வேடம் பூண்டு வாணியை வாயார வாழ்த்தி நின்றனர். அவ்வாழ்த்துதலால் அகமகிழ்ந்த அவள், நீங்கள் வந்த காரியம் என்னவென்று வினவ, தங்களுக்கு ஸதஸ்ஸில் அவமரியாதை நடந்ததென்பதைச் சிறிதும் வெளியிடாமலே இங்ஙனம் மொழிந்தனர்;— "மேன்மை தங்கிய கலைமகளே! தீய மதி கொண்ட சில முனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவன் முக்கிய மகிஷியான உம்மைத் தவிர்த்து மற்றை மஹிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனன்; மிகவும் அநீதியான இந்தச் செய்தியை நாங்கள் பொறுக்ககில்லோம்; இதனை உம்மிடத்து விண்ணப்பஞ் செய்யவே வந்தோம்; எவ்வகையினாலாவது அந்த வேள்வி நடைபெறாத வண்ணம் தடை செய்தீராகில் உம்மிடத்து அன்பு பூண்ட எமக்கு மகிழ்ச்சியாகும்"—என்று.

**[சதுமுகனார் வேள்விதனைச் சதிர்கெடுக்க வேகவதிப்ராவஹம் வெள்ளங்கோத்து வருதல்,]**

இங்ஙனம் அசுரர் மொழியக் கேட்ட ஸரஸ்வதி அடக்கவொண்ணாத சீற்றத்தையேறிட்டுக் கொண்டு, நான்முகனார் செய்யும் நல்வேள்வியைப் பங்கம் செய்யப்பாரித்து, ஸஹ்யமலையினின்று கிளம்பி **வேகவதி** யென்னும் நதியாகப் பெருகி ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனள். அந்த நதியின் பெருக்கு வாசாமகோசரமாக இருந்தது. மிகவும் பயங்கரமான விசையுடனே பெருகி வருகின்ற அப்பெரு வெள்ளத்தைக் கண்ட யாகசாலையிலுள்ளாரனைவரும் திடுக்கிட்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் மிகவும் வியாகுலப்பட்டனர். 'ஸ்வாஹா ஸ்வாஹா' என்று சொல்லிக் கொண்டிருந்த வாசகங்கள் 'ஹா ஹா ஹா ஹா' என்று மாறிவிட்டன.

**[திருவெஃகணை, ஸ்ரீயதோக்தகாரியெம் பெருமான் ஆவிர்ப்பவித்தல்]**

வேள்வி காணவந்த சகல ஜனங்களும் வருந்தியேங்கி யஜமானனாகிய நான்முகனைத் தஞ்சமாக அடைந்து எம்மைக் காத்தருளவேணும்' எம்மைக் காத்தருளவேணும் என வேண்டிக் கொண்டவளவிலே, பிரமன் யோகத்ருஷ்டியினால் 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து, ஸ்ரீமந்நாராயணனது திருவருளாலேயே இப் பெருத்துயரம் தொலையவேணுமென்று துணிந்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம்பெலாம் கண்ண நீர்சோர அப்பெருமானைக் குறித்து வாயாரத் தோத்திரஞ் செய்தனன். அந்தத் தோத்திரத்தினால் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான், ஏற்கெனவே உபநிஷத்துக்கள் தன்னை ஸேதுவாக ஓதியிருப்பது பொருள் பெற்றதாம்படி, "**சதுமுகனார் வேள்விதனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கணையாக வந்துதித்தோய்**" என்றும், "**அணியாக வேகவதி அலையோடு கொண்**

டோடி ஆலிக்க அணையாக்கிடந்த களைதானே'' என்றும் பின்னுனர் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்தைத் தடை செய்யவல்ல அணையாக ஸயனித்துக் கொண்டருளினன். அந்தத் திருப்பள்ளித் திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்லமாட்டாமல் திகைத்து நின்றனள். மலர் மைந்தனும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் எம்பெருமானுடைய திருவருளை நோக்கி மிக வியந்து வாயார வாழ்த்தி வணங்கி நின்றனர். நதியுருவாக வந்த ஸரஸ்வதியும் அவ்வளவிலே தனது ஆர்ப்பாட்டங்களெல்லாம் அடங்கப் பெற்று எம்பெருமானுடைய நியமனத்தினுல் அந்தர்வாஹினியாய்ச் சென்று கடல் சேரலுற்ருள்.

யதோக்தகாரியென்று திருநாமம் பூண்ட அப்பெருமானது தென்புறமாகச் செல்லலுற்ற வேகவதியை வஸிஷ்டர் முதலிய முனிவர்கள் பிரமனது சொற்படி வந்து வணங்கி தாயே! ஸரஸ்வதியே! யாகசாலையில் இனியாகிலும் வந்து சேர்ந்து நாதரோடு கூடிக் களித்திருந்து இப் பெரு வேள்வியை நிறைவேற்றியருளவேணும்; எல்லா நதிகளிற்காட்டிலும் உன்றனுக்கே மிகச் சிறப்பு உள்ளதாக நான்முகக்கடவுள் அநுக்ரஹம் செய்கின்ருர்'' என்று சொல்லி வேண்டிக்கொள்ள, அவளும் மன மகிழ்ச்சியுடனே நதியில் நின்றும் விரைந்தெழுந்து நான்முகக் கடவுளோடு சேரலுற்ருள்.

## [வேள்வியில் ஹவிஸ்ஸு கிடைக்கப் பெருத தேவர்கள் வருந்துதல்]

அச்வமேத யாகத்திற்கு உண்டான இடையூறு எம்பெருமானது இன்னருளால் தொலைந்து ஸரஸ்வதியும் வந்துசேர்ந்து ஒருகுறையுமின்றி வேள்வி நடைபெறுவதாயிற்று. அக்னியில் ஆஹுதி செய்யப்பட்ட ஹவிஸ்ஸு முழுவதையும் நான்முகன் எம்பெருமானைச் சிந்தை செய்துகொண்டு அப்பெருமானுக்கே நேரில் ஸமர்ப்பித்தனன்; அதனுல் பல பல தேவதைகள் யாகசாலைக்கு நேரில் வந்திருந்தபோதிலும், ''ஸோமாய ஸ்வாஹா, வருணாய ஸ்வாஹா; இந்த்ராய ஸ்வாஹா, ஸூர்யாய ஸ்வாஹா'' என்றிப்படி அந்தந்த தேவதைகளை உத்தேச்யர்களாகக் கொண்டு ஹோமம் செய்யப்பட்டபோதிலும், ஒரு ஹவிஸ்ஸும் ஒரு தேவதைக்கும் கிடைக்காமற் போயிற்று. அங்ஙனம் கிடைக்காமற்போனதனுல் மிக்க வருத்தங் கொண்ட அத்தேவதைகள் நான்முகனை நோக்கித் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்து 'இப்படியும் எம்மை அவமானப்படுத்துவது தகுதியோ பிரம!' என்று முறையிட்டுக் கொண்டார்கள்.

## [தேவர்களுக்குப் பிரமன் தத்துவமுணர்த்தல்]

தத்தமக்கு ஹவிஸ்ஸு கிடைக்காமை பற்றி வருத்தங் காட்டி முறையிட்டுக்கொண்ட அமரர்களை நோக்கி அயன் இங்ஙனமுரைத்தனன்:—'தேவர்காள்! ஆயுள், ஆரோக்யம், மக்கள், செல்வம் முதலிய அற்ப பலன்களைக் குறித்து வேள்வி புரிகின்றவர்கள் யாவரோ, அவர்களே உங்களைக் குறித்து யஜிப்பவர்கள்; அன்னவர்களால் ஆஹுதி செய்யப்படும் ஹவிஸ்ஸுகளே உங்களுக்குக் கிடைக்கக் கிடைக்கக்கூடியவை; முமுக்ஷுக்களான பரமைகாந்திகளால் ஸ்ரீமந் நாராயணனே ஸாக்ஷாத்தாக யஜிக்கப்படுகிறபடியால், அன்னவர்களால் அர்ப்பணம் செய்யப்படும் ஹவிஸ்ஸுக்களை ஸாக்ஷாத் பரமபுருஷன் தானே ஸ்வீகரித்தருள்வான்; இப்போது அடியேன் முமுக்ஷுவாய்ப் புண்டரீகாக்ஷனையே ஸாக்ஷாத்கரிக்கவெண்ணி யாகஞ்செய்கிறேனென்பதை நீங்களனைவருமறிவீர்; இந்த வேள்வியில் ஹோமம் செய்யப்படும் அவியுணவுகளை அமரர் பெருமான்தானே ஸாக்ஷாத்தாக அங்கீகரித்தருள்கின்றமையால் நீங்கள் இவ்வுணவுகளைப் பெற ஆசைகொள்ள அவகாசமில்லை' என்று.

## [புண்யகோடி விமானம் தோன்றுதல்]

இங்ஙனம் பிரமன் உபதேசித்த தத்துவப் பொருளைச் செவியேற்று அமரர்கள் அஹங்காரம் ஒழிந்து சீற்றமும் தணியப் பெற்றனர். நிபுணரான வசிஷ்டர் வேள்விச் சடங்குகளைக் குறையொன்றுமின்றியே அடைவுபட நடைபெறுத்திப் போந்தனர். ப்ராப்தமான காலத்தில் வேள்விக் குதிரையின் வபையையெடுத்து அக்நியில் ஹோமம் செய்த அளவில், மங்கள வாத்தியங்கள் முழங்காநிற்க, வேதகோஷம் விம்மி வளராநிற்க, விண்ணுலகில் நின்றும் பூமாரி சொரியாநிற்கப் பரம பவித்திரமான புண்யகோடி விமானம் அக்நி மத்தியில் நின்றும் தோன்றியது.

(தொடரும்)

# திருஞான சம்பந்தர் அருளிய திருமுறை

[முதுபெரும் புலவர் திரு. **சிவஞானத் தம்பிரான் சுவாமிகள்**, திருவெண்காடு]

( முன் இதழ்த் தொடர்ச்சி )

"மனையறத்தின் இன்பம்உறு மகப்பெறுவான்
விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து
நீருக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந்
தவம்புரிந்தார் "

ஆதியருமறைவழக்கம் அருகியதற்குக் காரணம் பிரசமயம் பயின்றதே. அதன் காரியம் இரண்டனுள் ஒன்று பூதிசாதனவிளக்கம் அரனடியார்பால் போற்றல் பொருமை. அவ் விருகாரியத்தையும் போக்க முதலிற் செய்யற்பாலது பிரசமய நிராகரணம். அதைச்செய்யும் பொருட்டு ஒரு மகவை பெற நினைந்தருளினர் சிவபாதவிருதார். அம்மகப்போற்றிலும் மகடூடவை வேண்டாது ஆடூடவை வேண்டினர். அது காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிவித்தது. அது செய்யும் வன்மை அத்தக்காதலனாக இருத்தல் வேண்டும் அன்றோ? பரசமயம் நிராகரித்து நீருக்கும் காதலன் "என்றது அதற்கே 'புனைமணிப்பூண்'என்றது பிள்ளைப்பணியையும் குறிப்பதோடு, பரசமய நிராகரலாஜயாபரணத்யையும் குறிப்பதாகும்.

தந்தையார்க்கும் தாயார்க்கும் இக்கருத்தொருமை வாய்ந்தது. இருவரும் பெரியநாய்க்கியாருடன் புகலித்திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக் கீழ் வழிப்பட்டனர். கருத்து முடிந்திடப் பரவினர். அவ்வாறு பரவும் காதலியார் மணிவயிற்றில் 'உருத்தெரியவரும் பெரும் பேறு' உண்டாயிற்று. புவிவாழத்தவஞ் செய்யும் இயல்பு காதலனைப் பெறத்தவம் புரிவித்தது. அத்தவம் உலகுய்ய அப்பெரும்பேறு உளதாக்கிற்று. திருவருளைப் போற்றி மகிழ்ச்சியில் திளைத்தனர் இருவரும்.

"அலம் பெருக்கும் புல்லறிவின் அமண்
முதலாம் பரசமயப்
பவம் பெருக்கும் புரைநெறிகள்
பாழ்படநல் லூழிதொறும்
தவம் பெருக்குஞ் சண்பையிலே தாவில் சரா
சரங்களெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதா
ரஞ்செய்தார்."

அத்திருவவதாரப்பயன் அளவில்லாதன. அவற்றைச் சேக்கிழார் பெருமானார் வகுத்துரைத்த சுருக்கம் அவரவர் அறிவின் பெருக்கத்தால் விரித்துரைத் தகும் பெருமையுடையது. அவற்றைத் திருஞானசம்பந்த நாயனார் மூர்த்தி புராணத்தின் (21-26ஆம் திருவிருத்தங்களால்) உணரலாம். அவற்றுள் ஒன்றும் இங்குக் குறிக்கத்தக்க முக்கியம் வாய்ந்ததும் ஆவது யாது? பிரசமயத்தருக் பொழியச் சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கத் திருவவதாரஞ் செய்தார் என்பதேயாகும். 'வேதநெறி தழைதோங்க மிகுசைவத்துறை விளங்கவேண்டி இருக்குமறைவேந்தர் திருக்கமலவராய் திறந் தழுதார் என்றதும் ஈண்டு நினைக. 'வண்டமிழ் செய் தவம் நிரம்ப' (அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல' என்ற பெரிய புராணத் தொடர்ப் பொருள்களை அங்குணர்தல் வேண்டும் அவற்றை உணர்ந்தே மாதவச் **சிவஞான முனிவர்**, தமிழ் அடையைச் சிறப்பிற்கொண்டு,

"காழிமாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை
யேழிசைத்தமிழ் ஞானசம்பந்தன் எம்
அடியான்
யாழ நீ பெறவும் உரு இங்குவந்தனிப்பான்

ஆழியோய் அதுகாறும் இவ்வரைப்பினில் அமர்ந்து
ஈட்டருந்தவம் இயற்றுக என்றருளி" யதாக

இறைவன் திருவாக்காகக் முத்தமிழ் விரகர் பாடல்களால் பரஞ்சுடர் திருவுருப்பெற்றுன்' மாலோன் என்று அறிவிக்கும் இடத்தில் உளங் குளிர்ந்து வெளியிட்டருளினுர்.

ஆதியருமறை வழக்கம் அருகிய நிலை தீர்ந்து சைவமுதல் வைதிகமும் தழைத்தோங் கிப்பயிலவும், அரனடியவர்பால் பூதிசாதன விளக்கம் போற்றல் பெருதொழிந்ததுயர் தீர்ந்து, தொண்டர்மனம் களிசிறப்பித் தூய திருநின்று நெறி எண்டிசையும் தனிநடப்பவும் திருவவதாரஞ் செய்தார். மேதினிமேற்சமண் கையர் சாக்கியர்தம் பொய்மிகுத்தமை ஒழிந்து, அவம் பெருக்கும் புல்லறிவினமாண் முதலாம் பரசமயப் பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்படத் திருவவதாரஞ் செய்தார். இவற்ருல், **தந்தையார் பிரார்த்தனை நிறை வேறியது**. எதிர்கால நிகழ்ச்சியைத் துணிவு பற்றி இறந்தகாலத்திற்கொள்ளல் குற்றம் ஆகாது.

திருவவதாரம் புரிந்தபின்னர், திருக்கழு மலத்தோர் எல்லாரும் உறற மகிழ்ச்சி பெருக் கும் உவகைப்பேச்சும் அளவுட்படாதனவாகும். அவர் சிவனருள் எனப் பெருகும் சித்த மகிழ்ச்சி யுற்றனர். அது காழி வேந்தரது திருவரவுக் குரிய நிமித்தம் ஆயிற்று சோலைமுழுவதும் தென் ருலார் வருதுலவ மன்றலும் பரவிற்று. விண் ணவரும் மலர்மழை சொரிந்து, மண்ணத்தில் வந்து மாமறையவரோடு ஓமகாரியம் செய்தனர் எங்கும் மறைவொலி விளக்கம் உற்றது. மரம் செடி கொடி புட்கள் முதலியன தாவில் சரா சரங்கள் எல்லாம் சிவம் பெருகப் பெற்று உயர்ந் தன. குளம் முதலிய வற்றில் கலங்கிய நீரும் தெளிந்தது. தண்ணீராயிற்று. விசும்பும் அழுக்கு அகன்றது. எல்லாத்திசையும் மங்கல மாகப் புட்கள் ஒலித்தன. மங்கள வாத்தி யங்கள் வாசிப்பவர்இல்லாமலே தாமே இயம்பின.

சிவபாதவிருதயர் தம் திருமனையில், மகவு பிறர்தமைக்குச் செய்யும் அணிசெய்தார். சிந்தைக் களிப்புற்ருர். நெய்யணிவிழா வொடு திளைப்பாரானுர். மங்களகரமுழக்கம் பொங் கச்செய்தார். சாதகன்மம் புரிதற்குரிய பல சடங்குகளையும் செய்வாரானுர்.

சாதகன்மம் :— (1) அத்திரமந்திரத்தை அறைத்து நூறு முறை ஓமம் செய்து (2) வாம மந்திரத்தை வாய்மலர்ந்து குழந்தையின் திரு முகத்தை நோக்கி (3) பஞ்சப்பிரமமந்திரங் களைப் பகர்ந்து உச்சி மோந்து, (4) தற்புருட மந்திரத்தைச் சாற்றி வலச் செவியிற்புகுத்தல்.

மறைக் குலமடந்தையர் திருமாளிகை யைக் சுடர்மணிவிளக்குக்களால் அழகுறுத்தி னர். பொற்சுண்ணமும் மகரந்தப் பொடியும் வீசிக்கொண்டனர். மேடைகள் பாலிகை யோடுவிளங்கின. பொற்குடங்கள் புன்ணிய நீர்நிரம்பிப் பொரிந்தன. தானதருமங்கள் பொன் முதலிய பொருள்கள் விழாவில் சாலச் செய்யப்பட்டன. நம்பனடியவர்க்கு நல்லவழி விருத செல்வமெல்லாம் நழுவாது நண்ணிய புண்ணியம் பெருகிற்று. எங்கும் பூந்தோரணம் இலங்கின. வேப்பிலை செருகிடல் முதலிய காப்பு வினைகள் விளங்கின. பலவகைப் புகைப் பொருள்களாலும் புகைவளர்த்துத் தெய்வ மணம் வீசுந் தொழில்களைப் புரிந்தனர் அம்ம களிர் முதலோர். பத்துநாட்களிலும் மாமறை நூல் விதிப்படி (திருவருட்சிறப்புறும் படி) செய் யத்தக்கன எல்லாம் செய்து இன்புற்ருர்கள். திருப் பெயர் வைத்தல், பதினொன்ருவது நாளில் நிகழ்ந்தது.

"சேமவுதயப் பரிதியிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற் குழுவி யென்னத்

தூமணி நிறை த்தணிசெய் தொட்டில் அமர்வித்தார்" திருஞான சம்பந்தர் ஆகற் பொருட்டுப் பெருமலை பயந்த கொடி, பேணு முளையின் பாலை அருமறை யொடு குழைத்து அமுது செய்தருளப் பெறவளர்வாரை, அன்னை யார் பகவதியார் சிவனடிப்பத்தியையே தம் திருத்தனங்களினின்றும் சுரந்து அமுது செய்ய ஊட்டியருளினுர். உலகவழக்கிற்கு வேருகத் திருநீற்றுக்காப்பையே குழத்தையின் திருநெற் றியில் நிறுத்தி நிறைவித்தார். மற்றைக்காப்புக் கள்அத்திருக்குமாரர்க்கு மிகை என்னும் நினைவு எல்லார்க்கும் தோன்றுமோ ? 'பகவதியார்' 'மறைவியார்' அல்லரோ ?

இதன்பின், ஆசிரியர் சேக்கிழார் பெருமானார் ஒரு பிள்ளைத் தமிழும் உண்மைப் பிள்ளைத் தமிழே எனப் பாடியருளினார்.

குழந்தை தளர் நடையிட்டது. ஓராண்டாயிற்று. நடந்து விளையாடத் தொடங்கிற்று. கொழும் பொடி ஆடிய கோல வீதியில், பேரொளி வீசி வந்து சிற்றில் சிதைக்தல் முதலிய இளமைச் செயல்கள் ஆற்றியது. தோணியப்பர் திருவருட்பேற்றுக் குரிய தவத்தின் முளைபோல வளர்ந்தது. மூவாண்டு நிகழ்தலின் அருமறையும் வருமுலகும் உய்யலாயின.

சேவாண்ட கொடிய வர்க்குச் சிறுவர் ஆகிய காழிவேந்தர்க்கு மூவாண்டில், நாவாண்டபல கலையும் நாமகளும் நலம் சிறப்பப், பூவாண்ட திருமகளும் புண்ணியமும் திருவேய்த ஒன்று நிகழ்ந்தது. அதுதான் இவர் புராணத்தின் தலைச் செய்யுலில் அறிவிக்க நின்ற இன்பச் செய்கை.

"குறக்குமா சொலப்படாய் துருத்தியாய்
திருந்தடி
மறக்குமாறிலாத என்னை மையல் செய்திம்
பண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு
விட்டு
இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்கு இன்றது
என்னையே"

என்று திருத்துருத்தியில் ஏகி அங்கு வீற்றிருந்தருளும் சொன்னவாறறிவாரைத் துணையடி தொழுது பாடியருளிய திருப்பாடலை உளத்திற் கொண்டு, சேக்கிழார் பெருமானார்,

"பண்டுதிருவடி மறவாப் பான்மையோர்
தமைப்பரமர்
மண்டுதவ மறைக் குலக்தோற் வழிபாட்டின்
அளித்தருளத்
தொண்டின் நிலை தரவருவார் தொடர்ந்த பிரிவு
பிரிவு ணர்வொருகால்
கொண்டெழலும் வெருக் கொண்டாற்போல்
அழுவர்குறிப்பயலாய் "

என்று பாடியருளினார். (1) இவ்வகையும் (2) தந்தையார் நீராடச் செல்லுங்கால் பின் தொடர்ந்து சென்றழுத அழுகையும், அவர் திருக்குளத்து நீராடியவேளையில் அவரைக் காணாதவராய், முன்னுணர்வு மூளத்தொடங்கிய அழுகையும் ஆக மும் முறையழுகையும் (1) வேத நெறிதழைத் தோங்கல் (2) மிகுசைவத் துறை விளங்கல் (3) பூதபரம்பரை பொலிதல் ஆகியமூன்றற்கும் காரணமான உண்மை ஆதலைப் புனிதவாய் மலர்ந்தமுதலாக ஓதப்பட்டது.

## செய்தி

நாளது 19-4-1963 வெள்ளி அன்று காஞ்சிபுரம் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானம் மூலஸ்தானத்தில் சுமார் 400 ரூ. எடையில் வெள்ளியினால் செய்யப்பட்ட தூங்காவிளக்குகள் இரண்டு சென்னை மாநில அறநிலைய ஆணையர் உயர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.எ பி.எல். அவர்கள் முன்னிலையில் ஸ்ரீமதி, எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களால் திருவிளக்குகள் சன்னதியில் ஏற்றப்பட்டு விழா துவக்கப்பெற்றது. அன்று ஸ்ரீ மூலவருக்கு விசேஷ திருமஞ்சனமும், புஷ்ப அலங்காரமும் செய்யப்பெற்று விழா சிறந்த முறையில் நடைபெற்றது. ஷ விளக்குகளில் ஒன்று, சென்னை வரதராஜுலு செட்டி ஸ்தாபனத்தின் உரிமையாளரும் பிரபல வர்த்தகருமான உயர்திரு. சி. வரதராஜுலு செட்டியார் அவர்களாலும் மற்றைய ஒன்று சென்னை ஸ்ரீ வி. நாராயண செட்டி தர்மஸ் தாபனத்தின் தர்மகர்த்தர்கள் திரு. வி. ரங்கநாயகலு செட்டியார் அவர்களாலும் ஸ்ரீ வி. ராமச்சந்தரன் அவர்களாலும் அளிக்கப் பெற்றன. அவ்விளக்குகள் நிரந்தரமாக சன்னதியில் எரிவதற்கு சாசுவதமாக நிதிகள் வைத்து அதன் வட்டி மூலம் நடக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

விழாத்துடக்கத்தில் ஆணையர் அவர்கள் ஷ தேவஸ்தான அதிகாரிகளால் பூர்ணகும்பத்துடன் வரவேற்கப்பட்டார். ஸ்ரீ மூலவர் முன்பு திருப்பாவாடையும் உபயக்காரர் கபிரால் அன்றயதினம் போடப்பெற்றது. ஏராளமான அன்பர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சேக்கிழாரும் முருகனும்

**திருக் காளத்தி மலை :**

குன்றத்தூர்க் குன்றின்மீது ஏறி, அங்குள்ள முருகப் பெருமானைத் தம் இளமைப் பருவத்திற் பலகால் வழிபட்டுப் பெற்ற இனிய அனுபவமே, கண்ணப்பர் திருக்காளத்தி மலை மீது ஏறி அங்குள்ள குடுமித் தேவரை வழிபட்ட திறம்பற்றிப் பாடச் சேக்கிழார் பெருமானுக்குப் பெரிதும் துணை புரிந்தது எனலாம்.

போவதொன் றுளது போலும்!
ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும், வேறோர்
விருப்புற விரையா நிற்கும்!''

நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்



சேக்கிழார் கோயில்

“காணநீ போதின், நல்ல
காட்சியே காணும்! இதந்ச்
சேணுயர் திருக்கா ளத்தி
மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர். கும்பிடலாம்''

“ஆவதென்? இதனைக் கண்டிங்கு
அணைதொறும், என்மேற் பாரம்

பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ-பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்

“மாகமார் திருக்கா ளத்தி
மலைஎழு கொழுந்தாயுள்ள

ஏகநா யகரைக் கண்டார் !
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல,
மிக்கதோர் விரைவி னேடும்
மோகமாய் ஓடிச் சென்ருர் !
தழுவினர் மோந்து நின்ருர் ''

பெரிய புராணத்தின் கண் வரும் இ சிறந்த திருப்பாடல்கள், கண்ணப்பரின் வரலாற்றையும் அநுபவத்தையும் விளக்குவது மட்டுமேயன்றி, ஒரு வகையில் நம் அருமைச் சேக்கிழார் பெருமானின் அநுபவத்தையும்கூட வெளிப்படுத்துகின்றன எனக் கொள்ளலாம்.

மேலும், தம் இளமைப் பருவத்தில் குன்றத்தூர்க் குன்றிற் கோயில் கொண்டுள்ள முருகனை வழிபட்டு மகிழ்ந்ததன் விளைவாகவே, தாம் பாடத் தலைப்பட்ட திருத்தொண்டர் புராணத்திற்கு முருகனேடு நேரே பெரிதும் தொடர்பு இல்லையாயினும், ஆங்காங்கே ஏற்ற பெற்றி உரிய தொடர்புகளை வருவித்துக் கொண்டு, சேக்கிழார் சுவாமிகள் முருகப் பெருமானைப் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு செல்லுகின்ருர் எனலாம். அங்ஙனம் முருகனைப் பற்றிப் பெரிய புராணத்துள் வரும் குறிப்புக்கள், பின் வருவன :

## முன்னே வந்து எதிர் தோன்றும் முருகன்:

1. முருகன் அழகுக் கடவுள். முருகு என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். முருகன் அழகுத் தெய்வம் என்பதனை,

ஆயிர கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் ருக
மேயின எனினும், செவ்வேள்
விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்ருது
என்றிடின், அனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார் ?

எனக் கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்தபுராணத்துட் சூரபதுமன் கூற்ருக வைத்து விளக்கி கூறியிருத்தல் கொண்டு உணரலாம். எனவே, முருகனை நினைவு கூர்வோர் எவரும், முதற்கண் அவன் அழகுத் தெய்வம் ஆதலையே நினைவு கூர்ந்து இன்புறுவர். ஆதலின் சேக்கிழார் சுவாமிகளும், முருகப் பெருமான் அழகுக்கு முதன்மையுடைய னுதலையே சிறந்தெடுத்து முதற்கண் மொழிந்தருளுகின்ருர்.

(தொடரும்)

---


## செய்திகள்

1. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பாடலீஸ்வர ஸ்வாமி ஆலய சார்பில் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் கரையேற விட்ட ஐதீக உற்சவம் 12-4-63-ல் சிறப்பாக நடத்தப்பட்டது. அன்று மாலை கடலூர் 2-வது அடிஷனல் சப்ஜட்ஜ் திரு. சி. பாலசுப்ரமணியம் பி.எ.பி.எல், அவர்கள் தலைமையில் அண்ணுமலை பல்கலைக்கழக தமிழ் விரவுரையாளர் திரு. உலகஊழியனுர் அவர்களும் திருமயிலை திருமதி காஞ்சனமாலை அம்மையார் அவர்களும் முறையே "நாவுக்கரசரின் நற்றமிழ்" என்பது பற்றியும் "மன்னு தபோதனியார்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

2. "சென்னை பூங்காநகர், ஸ்ரீ கந்த சுவமி கோயில் வசந்த மண்டபம் பங்களாவில், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான வசந்தோற்சவம் நாளது 28-5-63 செவ்வாய்கிழமை முதற்கொண்டு 15-6-63 சனிக்கிழமை வரையில் நடைபெறும். அதுசமயம் தினம் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையில், ஸ்ரீரங்கம் எம்பார் விஜயராகவாச்சாரியார் அவர்களால் ஸ்ரீ மத் 'ராமாயணம்' பிரபாவம் வெகு விமரிசையாகத் தொடர்ந்து (19) பத்தொன்பது நாட்கள் நடைபெறும்".


---

**மதுரை :** ஸ்ரீ வீரராகவபெருமாள் கோவிலில் பிரம்மோற்சவம்
**திருச்செங்காட்டங்குடி :** ஸ்ரீ உத்திராபதீஸ்வரர்சுவாமி கோவிலில் பிரம்மோர்சவம்
**திண்டுக்கல் :** ஸ்ரீ காளத்தீஸ்வரர் கோவிலில் சித்திரை பிரம்மோர்சவம்
**ஆரணி :** ஸ்ரீ சம்பங்கி பிச்சாண்டீஸ்வரசுவாமி கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம்
**இராஜேந்திரம் :** ஸ்ரீ மத்யார்ஜுனேஸ்வரர் கோவிலில் மகா கும்பாபிஷேகம்




அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் B.A., B.L. அவர்கள் கோவைப் பேரூர்க் கோயிலுக்கு வருகை தந்தபோது, திரு. C.R. சதாசிவ முதலியார், திரு. இராமசாமி அடிகள் திரு. G. R. கோவிந்தராஜுலு நாயுடு, திரு. A. வெங்கடேசன், I.A.S., திரு. S. A. K. சின்னதம்பி செட்டியார் முதலிய பல பெருமக்களால் வரவேற்கப் பெறுதல்.





குன்றத்தூர்த் திருமலை முருகன் கோயில் தோற்றம்



Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at The United Printers, Madras-1.